# சமூக அறிவியல் I

## பகுதி - 2

## வகுப்பு X

**Social Science I**
**Part 2**
**STD X**
**Tamil Medium**

கேரள அரசு
பொதுக்கல்வித்துறை

தயாரிப்பு
மாநிலக் கல்வியாராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (SCERT), கேரளம்

2025

## தேசிய கீதம்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப சிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தவ சுப நாமே ஜாகே
தவ சுப ஆசிச மாகே
காகே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
ஜய ஹே! ஜய ஹே! ஜய ஹே!
ஜய ஜய ஜய ஜய ஹே!

## உறுதிமொழி

இந்தியா எனது நாடு. இந்தியர் அனைவரும் எனது உடன்பிறந்தோர்.

எனது நாட்டை நான் உயிரினும் மேலாக மதிக்கிறேன். அதன் வளம் வாய்ந்த பல்வகைப் பரம்பரைப் புகழில் நான் பெருமைகொள்கிறேன். அதற்குத்தக நான் என்றும் நடந்துகொள்வேன்.

என் பெற்றோர், ஆசிரியர், மூத்தோர் இவர்களை நான் நன்கு மதிப்பேன்.

எல்லாருடனும் நான் பண்புடன் பழகுவேன். எனது நாட்டினிடமும் நாட்டு மக்களிடமும் பக்தியுடன் இருப்பேன் என உறுதி கூறுகிறேன். அவர்களின் நலத்திலும் வளத்திலும் எனது இன்பமும் அடங்கியிருக்கிறது.

**சமூக அறிவியல் I**

**10**

**State Council of Educational Research and Training (SCERT)**
Poojappura, Thiruvananthapuram 695012, Kerala
Website : www.scertkerala.gov.in
e-mail : scertkerala@gmail.com, Phone : 0471 - 2341883,
Typesetting and Layout : SCERT
First Edition : 2025
*Printed at* : KBPS, Kakkanad, Kochi-30
© Department of General Education, Government of Kerala

அன்பார்ந்த மாணவர்களே!

சமூகத்தில் பல்வேறு நிலைகளில் நடத்திய விவாதங்களின் வழியாக மெருகேறிய கண்ணோட்டங்களை அடிப்படையாகக் கொண்டு பத்தாம் வகுப்புக்கு புதிய சமூக அறிவியல் பாடப்புத்தகம் இரண்டு பகுதிகளாக உங்களின் கரங்களில் தரப்படுகிறது. சமூக அறிவியலில் முக்கிய கற்றல் பகுதிகளான வரலாறு, அரசியல் அறிவியல், சமூகவியல் என்பவற்றுடன் தொடர்புடைய பாடப் பகுதிகள் இப்புத்தகத்தில் உட்படுத்தப்பட்டுள்ளன. இன்றைய உலகை சரியாகப் புரிந்து கொள்ளவும் உற்று நோக்கவும் அதன் வழியாக நாளைய உலகை உருவாக்கவும் நேற்றைய உலகைப் பற்றிய அறிவு முக்கியமானதல்லவா? நவீன உலகின் உருவாக்கத்தில் முக்கிய பங்கு வகித்த மறுமலர்ச்சி காலத்தில் பல்வேறு துறைகளில் ஏற்பட்ட மாற்றங்களை இப்பாடப் புத்தகத்தில் முதல் அலகில் விவாதிக்கிறோம். சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் எனும் முத்திரை வாக்கியத்தை உலகிற்கு அளித்த பிரெஞ்சு புரட்சியைப் பற்றியும் பல்வேறு காலகட்டங்களில் பொருளாதாரத் துறையில் ஏற்பட்ட மாற்றங்கள், அதன் விளைவுகள் என்பவற்றைப் பற்றி தொடர்ந்துள்ள அலகுகளில் விவாதிக்கப்படுகிறது. அடுத்த பாடத்தில் நவீன உலகுக்குச் சாட்சி அளித்த மிகப்பெரிய பொதுமக்கள் போராட்டங்களில் ஒன்றான இந்திய சுதந்திர போராட்டத்தையும் அதில் நமது தேசத்தந்தையான மகாத்மா காந்தியடிகளின் பங்கினைப் பற்றி தெளிவாக விளக்கப்படுகிறது. இந்திய சுதந்திரத்துக்குப் பிறகு நாம் எதிர்கொண்ட சவால்களையும் அவற்றை வெற்றிகொண்டு நாம் புரிந்த சாதனைகளைப் பற்றியும் இப்பகுதியில் விவாதிக்கப்படுகிறது.

சமூக அறிவியலின் கற்றல் பகுதியில் புதிய துறைகளில் ஒன்றான சமூகவியல் சமூக பிரச்சினைகளைச் சாதாரண விழிப்புணர்வுக்கும் மேலாக சமூக அறிவியல் பார்வையுடன் அணுகும் திறன் உங்களில் வளர்க்க வேண்டும் என்ற இலக்குடன் தரப்பட்டுள்ளது. இந்திய சமூக அமைப்பை விளக்கமாக விவாதம் செய்ய சமூக இயல் இன்னொரு பாடப் பகுதியாக உள்ளது.

சுதந்திரத்திற்குப் பின்னர் இந்திய அரசியல் அரங்கில் ஏற்பட்ட மாற்றங்களையும் நாட்டின் பல்வேறு பகுதிகளில் ஏற்பட்ட மக்கள் போராட்டங்களையும் விவாதிக்கும் பாடப்பகுதிகள் இதில் சேர்க்கப்பட்டுள்ளன.

சமூக விலங்கு என்ற நிலையில் பல்வேறு செயல்பாடுகளில் சிறப்பாக ஈடுபடவும் மக்களாட்சி விழிப்புணர்வுடன் மனித நேய மதிப்பீடுகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து சமூகத்தின் சக்திவாய்ந்த தூண்களாக நீங்கள் உருவெடுக்க இப்பாடப்புத்தகம் உங்களுக்கு ஒரு கலங்கரை விளக்காகும் என்று எதிர் பார்க்கிறேன்.

அறிஞர் சமூகத்தின் ஒரு பகுதியாக நீங்கள் ஒவ்வொருவரும் வளர வேண்டும் என வாழ்த்துகிறேன்.

**முனைவர். ஜெயப்பிரகாஷ் ஆர்.கெ,**
இயக்குநர்,
எஸ்.ஸி.இ.ஆர்.டி. கேரளம்

# TEXTBOOK DEVELEPMENT TEAM

## Adviser

**Dr. K. N. Ganesh**
Chairman, Kerala Council for Historical Research

## Chairperson

**Dr. Sivadasan P.**
Senior Professor, Department of History
University of Calicut

## Experts

**Dr. K. K. Radha**
Principal (Rtd.)
Govt. College for Women
Thiruvananthapuram

**Dr. P. P. Abdul Razak**
Professor & Head (Rtd.)
Department of History
P.S.M.O. College, Tirurangadi

**Dr. Antony Palakkal**
Professor (Rtd.),
Department of Sociology,
University of Kerala

**Dr. P. Mohandas**
Associate Professor (Rtd.)
Department of History
K.M.M. Govt.Womens College, Kaannur

**Dr. Pradeep Kumar K.**
Associate Professor & Head (Rtd.)
Department of Political Science
Govt. College, Attingal, Thiruvananthapuram

## Members

**Yusuf Kumar S. M.,** Principal, G.H.S.S Chithara, Kollam.
**Haripradeep S.,** HS.T. (Rtd), S.V.H.S., Pulladu, Pathanamthitta
**Dr. Anjana V.R. Chandran,** Research Officer, SCERT, Kerala
**Dr. Ajith R. Pillai,** Principal, D.B.H.S.S., Parumala, Pathanamthitta
**Aju S.,** H.S.S.T., History, G.M.G.H.S.S., Pattam, Thiruvananthapuram
**Jayakrishnan O.K.,** H.S.S.T., K.P.C.H.S.S. Pattanur, Kannur
**Pradeepan T.,** H.S.S.T. History, G.H.S.S.S, Palayad, Kannur
**Margarat Lini V.P.,** H.S.T. Social Science, Govt V & H.S.S. Vellanad, Thiruvananthapuram
**Vishwambharan N.,** H.S.S.T. (Rtd.), Boys Higher Secondary School, Karunagappally, Kollam
**Sreejith M. Muthadath,** H.S.T. Social Science, C.N.N. G.H.S. Cherpu, Thrissur
**Anas N.S.,** Research Student, University of Kerala

## Tamil Translation

### Experts

**Dr. S. Rajendran**
Associate Professor in Tamil (Rtd.),
University College, Thiruvananthapuram.

**Dr. K. Jayakrishnan**
Professor, Dept. of Tamil,
University of Kerala, Kariavattom

### Members

**Vijaya A**, Headmistress, GHS Pambanar.
**Geetha A**, HST Social Science, GHS Pambanar.
**Jasmine J**, HST Social Science, Govt. Tamil VHSS, Chalai, Thiruvananthapuram.
**Ramar P**, GVHSS & TTI Kumily.
**Justin Raj D**, PHSS Vandiperiyar.
**Mary Stella Rosaline K**, Rtd. HST, GGHSS, Karamana.
**Nirmala Princy Bell J**, Rtd. HST, GHSS Chalai, Thiruvananthapuram.

## Academic Coordinator

**Jagadeesh K.T.**
Research Officer, SCERT, Kerala

மாநிலக் கல்வியாராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (SCERT)
வித்தியாபவன், பூஜப்புரை, திருவனந்தபுரம், 695 012

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| 6 | சுதந்திரத்திற்கான மக்கள் எழுச்சி | 111-130 |
| 7 | சுதந்திர இந்தியாவின் தற்காலம் | 131-154 |
| 8 | ஜனநாயகம் ஓர் இந்தியனின் அனுபவம் | 155-180 |
| 9 | இந்திய சமூக அமைப்பை அறிதல் | 181-202 |


இப்பாடப் புத்தகத்தில் கற்றலை எளிமையாக்குவதற்கு சில அடையாளங்கள் பயன்படுத்தப் பட்டுள்ளன.



கூடுதல் வாசிப்பிற்கு – மதிப்பீடு செய்வதற்கு உட்பட்டதல்ல



கற்றல் செயல்பாடு



தொடர் செயல்பாடுகள்

# இந்திய அரசமைப்பு

## முகப்புரை

இந்திய மக்களாகிய நாம். இந்திய நாட்டினை இறையாண்மையும் சமநலச்சமுதாயமும் சமயச்சார்பின்மையும் மக்களாட்சிமுறையும் அமைந்ததொரு குடியரசாக நிறுவவும்.

அதன் குடிமக்கள் அனைவரும்

சமுதாய, பொருளியல், அரசியல் நீதி,
எண்ணம், அதன் வெளியீடு, கோட்பாடு,
சமயநம்பிக்கை, வழிபாடு இவற்றில் தன்னுரிமை,

சமுதாயப்படிநிலை, வாய்ப்புநலம் இவற்றில் சமன்மை
ஆகியவற்றை எய்திடச் செய்யவும்.

அவர்கள் அனைவரிடையேயும்
தனிமனிதனின் மாண்பு, நாட்டுமக்களின் ஒற்றுமை,
ஒருமைப்பாடு இவற்றை உறுதிப்படுத்தும்
உடன்பிறப்புரிமையினை வளர்க்கவும்

உள்ளார்ந்த உறுதியுடையராய்,

நம்முடைய அரசமைப்புப் பேரவையில், 1949 நவம்பர் இருபத்தாறாம் நாளாகிய இன்று, ஈங்கிதனால், இந்த அரசமைப்பினை ஏற்று, இயற்றி, நமக்கு நாமே வழங்கிக்கொள்கிறோம்.

# 6

# சுதந்திரத்திற்கான மக்கள் எழுச்சி

## பிரபலமான விசாரணை

*அரசு சர்க்யூட் ஹவுஸ், அகமதாபாத், மார்ச் 18, 1922 செஷன்ஸ் ஜட்ஜ் ஜஸ்டிஸ் சி.என். புரூம் ஃபீல்டின் முன்னிலையில்.*

*வழக்கறிஞர் சர்.ஜெ.டி.ஸ்ட்ரோங்மேன், அட்வகேட் ஜெனரல், பம்பாய்*



குற்றவாளிக்கு கூற வேண்டிய தகவல்களைக் கேட்டபின் நீதிபதி புரூம் ஃபீல்டு குற்றவாளியை வணங்கினார், தொடர்ந்து தமது தீர்ப்பை அறிவித்தார்.

ஒருவேளை 'இந்த நாட்டில் ஒரு நீதிபதி எதிர்கொள்ள வேண்டிய மிகக் கடினமான செயல் இந்த வழக்கில் நியாயமான தீர்ப்பு வழங்குதல் என்பதாகும். தனி நபர்களைப் பார்த்து தீர்ப்பு வழங்குவது சட்டத்தின் கடமை அல்லவா? நான் இதுவரை விசாரணை செய்ததும் எதிர்காலத்தில் விசாரணை செய்யக்கூடிய நபர்களைவிட நீங்கள் மிகவும் வேறுபட்டவர் என்பதை நான் புறக்கணிக்க முடியாது. மில்லியன் கணக்கான இந்தியர்களின் பார்வையில் நீங்கள் ஒரு சிறந்த நாட்டுப்பற்றுடைய தலைவர் என்பதை நான் மறுக்கவில்லை'. அரசியல் பிரச்சனைகளில் உங்களோடு உடன்படாதவர்கள் கூட உங்களைப் பார்ப்பது உயர்ந்த கொள்கைகளைக் கடைபிடித்து உன்னதமானதும் புனிதமானதுமான வாழ்க்கை வாழ்கிற ஒரு மனிதராகத்தான். அவருக்கு ஆறு ஆண்டுகள் சிறைத் தண்டனையை விதித்த பின் நீதிபதி மேலும் தொடர்ந்தார், 'அரசாங்கம் தண்டனையைக் குறைத்தால் என்னை விட மகிழ்ச்சியாக எவரும் இருக்க மாட்டார்கள்.'

*Source:* Louis Fischer, *The Life of Mahatma Gandhi*

### தென் ஆப்பிரிக்கா என்ற அரசியல் களம்

காந்திஜி என்ற அரசியல் தலைவரை உருவாக்கியது தென்னாப்பிரிக்கா ஆகும். காந்திஜி 20 ஆண்டு காலம் தென்னாப்பிரிக்காவில் செலவழித்தார். குஜராத்திலிருந்து குடியேறிய தாதா அப்துல்லா ஜாவேரி என்ற வணிகனின் சட்ட உதவியாளராகத் தான் காந்திஜி அங்கு சென்றார். அதேவேளையில் தென் ஆப்பிரிக்காவில், வெள்ளையர்களால் ஆசியாவைச் சார்ந்தவர்களும், கறுப்பின மக்களும் எதிர்கொண்ட இன வேற்றுமைக்கு எதிராக காந்தியடிகள் போராட்டத்தை நடத்தினார். தென் ஆப்பிரிக்காவில் வைத்து காந்திஜி தன்னுடைய அகிம்சை என்ற சத்தியாகிரகப் போராட்ட முறைக்கு வடிவம் கொடுத்தார். காந்திஜியைப் பொறுத்தமட்டில், உண்மையான போராட்டத்திற்கான பயிற்சிக்களம் தென்னாப்பிரிக்காவாக இருந்தது. அவர் 1915 இல் இந்தியா திரும்பினார்.

நியாயமான தீர்ப்பை வழங்குவது மிகக் கடினமானது என நீதிபதி குறிப்பிட்ட வழக்கில் தனித்துவமான தேச பக்தி கொண்ட குற்றவாளி நமது தேசத் தந்தை மகாத்மா காந்தி ஆவார். இந்திய சுதந்திரப் போராட்டத்தை ஒரு மக்கள் இயக்கமாக மாற்றியவர் அவர்தான். 1919 முதல் காந்திஜியின் தலைமையில் எழுச்சியடைந்த இந்திய சுதந்திரப் போராட்ட இயக்கத்தின் சில முக்கியமான நிகழ்வுகள் தான் இந்தப் பாடப் பகுதியில் விவாதிக்கப்படுகிறது.

இந்திய தேசியக் காங்கிரஸின் உருவாக்கமும் அதன் ஆரம்பக் கால போராட்டங்கள் குறித்து நீங்கள் முந்தைய வகுப்பில் அறிமுகமானீர்கள் அல்லவா? காந்திஜி சுதந்திரப் போராட்டத் தலைவரான பின் விவசாயிகள், தொழிலாளர்கள், பெண்கள், மாணவர்கள் போன்ற சமூகத்தின் பல்வேறு பிரிவினர் போராட்டத்தில் தீவிரமாக ஈடுபட்டனர். சமூகத்தின் பல்வேறு பிரிவினர்களை ஒன்றிணைப்பதன் வாயிலாக மட்டுமே ஆங்கிலேய அரசாங்கத்தை எதிர்த்துப் போராட இயலும் என்ற உண்மையைக் காந்திஜி அறிந்திருந்தார். அனைவரையும் ஒரே குடையின் கீழ் அணி திரட்டி அவர்களில் ஒருவராக மாற அவரால் முடிந்தது.

இந்திய சுதந்திரப் போராட்டத்தில் காந்திஜியின் தலைமை ஏற்படுத்திய மாற்றத்தைக் குறித்து விவாதித்து குறிப்பு தயார் செய்யவும்.

## சம்பாரன் முதல் கேடா வரை

தென் ஆப்பிரிக்காவில் இருந்து இந்தியா திரும்பி வந்த காந்திஜி வட்டாரப் போராட்டங்களில் முதலில் கவனம் செலுத்தினார். 1917 ஆம் ஆண்டு பீகாரின் சம்பாரன் மாவட்டத்தில் உள்ள நீலம் விவசாயிகளின் பிரச்சினைகளில் அவர் ஈடுபட்டார். சம்பாரனைப் பூர்வீகமாகக் கொண்ட ராஜ்குமார் சுக்லாவின் தூண்டுதலினால் அவர் அங்கு வந்தார். ஐரோப்பிய தோட்ட உரிமையாளர்களால் நீலம் விவசாயிகள் சுரண்டப்பட்டனர். காந்திஜியின் தலையீட்டைத் தொடர்ந்து விவசாயிகளின் பிரச்சனைகளை ஆய்வு செய்ய பிரிட்டிஷ் அரசாங்கம் அவரை உள்ளடக்கிய ஓர் ஆணையத்தை நியமித்தது. இதன் விளைவாக, விவசாயிகளின் பிரச்சினைகளுக்கு ஓரளவு தீர்வு காணப்பட்டது.

1918 ஆம் ஆண்டு குஜராத்தில் உள்ள அகமதாபாத் துணிமில் தொழிலாளர்களின் போராட்டத்தில் காந்திஜி பங்கேற்றார். இந்தப் போராட்டம் ஊதிய உயர்வுக்கு வேண்டி நடைபெற்றது. காந்திஜி உண்ணாவிரதத்தை ஆரம்பிக்கவும், அதைத் தொடர்ந்து தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வு கிடைக்கவும் செய்தது.

1918 ஆம் ஆண்டு குஜராத்தில் உள்ள கேடாவில் விவசாயிகளுக்காக காந்திஜி ஒரு போராட்டத்தை நடத்தினார். இயற்கைப் பேரழிவினால் பயிர்கள் அழிந்து போன கேடாவின் விவசாயிகளால் வரி செலுத்த இயலவில்லை. விவசாயிகள் வரிச்சலுகை கோரி போராட்டத்தை நடத்தினர். காந்திஜி கிராமங்கள் தோறும் பயணம் செய்து விவசாயிகளுக்கு ஊக்கமளித்தார். விரைவில், பயிர் இழப்பை சந்தித்த விவசாயிகளுக்கு வரிச்சலுகை வழங்க அரசாங்கம் ஒப்புக்கொண்டது.

இந்த மூன்று போராட்டங்களின் வாயிலாக காந்திஜி என்ற ஒரு புதிய தேசியத் தலைவரின் உதயத்திற்கு இந்தியா சாட்சியானது. இந்தப் போராட்டங்களின் வாயிலாக அரசியல் நிலைப்பாடும் அஹிம்சையில் ஊன்றிய சத்யாகிரக போராட்ட முறையும் இந்தியர்களுக்கு அறிமுகமானது.

அட்டவணையை நிரப்புக

| ............................................ | சம்பாரன் | ............................................ |
|---|---|---|
| 1918 | ............................................ | துணிமில் தொழிலாளர்களின் ஊதிய உயர்வுக்கு வேண்டி |
| ............................................ | கேடா | ............................................ |

இந்தியாவில் காந்திஜி பங்கேற்ற ஆரம்பக்கால போராட்டங்களின் பொதுவான சிறப்பம்சங்களைக் கண்டறிந்து ஒரு விளக்கப் படத்தை தயாரிக்கவும். போராட்டத்துடன் தொடர்புடைய இடங்களை இந்திய வரைபடத்தில் குறித்து அவற்றை விளக்கப் படத்தில் சேர்க்கவும்.

## முதல் உலகப்போரும் இந்தியாவும்

1914 முதல் 1918 வரை நடைபெற்ற முதல் உலகப்போரைக் குறித்து நாம் முந்தைய பாடத்தில் விவாதித்தோம் அல்லவா?

முதல் உலகப்போர் இந்தியாவில் பெரும் பொருளாதார விளைவுகளை ஏற்படுத்தியது.

- போரின் பெயரால் மக்கள் மீது அதிக வரி விதிக்கப்பட்டது.
- இராணுவ வீரர்களின் தேவைக்காக பெருமளவில் தானியங்கள் ஏற்றுமதி செய்யப்பட்டதால் உணவுப் பற்றாக்குறை ஏற்பட்டது.
- அக்காலத்தில் ஏற்பட்ட பயிர்களின் அழிவும் தொற்று நோய்களும் நிலைமையை இன்னும் மோசமாக்கியது. ஏராளமான மக்கள் பஞ்சத்தால் இறந்தனர்.

இந்தச் சூழ்நிலையில் தான் காந்திஜி இந்திய சுதந்திரப் போராட்டத்தின் தலைமைப் பொறுப்பேற்றார்.

## அடக்கு முறைக்கு எதிரான போராட்டம்

முதல் உலகப் போருக்குப் பின் வலுவடைந்த இந்திய சுதந்திரப் போராட்டத்தை அடக்குவதற்காக பிரிட்டிஷ் அரசாங்கம் சில நடவடிக்கைகள் எடுத்தது. இதன் ஒரு பகுதியாக 1919 இல் ரௌலட் சட்டம் கொண்டுவரப்பட்டது. இந்தச் சட்டத்தின் படி,

- கைது ஆணை (Warrant) இல்லாமல் எந்த நபரையும் கைது செய்யலாம்.
- விசாரணை இன்றி எந்த நபரையும் சிறையில் அடைக்கலாம்.

குடியுரிமைகளைத் தடைசெய்யும் இந்தச் சட்டத்திற்கு எதிராக காந்திஜி, 1919 ஏப்ரல் 6 இல் ஒரு தேசிய வேலைநிறுத்தத்திற்கு அழைப்பு விடுத்தார். இதைப் பரப்புவதற்காக 'சத்தியாக்கிரக சபை' உருவாக்கப்பட்டது. வேலைநிறுத்தத்தில் அதிகமான மக்கள் பங்கேற்றனர். இந்த தேசிய வேலைநிறுத்தத்தை 'மிகவும் அற்புதமான காட்சி' என்று காந்திஜி குறிப்பிட்டார்.

ரௌலட் சட்டத்திற்கு எதிரான போராட்டம் பஞ்சாப் மற்றும் லாகூரில் மிகவும் வலுவாக காணப்பட்டது. பஞ்சாபின் மக்கள் தலைவர்களான டாக்டர் சத்தியபால் மற்றும் டாக்டர் செய்புதீன் கிச்லூ ஆகியோர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். அமிர்தசரில் இராணுவச் சட்டம் அறிவிக்கப்பட்டது.



ஜாலியன் வாலாபாகில் துப்பாக்கி சூட்டின் பலனாக சுவர்களில் ஏற்பட்ட துளைகள்.

தலைவர்களைக் கைது செய்ததை எதிர்ப்பதற்காக, 1919 ஏப்ரல் 13 இல் அமிர்தசரில் உள்ள ஜாலியன் வாலாபாக் மைதானத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டவர்களுக்கு நேராக இராணுவ அதிகாரியான ஜெனரல் ரெஜினால்ட் டயரின் ஆணையின்படி பிரிட்டிஷ் இராணுவம் துப்பாக்கிச் சூடு நடத்தியது. மைதானத்திற்கு ஒரே ஒரு நுழைவாயில் மட்டுமே இருந்தது. முன்கூட்டியே அறிவிக்கப்படாமல் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. அரசாங்கப் பதிவுகளின்படி, 10 நிமிட நேரம் நடைபெற்ற இந்தத் துப்பாக்கிச் சூட்டில் 379 நபர்கள் கொல்லப்பட்டனர். ஆனால், உண்மையாகவே உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை இதைவிட மிக அதிகமாக இருந்தது. ஆயிரத்துக்கு மேற்பட்டோர் காயம் அடைந்தனர்.

ஜாலியன் வாலாபாக் படுகொலையுடன் தொடர்புடைய அதிகத் தகவல்களைத் திரட்டி அதை அடிப்படையாகக் கொண்டு ஒரு பங்கு நாடகத்தை நடத்தவும்.

## ஹண்டர் கமிஷன்

ஹண்டர் கமிஷன், ஜாலியன் வாலாபாக் உட்பட்ட நிகழ்வுகளை விசாரிக்க பிரிட்டிஷ் அரசாங்கம் நியமித்த ஒர் ஆணையம் ஆகும். ஹண்டர் கமிஷன் முன் வருகை தந்த ஜெனரல் டயரிடம் கமிஷன் கேட்ட சில கேள்விகளும் அதற்கான பதில்களும் பின்வருமாறு:

கேள்வி : மக்கள் அதிகமாக நின்ற இடத்தைப் பார்த்து நீங்கள் துப்பாக்கிச் சூட்டின் திசையை மாற்றிக் கொண்டிருந்தீர்கள். சரியா?

பதில் : சரி.

கேள்வி : நுழைவாயில் பெரிதாகவும், கவச வாகனங்கள் நுழையக்கூடியதுமாக இருந்திருந்தால் நீங்கள் அவற்றை பயன்படுத்தி இருப்பீர்களா?

பதில் : ஒருவேளை அவ்வாறு இருக்கலாம்.

கமிஷன் முன் டயர் இவ்வாறு சாட்சியளித்தார்,

அனைவரையும் கொலை செய்ய நான் முடிவு செய்திருந்தேன்.

*Source:* Louis Fischer, *Life of Mahatma Gandhi*

## பொது மக்கள் போராட்டத்தை நோக்கி

ரௌலட் சட்டத்திற்கு எதிரான போராட்டம் சுதந்திரப் போராட்டத்தில் ஒரு திருப்பு முனையாக இருந்தது. ஆனால் அது முக்கியமாக நகரப்புறங்களில் தான் வலுவாகக் காணப்பட்டது. கிராமப்புறங்களிலும் போராட்டத்தை விரிவுபடுத்த வேண்டியதன் அவசியத்தை காந்திஜி உணர்ந்து கொண்டார். இதை நடைமுறைப்படுத்த இந்து, முஸ்லீம் ஒற்றுமையை வலுப்படுத்த வேண்டும் என்பதை காந்திஜி புரிந்து கொண்டார். இந்த நோக்கத்துடன் காந்திஜி கிலாபத் பிரச்சனையை ஏற்றெடுத்தார். இந்தியாவில் கிலாபத் இயக்கத்திற்கு முகமது அலி மற்றும் சௌக்கத் அலி சகோதரர்கள் தலைமை தாங்கினர்.

### கிலாபத்

முதல் உலகப்போரில் வெற்றி பெற்றவர்கள், தோற்கடிக்கப்பட்ட துருக்கியுடன் செவ்ரஸ் உடன்படிக்கையில் கையொப்பமிட்டனர். இதன்படி துருக்கியின் ஆட்சியாளராகவும், இஸ்லாமிய உலகின் ஆத்மீக தலைவராகவும் கருதப்பட்ட கலிபாவின் பல அதிகாரங்களும் ஒழிக்கப்பட்டன.

கலிபாவின் அதிகாரங்களை மீண்டும் நிறுவுதல் என்ற நோக்கத்துடன் தான் கிலாபத் இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது.

## போராட்டம் ஒத்துழையாமையின் வாயிலாக

கிலாபத் குழு மற்றும் இந்திய தேசியக் காங்கிரஸின் தலைமையில் வன்முறையற்ற ஒரு ஒத்துழையாமைப் போராட்டம் ஆரம்பமானது. ஒத்துழையாமையின் போராட்ட முறைகள் பின்வருமாறு.

- பிரிட்டிஷ் அரசாங்கம் வழங்கிய பதவிகளைத் திரும்பக் கொடுத்தல்.
- அரசாங்கப் பதவியில் இருப்பவர்கள் ராஜினாமா செய்தல்.
- வழக்கறிஞர்கள் நீதிமன்றங்களைப் புறக்கணித்தல்.
- மாணவர்கள் ஆங்கிலேயப் பள்ளிகளைப் புறக்கணித்தல்.
- வெளிநாட்டுப் பொருட்களைப் புறக்கணித்தல்.

### ஹிந்து சுயராஜ்




காந்திஜியால் எழுதப்பட்டு 1909 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட புத்தகம் தான் 'ஹிந்து சுயராஜ்'. இதில் காந்திஜி, இந்தியாவில் நடைபெற்ற பிரிட்டிஷ் ஆட்சியை பின்வருமாறு விளக்கினார்: இந்தியர்களின் ஒத்துழைப்பின் வாயிலாகத்தான் இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சி நடைமுறைக்கு வந்தது. இந்த ஒத்துழைப்பின் காரணமாகவே அது நிலைநிற்கிறது. இந்தியர்கள் ஒத்துழைக்காமல் இருந்தால் பிரிட்டிஷ் ஆட்சி ஒரு வருடத்தில் முடிவுற்று, சுயராஜ் நடைமுறைக்கு வரும். இந்தியாவின் சுய ஆட்சியை காந்திஜி, ஹிந்து சுயராஜ் எனக் குறிப்பிட்டார்.

- சட்ட உருவாக்க சபைகளைப் புறக்கணித்தல்.

சமூக நல்லிணக்கத்தை வலுப்படுத்துதல், உள்நாட்டுப் பொருட்களை உபயோகித்தல், கதர் ஆடையைப் பரப்புதல், தேசியப் பள்ளிகளை நிறுவுதல் ஆகியவை போராட்ட காலத்தின் திட்டங்களாக இருந்தன.

காந்திஜியும், அலி சகோதரர்களும் ஒத்துழையாமைப் போராட்டத்தின் குறிக்கோளுடன் நாட்டின் பல்வேறு பகுதிகளுக்குச் சென்று மக்களை நேரில் சந்தித்தனர். இந்தச் சந்திப்புகள் சுதந்திரப் போராட்டம் சாதாரண மக்களுடையது என்ற புரிதலை மக்களில் ஏற்படுத்த உதவியது.

கிராம நகரப்புறங்களில் போராட்டம் ஒன்றுபோல் வலுவாகக் காணப்பட்டது. இந்தப் போராட்டத்தில் சமூகத்தில் உள்ள பல்வேறு பிரிவு மக்களின் பங்களிப்பு எவ்வாறு இருந்தது என்பதைப் பார்ப்போம்.

**பெண்கள்**

வெளிநாட்டுப் பொருட்களைப் புறக்கணித்தல், வெளிநாட்டுத் துணிகளைச் சேகரித்து தீயிடுதல் போன்ற போராட்ட முறைகளில் பெண்கள் பங்கேற்றனர்.

**தொழிலாளர்கள்**

ஒத்துழையாமை போராட்டத்தோடு தொழிலாளர்களின் பங்களிப்பும் தீவிரமாக இருந்தது. மதராசில் உள்ள பக்கிங்ஹாம் – கர்நாடிக் துணிமில் தொழிலாளர்கள், அசாமில் உள்ள தோட்டத் தொழிலாளர்கள் மற்றும் அசாம் – வங்காள இரயில்வே தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்து போராட்டத்திற்கு ஒத்துழைத்தனர்.

**மாணவர்கள்**

ஆயிரக்கணக்கான மாணவர்கள் அரசுப் பள்ளிகளையும், கல்லூரிகளையும் புறக்கணித்தனர். அவர்கள் தேசியப் பள்ளிக்கூடங்களில் சேர்ந்து தங்கள் கல்வியைத் தொடர்ந்தனர். பனாரசில் உள்ள காசி வித்யாபீடம், குஜராத் வித்தியா பீடம் மற்றும் அலிகாரில் உள்ள ஜாமியா மிலியா இஸ்லாமியா ஆகியவை இந்தக் காலகட்டத்தில் ஆரம்பிக்கப்பட்ட தேசியக் கல்வி நிறுவனங்களாகும்.

**பழங்குடியின மக்கள்**

ஆங்கிலேயர்கள் நடைமுறைப்படுத்திய வனச் சட்டங்களை மீறி பழங்குடியின மக்கள் போராட்டத்தில் பங்கேற்றனர். இந்தச் சட்டங்கள் வனப் பொருட்களைச் சேகரிப்பதற்குத் தடையாக இருந்தன.

**விவசாயிகள்**

ஏராளம் விவசாயிகள் போராட்டத்தில் பங்கேற்றனர். இந்தக் காலத்தில் தான் ஜவஹர்லால் நேருவின் தலைமையில் 'அவுத் கிசான் சபை' உருவாக்கப்பட்டது. வங்காளத்தின் விவசாயத்துறையில் சணல் சாகுபடிக்கு எதிராகப் புறக்கணிப்புப் போராட்டம் நடைபெற்றது. சணலுக்குப் பதிலாக நெல்லும் பருத்தியும் பயிரிட முடிவு செய்யப்பட்டது.

சணலுக்குப் பதிலாக நெல் மற்றும் பருத்தியை பயிரிடுவதற்கான முடிவிற்குப் பின்னால் உள்ள முக்கியமான நோக்கங்கள் பின்வருமாறு :

- சணல் கிடைப்பதை இல்லாமல் செய்து ஆங்கிலேயர்களுக்குச் சொந்தமான சணல் ஆலைகளை மூடச் செய்தல்.
- நெல் சாகுபடியை விரிவுபடுத்தி உணவுப் பொருட்கள் கிடைப்பதை உறுதி செய்தல்.
- பருத்தி கிடைக்கச் செய்வதின் வாயிலாக நெசவுத் தொழிலும் கதரின் பயன்பாடும் அதிகரிக்கச் செய்தல்.

'புறக்கணிப்பும் ஆக்கப்பூர்வமான செயல்பாடுகளும் ஒத்துழையாமை போராட்டத்தின் அடிப்படைக் கருத்துகளாக இருந்தன' என்ற தலைப்பில் ஒரு கலந்துரையாடல் ஏற்பாடு செய்யவும்.

ஒத்துழையாமைப் போராட்டத்தின்போது 1922 பிப்ரவரி 5 அன்று, உத்தரப்பிரதேசத்தின் சௌரி சௌராவில் போராட்டக்காரர்களுக்கும் காவல் துறையினருக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. கோபமடைந்த மக்கள் கூட்டம் காவல் நிலையத்தை தீயிட்டனர். இதைத் தொடர்ந்து, 22 காவலர்கள் கொலை செய்யப்பட்டனர். போராட்டம் அகிம்சை பாதையிலிருந்து விலகிச் செல்வதை உணர்ந்த காந்திஜி போராட்டத்தை நிறுத்தி வைத்தார். இந்த முடிவு பிற தலைவர்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. காந்திஜி கடுமையான விமர்சனங்களுக்கு உட்பட்டார். சுபாஷ் சந்திர போஸ் இந்த முடிவை 'தேசியப் பேரழிவு' என்று குறிப்பிட்டார்.

### சிராலா பெராலா

ஒத்துழையாமைப் போராட்டக் காலத்தில் புகழ்பெற்ற மக்கள் போராட்டம் நடைபெற்ற ஆந்திராவின் குண்டூர் மாவட்டத்தில் உள்ள ஒரு சிறிய நகரம் தான் சிராலா பெராலா. இந்த நகரத்தை ஒரு நகராட்சியாக உயர்த்துவதற்கான நடவடிக்கையை அரசாங்கம் ஆரம்பித்தது. இது அங்கு வரிச் சுமையை அதிக அளவில் அதிகரிக்க வழி வகுப்பதாக இருந்தது. இதற்கு எதிராக துக்கிராலா கோபாலகிருஷ்ணா என்பவரின் தலைமையில் சுமார் பதினைந்தாயிரம் மக்கள் வரி எதிர்ப்புப் போராட்டத்தை நடத்தி, நகரத்தை விட்டு வெளியேறவும் செய்தனர். அவர்கள் 11 மாதங்கள் வேறு இடங்களில் தங்கியிருந்தனர்.

*Source:* Sumit Sarkar, *Modern India 1885-1947*

சௌரி சௌரா நிகழ்வை அடிப்படையாகக் கொண்டு ஒரு செய்திக் குறிப்பு தயார் செய்யவும்.

பின்னர் காந்திஜி கைது செய்யப்பட்டு, விசாரணைக்குப் பின் 6 ஆண்டுகள் சிறைத் தண்டனைக்கு விதிக்கப்பட்டார். இந்த விசாரணையைக் குறித்துத் தான் நீங்கள் பாடத்தின் ஆரம்பத்தில் வாசித்தது.

## போராட்டம் சட்டமன்றங்களில்

ஒத்துழையாமைப் போராட்டத்தின் போது தேர்தல்களும் சட்டமன்றங்களும் புறக்கணிக்கப்பட்டதல்லவா? இதனுடன் கருத்து வேறுபாடுள்ள காங்கிரசின் தலைவர்களான சி . ஆர் . தாஸ் மற்றும் மோத்திலால் நேருவின் தலைமையில் 1923 – ஆம் ஆண்டு சுயராஜ் கட்சி உருவாக்கப்பட்டது. சட்டமன்றங்களைப் போராட்டத்திற்கான களமாக மாற்றுவதே அவர்களின் நோக்கமாக இருந்தது.



சி.ஆர். தாஸ்



மோத்திலால் நேரு

இதற்காக அவர்கள் தேர்தலில் போட்டியிட்டு சட்டமன்ற உறுப்பினர்களாகி அரசாங்கத்தை விமர்சித்தனர். சட்டமன்றங்களில் அரசாங்கத்தின் மக்கள் விரோதக் கொள்கைகளை வெளிக்கொணர சுயராஜ் கட்சியால் முடிந்தது.

சுயராஜ் கட்சியின் கொள்கைகள் ஒத்துழையாமை இயக்கத்தின் கொள்கைகளில் இருந்து எவ்வாறு வேறுபடுகின்றன? விவாதிக்கவும்.

## தொடரும் மக்கள் போராட்டங்கள்

சௌரி சௌரா நிகழ்வைத் தொடர்ந்து ஒத்துழையாமை இயக்கம் நிறுத்திவைக்கப்பட்டது என்றாலும், மக்களிடையே அது ஏற்படுத்திய ஆவேசம் முடிவுக்கு வரவில்லை. தொடர்ந்த ஆண்டுகளிலும் இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் பிரிட்டிஷ் எதிர்ப்புப் போராட்டங்கள் நடைபெற்றன. ஆந்திராவின் பழங்குடி இன மக்களின் போராட்டம் இதற்கு ஓர் எடுத்துக்காட்டாகும். அல்லூரி சீதாராமராஜூவின் தலைமையில் நடைபெற்ற இந்தப் போராட்டம் ராம்பா கலகம் என்ற பெயரில் அறியப்பட்டது. ஆங்கிலேயர்களின் வனச் சட்டங்களினால் வனங்களில் கால்நடைகளை மேய்ப்பதற்கான உரிமை தடை செய்யப்பட்டதும், கந்துவட்டிக்காரர்களின் சுரண்டலும் அவர்களைப் போராட்டம் செய்யத் தூண்டியது.

2500 சதுர மைல் நிலப்பகுதி போராட்டக்காரர்களின் கட்டுப்பாட்டில் இருந்தது. மலபார் சிறப்புக் காவல்துறை, அசாம் ரைபிள்ஸ் போன்ற படைப் பிரிவினரை உபயோகித்து போராட்டம் ஒடுக்கப்பட்டது. அல்லூரி சீதாராமராஜு போராட்டத்திற்கிடையே கொலை செய்யப்பட்டார்.

இந்தக் காலகட்டத்தில் மாணவ – இளைஞர் இயக்கங்கள் வலுப்பெற்றன. முழு சுதந்திரம் என்பதே இந்த இயக்கங்கள் முன்வைத்த நோக்கம். ஜவஹர்லால் நேருவும் சுபாஷ் சந்திர போசும், இந்தியா முழுவதும் பயணம் செய்து மாணவர்களிடமும் இளைஞர்களிடமும் உரையாற்றினர்.

**நூறாண்டு நிறைவடையும் சந்திப்பு**



இந்திய தேசிய இயக்கத்தை வழிநடத்திய காந்திஜியும் கேரளாவில் மறுமலர்ச்சி இயக்கத்திற்கு தலைமை தாங்கிய ஸ்ரீநாராயணகுருவும் 1925 மார்ச் 12 இல் வர்க்கலையில் சிவகிரி மடத்திற்கு அருகில் உள்ள வனஜாக்சி மடத்தில் வைத்து சந்தித்தனர். இந்த இரு மகான்களின் சந்திப்பு 2025 மார்ச் 12 அன்று ஒரு நூற்றாண்டு நிறைவடைந்தது.

## 'சைமனே திரும்பிப் போ' (Simon Go Back)

இந்தியாவில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய அரசியலமைப்பு சீர்திருத்தங்கள் குறித்த பரிந்துரைகள் வழங்குவதற்காக பிரிட்டிஷ் அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட ஆணையமே சர். ஜான் சைமனின் தலைமையிலான ஆணையம். இந்த ஆணையத்தில் இருந்த ஏழு அங்கத்தினர்களும் ஆங்கிலேயர்களாக இருந்தனர். இந்தக் காரணத்தால் சைமன் ஆணையத்தைப் புறக்கணிக்க காங்கிரஸ் மற்றும் பிற அரசியல் கட்சிகளும் முடிவு செய்தன.



சைமன் கமிஷனுக்கு எதிரான போராட்டம்

கமிஷன் இந்தியாவை வந்தடைந்த நாளில் (1928 பிப்ரவரி 3) நாடு முழுவதும் வேலை நிறுத்தம் நடத்தப்பட்டது. 'சைமன் திரும்பிப் போ' என்ற முத்திரை வாக்கியம் இந்திய வீதிகளில் எதிரொலித்தது. லாகூரின் போராட்டக்காரர்கள் மீது நடத்தப்பட்ட தடியடியில் காயமடைந்த லாலா லஜ்பத்ராய் பின்னர் மரணமடைந்தார்.

உறுதியான அரசியலமைப்புச் சீர்திருத்தங்களை உருவாக்க இந்தியர்களால் இயலாது என ஆங்கில அதிகாரிகள் தொடர்ந்து கூறி வந்தனர். இந்தச் சூழலில், பல்வேறு கட்சிகள் புனேயில் ஒன்று கூடி அரசியலமைப்புச் சீர்திருத்த அறிக்கையை தயாரித்தது. மோத்திலால் நேருவின் தலைமையில் தயார் செய்யப்பட்ட இந்த அறிக்கை, நேரு குழு அறிக்கை என அறியப்படுகிறது. பிற்காலத்தில் இந்திய அரசியலமைப்புச் சட்டம் தயார் செய்வதில் இந்த அறிக்கை தாக்கத்தை ஏற்படுத்தியது.

சைமன் கமிஷனுக்கு எதிரான போராட்டத்தைக் குறித்து ஒரு சிறு குறிப்பு தயார் செய்யவும்.

## பர்தோளியில் விவசாயிகளின் எழுச்சி

1928 ஆம் ஆண்டு குஜராத்தில் உள்ள பர்தோளி ஒரு பெரிய விவசாயிகள் போராட்டத்திற்கு களமானது. இந்தப் போராட்டம் சர்தார் வல்லபாய் பட்டேலின் தலைமையில் நடைபெற்றது. அப்பாஸ் தியாப்ஜி, வித்தல்பாய் பட்டேல் ஆகியோர் இப்போராட்டத்தில் முக்கிய பங்கு வகித்தனர்.

வரி உயர்வே போராட்டத்தின் முக்கிய காரணமாக இருந்தது. விவசாயிகள் வரி செலுத்த மறுத்து போராட்டத்தை ஆரம்பித்தனர். அரசாங்கம் விளைநிலங்கள், கால்நடைகள், வாகனங்கள், வேளாண் கருவிகள் போன்றவற்றை கைப்பற்றியது. சர்தார் வல்லபாய் பட்டேல் போராட்ட வீரர்களிடம், 'உங்கள் வண்டிகளையும் கருவிகளையும் கழற்றி பல்வேறு பகுதிகளாகப் பிரித்து, பல்வேறு இடங்களில் பாதுகாத்து வையுங்கள்', என்று அறிவுறுத்தினார். காந்திஜி பர்தோளிக்கு வந்து விவசாயிகளுக்கு உறுதியான ஆதரவை வழங்கினார். இறுதியாக, அரசாங்கம் வரி உயர்வை ரத்து செய்தது. இவ்வாறு போராட்டம் வெற்றி பெற்றது.

ஒத்துழையாமைப் போராட்டம் நிறுத்தி வைக்கப்பட்ட பின் நடைபெற்ற முக்கியமான போராட்டங்களை உள்ளடக்கி ஒரு விளக்கப் படத்தை தயார் செய்யவும்.

## லாகூர் மாநாடு என்ற திருப்புமுனை

> **“நான் ஒரு குடிமகனும் சோஷியலிஸ்ட்டும் ஆகும். எனக்கு மன்னர்கள் மீதும் இளவரசர்கள் மீது நம்பிக்கை இல்லை. புதிய தொழில் மன்னர்களை உருவாக்கும் அமைப்பிலும் எனக்கு நம்பிக்கை இல்லை.”**
>
> **(ஜவஹர்லால் நேரு)**
>
> *Source:* Bipan Chandra et-al, *India's Struggle for Independence*

1929 டிசம்பர் மாதம் லாகூரில் நடைபெற்ற காங்கிரசின் வருடாந்திர மாநாட்டில் ஜவஹர்லால் நேரு ஆற்றிய தலைவர் உரையின் ஒரு பகுதி தான் நீங்கள் மேலே வாசித்தது. இந்திய சுதந்திரப் போராட்ட வரலாற்றில், லாகூர் மாநாடு பல்வேறு காரணங்களால் முக்கியமானதாக காணப்பட்டது.



ஜவஹர்லால் நேருவும் காந்திஜியும்

அவற்றில் சில கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

- காங்கிரஸ் முதன்முறையாக முழு சுதந்திரத்தை கோரியது.
- இதற்காகப் பொது மக்கள் போராட்டம் ஆரம்பிக்க காந்திஜியை தலைமைப்படுத்தியது.
- மூவர்ணக் கொடியை அங்கீகரித்தது.

லாகூர் மாநாடு சுதந்திர போராட்டத்தின் மைல் கல்லாக மாறியது ஏன்?

### சுதந்திரத்திற்கு முன் சுதந்திர தினக் கொண்டாட்டம்

லாகூர் மாநாட்டின் தீர்மானப்படி 1930 ஜனவரி 26 அன்று இந்தியா முழுவதும் சுதந்திர தினமாகக் கொண்டாடப்பட்டது. கிராமங்கள் மற்றும் நகரங்களில் ஒரே நேரத்தில் கூட்டங்கள் நடத்தி சுதந்திரம் விளம்பரம் செய்யப்பட்டது. தேசியக் கொடியை ஏற்றியும், தேச பக்திப் பாடல்களைப் பாடியும் மக்கள் சுதந்திர தினக் கொண்டாட்டங்களில் பங்கேற்றனர். இராட்டில் நூல் நூற்றல், மதுவிலக்கு செயல்பாடுகள், இந்து – முஸ்லீம் ஒற்றுமைப் பிரச்சாரம் ஆகியவையும் இதன் ஒரு பகுதியாக நடத்தப்பட்டன. தொடர்ந்த ஆண்டுகளிலும் ஜனவரி 26 ஆம் நாள் சுதந்திர தினமாகக் கொண்டாடப்பட்டது. இதன் அடிப்படையில்தான் சுதந்திரத்திற்கு பிறகு ஜனவரி 26 ஆம் நாள் குடியரசு தினமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது.

## தண்டியின் கடல் முழக்கம்



காந்திஜி உப்பை கையிலெடுத்து சட்டம் மீறுதல்.

லாகூர் மாநாட்டின் தீர்மானப்படி முழு சுதந்திரம் அடைதல் என்ற இலக்குடன் மக்கள் போராட்டத்தை ஆரம்பிக்க காந்திஜியிடம் பொறுப்பு கொடுக்கப்பட்டிருந்தது அல்லவா? போராட்டம் ஆரம்பிப்பதற்கு முன் காந்திஜி, வைசிராயாக இருந்த இர்வின் பிரபுவுக்கு பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் இந்தியர்கள் அனுபவிக்கும் இன்னல்களைச் சுட்டிக்காண்பித்து ஒரு கடிதத்தை எழுதினார். அரசாங்கத்திற்கு எதிராக ஒரு சட்ட மறுப்புப் போராட்டத்தை ஆரம்பிக்க இருப்பதையும் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார். சமூகத்தின் அனைத்து பிரிவினரையும் போராட்டத்தில் பங்கெடுக்கச் செய்வதே காந்திஜியின் நோக்கமாக இருந்தது. தொடர்ந்து, உப்புச் சட்டத்தை மீறி சட்ட மறுப்புப் போராட்டத்தை ஆரம்பிக்க காந்திஜி முடிவு செய்தார்.

குஜராத்தில் உள்ள தண்டி கடற்கரையில் வைத்து உப்புச் சட்டத்தை மீறுவது எனத் தீர்மானம் செய்யப்பட்டது. இதற்காக காந்திஜியும், தேர்ந்தெடுக்கப்பட்ட 78 தன்னார்வலர்களும் சபர்மதி ஆசிரமத்தில் இருந்து தண்டி கடற்கரையை நோக்கி கால்நடைப் பயணம் மேற்கொண்டனர். 24 நாட்கள் நீண்ட பயணத்தை பத்திரிகைகளில் வெளியிட பல வெளிநாட்டு பத்திரிகையாளர்களும் இந்தியா

வந்தடைந்தனர். பயணத்தின் போது பாதையின் இருபுறமும் நெருக்கமாக கூடியிருந்த மக்களிடம் காந்திஜி, தூய்மை, கதர் அணிவதன் முக்கியத்துவம், சமூக நல்லிணக்கம் போன்றவற்றைக் குறித்து அறிவுறுத்தினார். 1930 ஏப்ரல் 6 – ஆம் நாள் காந்திஜி, தண்டிக் கடற்கரையில் வைத்து உப்பு தயாரித்து சட்ட மறுப்புப் போராட்டத்திற்கு ஆரம்பம் குறித்தார். உப்பு உற்பத்தியைக் குறித்த துண்டுப் பிரசுரங்கள் தயார் செய்து மக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டது.

### ஏன் உப்பு ?

உப்பு உற்பத்தி அரசாங்கத்தின் குத்தகையாக இருந்தது. எனவே, தனி நபர்கள் உப்பு தயாரிப்பது ஒரு குற்றமாகக் கருதி அவர்களுக்கு தண்டனை அளிக்கப்பட்டது. இந்தச் சட்டத்தை மீறுவதே காந்திஜியின் தீர்மானமாக இருந்தது.

பொதுவாக, வெப்ப மண்டல காலநிலை அனுபவப்படும் இந்தியாவில் உள்ள மக்களுக்கும் கால்நடைகளுக்கும் ஒன்றுபோல் உப்பு அத்தியாவசியப் பொருளாக இருந்தது. விவசாய தேவைகளுக்காகவும் பயன்படுத்தப்பட்டிருந்த உப்பின் மீதான அரசாங்கத்தின் குத்தகையை காந்திஜி 'வெறுக்கத்தக்க குத்தகை' என்று குறிப்பிட்டார்.

### தராசனாவில் நடைபெற்ற போராட்டம்



சரோஜினி நாயுடு, காந்திஜியுடன்

1930 மே 21 இல் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட போராட்டக்காரர்கள் அடங்கிய குழு ஒன்று குஜராத்தில் உள்ள தராசனா உப்பு தயாரிக்கும் ஆலைகளை அடைந்தனர். அவர்கள் அந்த இடத்தை நெருங்கிய போது, போலீசார் விரைந்து வந்து இரும்புத் துண்டுகள் பொருத்தப்பட்ட லாத்திகளால் போராட்டக்காரர்கள் தரையில் விழும் வரை அடித்தனர். காயமடைந்தவர்களை உடனிருந்த போராட்ட வீரர்கள் அழைத்துச் செல்லும் நேரத்தில் புதிய குழு முன் வந்தது. காவல்துறையினர் அவர்களையும் அடித்து நொறுக்கினர். அவர்களை அகற்றும் போது இன்னொரு குழு முன் வந்தது. அது தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டே இருந்தது. இறுதியாக11 மணியளவில் வெப்பநிலை 46.67 டிகிரி செல்சியஸை எட்டிய போது 320 பேர் காயமடைந்தும், இரண்டு பேர் மரணம் அடைந்தும் காணப்பட்டனர். அமெரிக்க பத்திரிகையாளரும், போராட்டத்தை நேரில் பார்த்த சாட்சியுமான வெப்மில்லர்: 'பதினெட்டு வருடங்கள் இருபது நாடுகளில் பத்திரிக்கையாளராகப் பணியாற்றிய நான் ஏராளம் மக்கள் எழுச்சிகள், கலவரங்கள், தெருச் சண்டைகள் மற்றும் கலகங்கள் போன்றவற்றைப் பார்த்திருக்கிறேன். ஆனால் தராசனாவில் நடந்ததைப் போன்ற ஒரு நிகழ்வை நான் ஒருபோதும் கண்டதில்லை என்று குறிப்பிட்டுள்ளார்.'

*Source:* Bipan Chandra et-al, *India's Struggle for Independence,*

*(சட்ட மறுப்புப் போராட்ட வேளையில் சரோஜினி நாயுடு, இமாம் சாஹிப் போன்றவர்களின் தலைமையில் குஜராத்தில் தராசன உப்பு தயாரிக்கும் மையத்தில் நடத்திய போராட்டத்தின் விளக்கம்)*

நாம் முன்னர் விவாதித்த ஒத்துழையாமைப் போராட்டத்தை விட சட்ட மறுப்புப் போராட்டம் அதிகமான மக்களின் பங்களிப்பை ஏற்படுத்திய போராட்டமாக இருந்தது. ஒத்துழையாமையுடன் சட்ட மறுப்பையும் நடத்திய வண்ணமே போராட்டம் முன்னேறியது.



கான் அப்துல் கா∴பர் கான், காந்திஜியுடன்

வடமேற்கு இந்தியா சட்டமறுப்புப் போராட்டத்தின் முக்கிய மையங்களில் ஒன்றாக இருந்தது. கான் அப்துல் கா∴பர் கான் அங்கு நடைபெற்ற போராட்டத்திற்கு தலைமை தாங்கினார். 'எல்லைக் காந்தி ' என அறியப்பட்டிருந்த அவருக்குக் கீழ் 'குதாய் கித்மத்கர்' என்ற ஒரு தன்னார்வப் படை செயல்பட்டிருந்தது. இந்தப் போராட்டத்தில் பல்வேறு பிரிவு மக்களின் பங்களிப்பு எவ்வாறு இருந்தது என்பதை ஆராய்வோம்.

**விவசாயிகள்**

அரசாங்கத்திற்கு வரி செலுத்தாமலும், நில உரிமையாளர்களுக்கு குத்தகையைச் செலுத்தாமலும் போராட்டத்தில் பங்கேற்றனர்.

**தொழிலாளர்கள்**

இரயில்வே, துறைமுகம், சுரங்கம் போன்றவற்றில் உள்ள தொழிலாளர்கள் போராட்டத்தில் பங்கேற்றனர். ஷோலாப்பூரில் (மஹாராஷ்டிரம்) தொழிலாளர்கள் நடத்திய போராட்டங்கள் வன்முறையில் முடிந்தன.

**பழங்குடி மக்கள்**

வனச் சட்டத்தை மீறி காடுகளில் சென்று பொருட்களைச் சேகரித்தனர்.

**பெண்கள்**

உப்பு உற்பத்தி, வெளிநாட்டு பொருட்கள் விற்பனை செய்யும் கடைகள் முன் மறியல் செய்தல் போன்ற போராட்ட செயல்பாடுகளில் தீவிரமாக ஈடுபட்டனர்.

**வியாபாரிகளும் தொழிலதிபர்களும்**

இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களை வாங்கவும் விற்கவும் தயாராகவில்லை.

### ராணி கைடின்லியூ

சட்ட மறுப்புப் போராட்டத்தின் போது வடகிழக்கு இந்தியாவில் ராணி கைடின்லியூ ஒரு துணிச்சலான பெண் போராளியாக இருந்தார். சட்ட மறுப்புப் போராட்டத்தின் போது கைது செய்யப்பட்ட அவர் தனது இளமைப்பருவம் முழுவதையும் சிறையில் செலவழித்தார். சிறையில் அவரைச் சந்தித்த ஜவஹர்லால் நேரு இவ்வாறு எழுதினார் : 'இந்தியா அவரை நினைவு கூறவும் கௌரவிக்கவும் செய்கிற ஒரு நாள் வரும்.' இந்தியா சுதந்திரம் அடைந்த பின்புதான் ராணி கைடின்லியூ சிறையில் இருந்து விடுவிக்கப்பட்டார்.



ராணி கைடின்லியூ

சட்ட மறுப்புப் போராட்டத்தில் பல்வேறு பிரிவு மக்களின் பங்களிப்பைக் குறிப்பிடும் பத்திரிகைக் குறிப்பை தயார் செய்து வகுப்பில் வெளியிடவும்.

## ஒப்பந்த பேச்சுவார்த்தைகள்

இந்தியர்களுக்கு குறைந்தபட்சம் வரையறுக்கப்பட்ட சில அதிகாரங்களையாவது வழங்க வேண்டும் என்று சட்ட மறுப்புப் போராட்டம் பிரிட்டிஷ் அரசாங்கத்தை உணர்த்தியது. இதற்காகச் சில கலந்தாலோசனைகள் லண்டனில் நடந்தேறின. இந்த ஆலோசனைகள் வட்டமேசை மாநாடுகள் என அறியப்படுகின்றன. 1930 ஆம் ஆண்டு நடைபெற்ற முதல் மாநாட்டில் காங்கிரஸ் பங்கேற்கவில்லை. இந்தச் சூழலில் சட்டமறுப்புப் போராட்டத்தை முடிவுக்கு கொண்டுவரவும், இரண்டாவது மாநாட்டில் காங்கிரஸ் பிரதிநிதியை பங்கெடுக்கச் செய்யவும் அரசாங்கம் முயற்சி செய்தது. இதன் பகுதியாக கையொப்பம் இட்ட ஒப்பந்தம் தான் காந்தி– இர்வின் ஒப்பந்தம் (Gandhi - Irwin Pact). 1931 மார்ச் 5 இல் கையொப்பம் இடப்பட்ட இந்த ஒப்பந்தத்தின் படி;



காந்தி – இர்வின் உடன்படிக்கை

- சட்ட மறுப்புப் போராட்டம் நிறுத்தி வைக்கப்பட்டது.
- காந்திஜி இரண்டாவது வட்டமேசை மாநாட்டில் பங்கேற்றார்.

ஆனால் இரண்டாவது வட்டமேசை மாநாடு தோல்வியில் முடிவுற்றது. மூன்றாவது வட்டமேசை மாநாட்டை காங்கிரஸ் புறக்கணித்தது.

## போராட்டம் ஆயுதப் பாதையில்

சுதந்திரம் என்ற இலக்கை அடைய காங்கிரசினுடையவும் மகாத்மா காந்தினுடையவும் தலைமையில் நடைபெற்ற போராட்ட முறைகளுடன், வேறுபட்ட பிற முறைகளையும் பலரும் ஏற்றுக்கொண்டனர். காந்திஜியின் அகிம்சைக்குப் பதிலாக சிலர் புரட்சிப் பாதைகளை ஏற்றுக்கொண்டனர். இவர்களில் பெரும்பாலானோர் இளைஞர்கள் ஆவர்.

ரஷ்யப் புரட்சியின் வெற்றியும் ஒத்துழையாமை போராட்டம் பாதி வழியிலேயே நிறுத்தப்பட்டது அவர்களைப் புரட்சியின் பாதைக்கு நேராக வழிநடத்தியது. இதைத் தொடர்ந்து, 1924 ஆம் ஆண்டு 'இந்துஸ்தான் ரிப்பப்ளிக் அசோசியேஷன்' (HRA) என்ற புரட்சிகரமான அமைப்பு உருவானது. புரட்சிகரமான செயல்களுக்குப் பணம் திரட்டுவதற்காகப் புரட்சியாளர்கள் உத்தரப் பிரதேசத்தின் காக்கோரியில் வைத்து ரயில்வேயின் பணத்தைக் கைப்பற்ற முயற்சித்து அவர்களில் சிலர் கைது செய்யப்பட்டனர்.

### காக்கோரி நிகழ்வு

ஆயுதங்கள் வாங்குவதற்கான பணத்தைத் திரட்டுவதற்காக, 1925 ஆகஸ்ட் 9 இல் புரட்சியார்கள் உத்தரப் பிரதேசத்தின் லக்னௌவுக்கு அருகில் உள்ள காக்கோரியில் வைத்து 8 டௌண் ரயிலை (8 down train) தடுத்து நிறுத்தி ரயில்வேயின் பணத்தைக் கைப்பற்றினர். இந்த வழக்கில் ஏராளமானோர் கைது செய்யப்பட்டனர். இந்த வழக்கில் ராம் பிரசாத் பிஸ்மில், அஷ்ஃபா குல்லாகான், ராஜேந்திர லாஹிரி, ரோஷன் சிங் ஆகியோருக்கு மரணத் தண்டனை அளிக்கப்பட்டது. 4 நபர்களை அந்தமான் தீவுகளுக்கு நாடு கடத்தினர். 17 நபர்களுக்குச் சிறைத் தண்டனை வழங்கப்பட்டது.

### பகத்சிங்கின் அழைப்பு


பகத்சிங்

1931 ஆம் ஆண்டு இளம் அரசியல் தொண்டர்களுக்கான செய்தியில் பகத்சிங் இவ்வாறு கூறினார், 'பார்வைக்கு நான் ஒரு பயங்கரவாதியாகவே செயல்பட்டு இருக்கிறேன். ஆனால் நான் ஒரு பயங்கரவாதி அல்ல ... என்னால் சேர்த்துக்கொள்ள முடிகிற முழு பலத்துடன் நான் கூறுகிறேன், நான் ஒரு தீவிர செயல்பாட்டுக்காரன் அல்ல, ஒருவேளை என்னுடைய அரசியல் வாழ்க்கையின் ஆரம்பத்தில் சில நாட்களைத் தவிர, நான் ஒருபோதும் அவ்வாறு இருந்ததில்லை. இதுபோன்ற முறைகளால் நம்மால் எதையும் சாதிக்க இயலாது என்பது எனக்குத் தெரியும்.' மத தீவிரவாதம் தேசிய இயக்கத்திற்கும், தேசத்திற்கும் நேராக ஏற்படுத்தும் ஆபத்தைக் குறித்தும் பகத்சிங் அறிந்திருந்தார். காலனி ஆதிக்கத்தைப் போலவே மதத்தீவிரவாதமும் ஆபத்தானது என்பதை அவர் நினைவூட்டினார்.

காக்கோரி நிகழ்வைத் தொடர்ந்து பின்னடைவுகளைச் சந்தித்த புரட்சிச் செயல்கள் பகத்சிங்கின் தலைமையில் மீண்டும் புத்துயிர் பெற்றன. 1928 ஆம் ஆண்டு பகத்சிங்கும் அவரது குழுவினரும் சேர்ந்து இந்துஸ்தான் சோஷியலிஸ்ட் ரிப்பப்ளிக்கன் அசோசியேஷன் (HSRA) என்ற சங்கத்தை உருவாக்கினர். பகத்சிங்கின் தலைமையில் புரட்சியாளர்கள் நடத்திய இரண்டு முக்கிய செயல்கள்:

- லாலா லஜ்பத்ராயின் மரணத்திற்கு வழி வகுத்த தடியடியில் பங்காளியான சான்டர்ஸ் சன் என்ற காவல்துறை அதிகாரியைச் சுட்டுக்கொன்றனர்.
- மத்திய சட்டமன்றத்தின் மீது குண்டு வீசினர்

இதைத்தொடர்ந்து, காவல்துறையினரால் பிடிக்கப்பட்ட பகத்சிங், ராஜ்குரு மற்றும் சுக்தேவ் போன்ற துணிச்சலான புரட்சியாளர்களை விசாரணைக்குப் பின் 1931 மார்ச் 23 இல் தூக்கிலிட்டனர்.

அக்காலத்தில் வங்காளத்திலும் புரட்சிச் செயல்கள் தீவிரமாக இருந்தன. சூர்யா சென்னின் தலைமையில் புரட்சியாளர்கள் சிற்றகோங்கில் உள்ள ஆயுதக் கிடங்குகளைச் சூறையாடியது அரசாங்கத்தை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. புரட்சிகரமான இயக்கங்களில் பெண்களின் பங்களிப்பும் குறிப்பிடத்தக்கது. இவர்களில் பிரீதி லதா வதேதார், கல்பனாதத் மற்றும் பீனா தாஸ் ஆகியோர் முக்கியமானவர்களாவர்.

## காங்கிரஸ் சோஷியலிஸ்ட் கட்சி (சி.எஸ்.பி)

1917 ஆம் ஆண்டில் ரஷ்ய புரட்சியின் வெற்றியும் சோஷியலிச கருத்துகளின் பரவலும் காங்கிரஸ் சோஷியலிஸ்ட் கட்சி உருவாவதற்கு வழிவகுத்தன. காங்கிரசில் உள்ள சோஷியலிச கருத்துக்களோடு ஆர்வம் கொண்ட மக்கள் ஒன்று சேர்ந்து சி.எஸ்.பி. என்ற கட்சியை உருவாக்கினர். ஜெயப்பிரகாஷ் நாராயணன் இதன் முதல் செயலாளராக இருந்தார். முதலாளித்துவத்தையும், நில பிரபுத்துவத்தையும் எதிர்த்து ஒரு சோஷியலிஸ்ட் சமூகத்தை நிறுவுவதே கட்சியின் நோக்கமாக இருந்தது. விவசாயிகளையும், தொழிலாளர்களையும் ஒருங்கிணைத்துக் கொண்டு அவர்களது பிரச்சினைகளை விவாதிக்க காங்கிரஸ் சோஷியலிச கட்சியால் முடிந்தது.

## கமலாதேவி சதோபாத்தியாய்



கமலாதேவி சதோபாத்தியாய்

காங்கிரஸ் சோஷியலிஸ்ட் கட்சி (சி.எஸ்.பி) உருவானதிலிருந்து அதன் செயல்பாடுகளில் கமலாதேவி சதோபாத்தியாய் தீவிரமாக இருந்தார். சி.எஸ். பி. யின் தலைவராகச் செயல்பட்ட அவர் சட்ட மறுப்புப் போராட்ட காலத்திலும் வெள்ளையனே வெளியேறு போராட்ட நேரத்திலும் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

1944 ஆம் ஆண்டு மும்பையில் நடைபெற்ற பெண்கள் மாநாட்டில் ஆற்றிய உரையில் அவர் இவ்வாறு கூறினார், "பெண்களை ஆண்களுக்கு எதிராக போராட வைப்பதோ அல்லது பெண்கள் ஆண்களைப் பின்பற்றுவதோ அல்ல பெண்கள் இயக்கத்தின் நோக்கம், மாறாக அவர்களது சொந்த திறன்களைப் பற்றியும் பொறுப்புகளைக் குறித்தும் பெண்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்துதல், பிற பாலினத்தைச் சார்ந்தவர்களிடம் மரியாதையை உருவாக்குதல் போன்றவையே அவற்றின் இலக்கு."

*Source:* Ramachandra Guha, *Makers of Modern India,*

## விவசாய எழுச்சிகள்

சுதந்திரப் போராட்டத்தை வலுப்படுத்த விவசாயிகளின் பங்களிப்பு அவசியம் என்பதை காந்திஜி உள்ளிட்ட தலைவர்கள் உணர்ந்தனர். அக்காலத்தில் விவசாயிகள் ஏராளம் பிரச்சனைகளைச் சந்தித்தனர். கீழே கொடுக்கப்பட்டவை அவற்றில் முக்கியமானவையாகும்.

- அதிகப்படியான வரி
- நில உரிமையாளர்களின் சுரண்டல்
- குடியிறக்குதல்

1920 களில் 'கிசான் சபைகளை' உருவாக்கி விவசாயிகள் ஒருங்கிணையத் தொடங்கினர். அக்காலத்தில் உத்தரப் பிரதேசத்தின் அவத் பகுதியில் நடைபெற்ற விவசாயிகளின் எழுச்சி 'ஐக்கிய பிரஸ்தானம்' என்று அறியப்பட்டது. 1936 இல் 'அகில இந்திய கிசான் சபையை' உருவாக்கியது விவசாய இயக்கங்களின் வரலாற்றில் ஒரு மைல் கல்லாக இருந்தது. 1940 களில் நடைபெற்ற விவசாயிகளின் போராட்டங்கள் சுதந்திரம் என்ற இலக்கை அடைவதற்கு உதவிய முக்கிய காரணியாக இருந்தது. பிற்காலத்தில் நடைபெற்ற விவசாயிகளின் போராட்டங்களில், வங்காளத்தில் தேபாகா போராட்டம், ஆந்திராவில் தெலுங்கானா போராட்டம் போன்றவை முக்கியமானவையாகும்.

## ஒருங்கிணையும் தொழிலாளர்கள்

நவீனத் தொழிற்சாலைகள் நடைமுறைக்கு வந்த போது, இந்தியாவில் ஒரு நவீனத் தொழிலாளி வர்க்கம் உருவானது. இது தொழிலாளர்களின் முக்கிய பிரச்சனைகளுக்கு வழிவகுத்தது.

### ‘தேபாகாசாய்’

அனைத்து இந்திய கிசான் சபையின் தலைமையில் 1946-47 காலகட்டத்தில் தான் தேபாகா போராட்டம் நடைபெற்றது. நில உரிமையாளர்களான ஜோத்தேதார்களுக்கு எதிராகத் தான் இந்த விவசாயிகளின் போராட்டம் நடைபெற்றது. விளைச்சலை இரண்டு பகுதிகளாகப் பிரித்து ஒரு பகுதியை ஜோத்தேதார்களுக்குக் கொடுக்கும் முறை தான் நடைமுறையிலிருந்தது. விளைச்சலை மூன்று பகுதிகளாகப் பிரிக்க வேண்டுமென்றும், இரண்டு பகுதிகள் அவர்களுக்குக் கிடைக்க வேண்டும் என்றும் கேட்டு விவசாயிகள் நடத்திய போராட்டத்தின் முத்திரை வாக்கியம் தான் ' தேபாகாசாய் ' (மூன்றில் இரண்டு பகுதி எங்களுக்கு வேண்டும்/We want two third Share) என்பது.

## கடற்படைக் கலகம்

ரோயல் இந்தியன் நேவி பிரிட்டிஷ் இந்தியாவின் கடற்படையாக இருந்தது. 1946 ஆம் ஆண்டு பிப்ரவரியில் ரோயல் இந்தியன் நேவியின் படைவீரர்கள் பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிராகக் கலகம் செய்தனர். 1946 பிப்ரவரி 5–இல் மும்பையில் ' தல்வார்' என்ற கப்பலில் ஆரம்பித்த கலகம் ஆர்.ஐ.என். கலகம் என்று அறியப்படுகிறது. கலகக்காரர்கள் பிரிட்டிஷ் கொடியை அவிழ்த்து மாற்றிவிட்டு அதற்குப் பதிலாக காங்கிரஸ், கம்யூனிஸ்ட், முஸ்லீம் லீக் போன்ற கட்சிகளின் கொடிகளை ஏற்றினர். பிற கடற்படைத் தளங்களுக்குப் பரவிய கலகத்தை இராணுவ சக்தியை உபயோகித்து அடக்கினர்.

- குறைந்த ஊதியம்
- அதிக வேலை நேரம்
- பெண்கள் மற்றும் குழந்தைத் தொழிலாளர்கள் எதிர்கொண்ட சுரண்டல்கள் போன்றவை.

ஏ.ஐ.டி.யு.சி. (All India Trade Union Congress) இந்தியாவில் தேசிய அடிப்படையில் உருவாக்கப்பட்ட முதல் தொழிற் சங்கமாக இருந்தது. இரண்டாம் உலகப்போரின் பிந்தைய காலகட்டத்தில் நடைபெற்ற ரயில்வே, தபால்–தந்தி தொழிலாளர்களின் வேலைநிறுத்தப் போராட்டங்கள் இந்தியாவை உலுக்கியது. 1946 ஆம் ஆண்டில் ' ரோயல் இந்தியன் நேவி' (RIN) இல் நடைபெற்ற கலகத்திற்கு ஆதரவாக தொழிலாளர்கள் பம்பாயில் நடத்திய வேலை நிறுத்தம் வன்முறையில் முடிவுற்றது.

பிரிட்டிஷ் ஆட்சியின் போது இந்தியாவில் விவசாயிகளும் தொழிலாளர்களும் எதிர்கொண்ட பிரச்சினைகள், அதற்கு எதிராக நடைபெற்ற போராட்டங்களும் விளைவுகளும் உள்ளடக்கிய ஒரு டிஜிட்டல் விளக்கக் காட்சியை தயார் செய்து வகுப்பில் வெளியிடவும்.

## ஆங்கிலேயரே இந்தியாவை விட்டு வெளியேறு

இரண்டாம் உலகப் போர் முடிவடைந்த போது இந்தியாவின் ஆதரவு பிரிட்டனுக்கு இன்றியமையாததாக மாறியது. இதற்காக சர் ஸ்டாஃபோர்டு கிரிப்ஸ் இந்தியா வந்தார். ஆனால் இந்தியாவில் உள்ள தலைவர்களை பேச்சுவார்த்தையின் வாயிலாக சம்மதிக்க வைப்பதில் ஸ்டாஃபோர்டு கிரிப்ஸ் தோல்வி அடைந்தார். இத்துடன் காந்திஜியின் தலைமையில் கடைசி பொது மக்கள் போராட்டம் ஆரம்பமானது.

"இதோ ஒரு மந்திரம், ஒரு சிறு மந்திரம், நான் உங்களுக்குத் தருகிறேன். அதை நீங்கள் இருதயத்தில் பதிக்க வேண்டும். ஒவ்வொரு மூச்சும் அதற்கு வடிவம் கொடுக்க வேண்டும். அந்த மந்திரம் இதுவே, 'செய் அல்லது செத்துமடி' (Do or Die) நாம் இந்தியாவைச் சுதந்திரமாக்குவோம் இல்லையேல் அந்த முயற்சியில் உயிரை விடுவோம். நிலையான அடிமைத்தனத்தைக் காண்பதற்கு நாம் உயிருடன் இருக்க மாட்டோம்."

1942 ஆகஸ்ட் 8 இல் மும்பையில் நடைபெற்ற ஒரு பொதுக்கூட்டத்தில் காந்திஜி ஆற்றிய உரையின் ஒரு பகுதிதான் நீங்கள் மேலே வாசித்தது. இத்துடன் 'வெள்ளையனே வெளியேறு போராட்டம்' (Quit India) ஆரம்பமானது. காந்திஜி உள்ளிட்ட தலைவர்கள் சிறையில் இருந்த போதிலும், போராட்டம் நாடு முழுவதும் பரவியது.



வெள்ளையனே வெளியேறு போராட்ட காலத்தின் பம்பாயில் (இன்றய மும்பை) பெண்களின் ஊர்வலம்.

- மாணவர்கள், இளைஞர்கள், தொழிலாளர்கள் மற்றும் பெண்கள் போன்றோர் போராட்டத்தை தலைமை தாங்கி வழிநடத்திச் சென்றனர்.
- தபால் நிலையங்கள், தந்தி தபால் அலுவலகங்கள், ரயில்வே நிலையங்கள் போன்றவை தாக்கப்பட்டன.
- ஜெயபிரகாஷ் நாராயண், ராம் மனோகர் லோகியா, அருணா ஆசிப் அலி, சுஜேதா கிருபாலினி போன்றோர் மறைந்திருந்து போராட்டத்தை வழி நடத்தினர். பம்பாய் நகரத்தில் இருந்து இரகசியமாக ஒலிபரப்பப்பட்ட 'காங்கிரஸ் வானொலி' வழியாக தலைவர்கள் போராட்ட வீரர்களோடு பேசினர்.

பல இடங்களிலும் போராட்டம் வன்முறையாக மாறிய போதும் காந்திஜி வன்முறைகளைக் கண்டிக்கத் தயாராகவில்லை. அரசாங்கத்தின் வன்முறை தான் மக்களை கோபப்படுத்தியது என்பது காந்திஜியின் கருத்தாக இருந்தது. வன்முறையைக் கண்டிக்க வேண்டும் என்ற அரசாங்கத்தின் பிடிவாதத்திற்கு கீழ்ப்படிய மறுத்த காந்திஜி சிறையில் 21 நாட்கள் உண்ணாவிரதப் போராட்டத்தை அறிவித்தார். காந்திஜியை விடுவிக்கக் கோரி சர்வதேச செய்தித்தாள்கள் முன் வந்தது. ஆனால் காந்திஜி அனைத்தையும் முறியடித்து தனது உண்ணாவிரதப் போராட்டத்தை நிறைவு செய்தார்.

வெள்ளையனே வெளியேறு போராட்டத்தின் போது சில பகுதிகள் பிரிட்டிஷ் அதிகாரிகளின் கட்டுப்பாட்டில் இருந்து விடுதலையாக்கப்பட்டிருந்தது. அந்த இடங்களில் தற்காலிக அரசாங்கங்கள் நிறுவப்பட்டன.

**பல்லியா**

உத்தரப் பிரதேசத்தின் பல்லியாவில் சிட்டு பாண்டேயின் தலைமையில் ஓர் இணையான அரசாங்கம் நிறுவப்பட்டது.

**சத்தாரா**

மகாராஷ்டிராவின் சத்தாராவில் நானா பாட்டீலின் தலைமையில் நடைமுறைக்கு வந்த அரசாங்கம் 1945 வரை நீடித்தது.

**தாம்லுக்**

வங்காளத்தின் தாம்லுக்கில் நடைமுறைக்கு வந்த அரசாங்கம் ஒரு வருடக்காலம் வரை நீடித்திருந்தது. பள்ளிகளுக்கு உதவி வழங்கல், நீதிமன்றங்களை நிறுவுதல், உபரி தானியங்களை ஏழைகளுக்கு விநியோகித்தல் போன்றவற்றின் மூலம் அரசாங்கம் சிறப்பாகச் செயல்பட்டது.

சுதந்திரத்தை ஓர் அவசர இலக்காக மாற்றியது என்பதே வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் முக்கியத்துவம். அதிகாரப் பரிமாற்றம் தவிர்க்க முடியாததாக மாறியது. அதைத் தொடர்ந்து நடைபெற்ற நிகழ்வுகள் இவற்றை அடிக்கோடிட்டு காண்பித்தது.

வெள்ளையனே வெளியேறு போராட்டம் முன்னர் நடைபெற்ற போராட்டங்களிலிருந்து எவ்வாறு வேறுபட்டு இருந்தது என்பதை விவாதித்து குறிப்பு தயார் செய்யவும்.

## 'டெல்லி சலோ'

"இந்தியாவின் சுதந்திரத்திற்கான இறுதிப் போர் ஆரம்பமானது...... தேசப் பிதாவே, இந்தியாவின் விடுதலைக்கான இந்தப் புனிதப் போரில் உங்கள் ஆசிகளை நாங்கள் நாடுகிறோம்."

மேற்குறிப்பிட்டவை, 1944 ஜூலை 6 இல் 'ஆசாத் ஹிந்த்' என்ற வானொலியில் சுபாஷ் சந்திர போஸ் காந்திஜியை குறிப்பிட்டு ஆற்றிய உரையிலிருந்துள்ள வார்த்தைகள் ஆகும். இந்தியாவின் சுதந்திரத்திற்காக முற்றிலும் வேறுபட்ட பாதையைக் கைக்கொண்ட தலைவர் தான் சுபாஷ் சந்திரபோஸ். இரண்டு முறை காங்கிரசின் தலைவராகச் செயல்பட்ட சுபாஷ் சந்திரபோஸ், பின்னர், காந்திஜியுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகளைத் தொடர்ந்து காங்கிரசிலிருந்து ராஜினாமா செய்து 'ஃபார்வேர்ட் பிளாக்' என்ற கட்சியை உருவாக்கினார்.

### இந்திய தேசிய ராணுவம் (INA)



சுபாஷ் சந்திரபோஸும் கேப்டன் லட்சுமியும்

பிரிட்டிஷ் இந்திய ராணுவத்தில் அதிகாரியாக இருந்த மோகன் சிங் தான் இந்திய தேசிய ராணுவத்தை உருவாக்க முயற்சி செய்தார். பின்னர் சுபாஷ் சந்திரபோஸ் ஐ.என்.ஏ. வின் கட்டுப்பாட்டை ஏற்றெடுத்தார். ஐ.என்.ஏ. வின் செயல்பாடுகளில் பெண்களின் பங்களிப்பு மிகப்பெரிதாகக் காணப்பட்டது.

"ராணி ஜான்சி ரெஜிமெண்ட்" என்ற பெயரில் பெண்கள் பிரிவும் செயல்பட்டு வந்தது. இதற்கு கேப்டன் லட்சுமி சைகால் என்ற மலையாளி தலைமை தாங்கினார். ஐ.என்.ஏ. வில் இருந்த மற்றொரு மலையாளி வக்கம் அப்துல் காதர் ஆவார். அவர் ஆங்கிலேயர்களால் பிடிக்கப்பட்டு தூக்கிலிடப்பட்டார்.

இரண்டாம் உலகப்போரின் போது சிங்கப்பூருக்கு வந்த சுபாஷ் சந்திரபோஸ் இந்திய தேசிய ராணுவத்தின் (INA) தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். ஐ. என். ஏ. வை மறுசீரமைத்த அவர் ஜப்பானிய ராணுவத்துடன் இந்தியாவிற்கு அணிவகுத்துச் சென்றார். இருப்பினும் பிரிட்டிஷ் ராணுவத்தின் கடுமையான எதிர்ப்பை அவரது முயற்சிகளால் சமாளிக்க முடியவில்லை.

இலக்குகளை அடைவதில் போதிய வெற்றி கிடைக்கவில்லை என்றாலும், சுதந்திரப் போராட்டத்தின் இறுதிக் கட்டங்களில் மக்களிடையே உற்சாகத்தை உருவாக்க ஐ. என். ஏ. விற்கு முடிந்தது. இரண்டாம் உலகப்போர் முடிந்த பின் ஆங்கிலேயர்களால் பிடிக்கப்பட்ட ஐ. என். ஏ. யின் இராணுவ வீரர்களை டெல்லியில் உள்ள செங்கோட்டையில்

வைத்து விசாரணை செய்தனர். கேணல் பிரேம்சைகால், கேணல் ஜி.எஸ். தில்லன் ஷாநவாஸ்கான் போன்றவர்கள் மீதான விசாரணைக்கு எதிராக நடைபெற்ற பெரும் போராட்டங்களுக்கு நாடு சாட்சியானது. ஜவஹர்லால் நேரு உள்ளிட்ட காங்கிரஸ் தலைவர்கள் விசாரணையின் போது நீதிமன்றத்திற்குச் சென்றனர். 'தேசத் துரோகிகள் அல்ல தேசபக்தர்கள்' என்ற பெயரில் துண்டுப் பிரசுரங்கள் விநியோகம் செய்யப்பட்டன. போருக்குப் பின், பிரிட்டிஷ் அரசாங்கம் எதிர்கொண்ட மிகப் பெரிய சவால் ஐ. என். ஏ வீரர்கள் மீதான விசாரணைக்கு எதிராக நடைபெற்ற போராட்டங்களாகும்.

## சுதந்திரத்தை நோக்கி

இரண்டாம் உலகப்போரும், மாறிய சர்வதேச சூழல்களும் சுதந்திரத்தை நோக்கி உள்ள பயணத்தை துரிதப்படுத்தியது. அன்றைய வைசிராய் ஆக இருந்த வேவல் பிரபு இந்திய தலைவர்களுடன் கலந்துரையாடி சில பரிந்துரைகளை முன் வைத்தார். இந்தப் பரிந்துரைகளைக் குறித்து கலந்துரையாடல் செய்ய 1945 ஜூன் மாதம் சிம்லாவில் ஒரு மாநாடு கூட்டப்பட்டது என்றாலும் அது போதுமான பலனை அளிக்கவில்லை. சிம்லா மாநாட்டிற்குப் பின் நடைபெற்ற வேறு சில முக்கியமான நிகழ்வுகள் பின்வருமாறு:

**காபினட் மிஷன் (1946 மார்ச்)**

- அதிகாரக் கைமாற்றம் குறித்துக் கலந்துரையாடுவதற்காக இந்தியா வந்த, பிரிட்டிஷ் அமைச்சரவையின் 3 உறுப்பினர்களைக் கொண்ட ஆணையம். ஸ்டாஃபோர்ட் கிரிப்ஸ், பெத்திக் லாரன்ஸ் ஏ. வி. அலெக்சாண்டர் ஆகியோர் உறுப்பினர்களாக இருந்தனர்.



- அதிகாரக் கைமாற்றம் நடைபெறும் வரை இடைக்கால அரசாங்கத்தை அமைத்தல், இந்தியாவிற்கான அரசியலமைப்பை உருவாக்க ஓர் அரசியலமைப்பு உருவாக்கக் குழுவை அமைத்தல், போன்றவை முக்கியமான பரிந்துரைகள் ஆகும்.

**மவுண்ட் பாட்டன் திட்டம் (1947 ஜூன் 3)**

- இறுதி வைசிராயான மவுண்ட் பாட்டன் முன்வைத்த திட்டம்.
- நாட்டை இந்தியா, பாகிஸ்தான் என இரண்டாகப் பிரித்து சுதந்திரம் கைமாற்றம் செய்ய பரிந்துரைக்கப்பட்டது.

**இந்தியாவின் சுதந்திரம் (1947 ஆகஸ்ட் 15)**

- பிரிட்டிஷ் பாராளுமன்றம் நிறைவேற்றிய இந்திய சுதந்திரச் சட்டத்தின் படி 1947 ஆகஸ்ட் 15 அன்று இந்தியா சுதந்திரம் அடைந்தது.
- ஜவஹர்லால் நேரு சுதந்திர இந்தியாவின் முதல் பிரதமரானார்.

## ஆங்கிலேய ஆட்சியின் முடிவு

**1947 ஜூலை 18 வெள்ளிக்கிழமை**

பிரிட்டிஷ் பாராளுமன்றத்தின் மேல் சபையான ஹவுஸ் ஆஃப் லார்ட்ஸின் பெரிய மேஜையின் மீது ஆறாம் ஜார்ஜ் மன்னரின் ஒப்புதலுக்காக மசோதாக்கள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. மேஜையின் ஒரு பக்கத்தில் மன்னரின் பிரதிநிதியான எழுத்தரும் மறுபுறம் பாராளுமன்றத்தின் பிரதிநிதியும் நின்றிருந்தனர். பிரதமர் கிளமண்ட் ஆட்லியின் தலைமையில் ஹவுஸ் ஆஃப் காமன்ஸிலிருந்து 30 பேர் கொண்ட குழுவும் இதில் கலந்து கொண்டது.

பாராளுமன்ற பிரதிநிதியான எழுத்தர் ஒரு மசோதாவை கையில் எடுத்து இவ்வாறு வாசித்தார், 'சௌத் மெட்ரோபோலிற்றன் கேஸ் பில்'.

மன்னரின் பிரதிநிதி 'Le Roile Veult' (மன்னர் இதை அங்கீகரிக்கிறார்)

என்று பதிலளித்தார். பாராளுமன்ற பிரதிநிதி அடுத்த மசோதாவை கையில் எடுத்துக் கொண்டார்.

'தி பெலிக்ஸ் ஸ்டோவ் பியர் பில்'

மன்னரின் பிரதிநிதி, 'Le Roile Veult'

பாராளுமன்ற பிரதிநிதி இன்னொரு மசோதாவை கையில் எடுத்துக் கொண்டார்.

'இந்தியன் இண்டிபெண்டன்ஸ் பில்'

'Le Roile Veult' மண்டபத்தில் அரச பிரதிநிதியின் குரல் முழங்கியது

இந்தியா சுதந்திரம் அடைந்தது, பிரிட்டிஷ் ஆட்சி வரலாற்றின் ஒரு பகுதியாக மாறியது.

*Source:* Dominique Lapierre & Larry Collins, *Freedom at Midnight*

நவீன உலகம் கண்ட மிகப்பெரிய மக்கள் இயக்கங்களில் ஒன்றாகும் இந்திய சுதந்திரப் போராட்டம். பல வருடங்களாக நடைபெற்ற பிரிட்டிஷ் எதிர்ப்புப் போராட்டம் எப்போதும் சில மதிப்புகளை நிலை நிறுத்தி இருந்தது. அகிம்சை, ஜனநாயகம், தேசிய ஒருமைப்பாடு, மதச் சார்பின்மை, பன்மைத்துவம், சமூக நீதி, பொருளாதார தன்னிறைவு ஆகியவை இந்திய சுதந்திரப் போராட்டம் முன்வைத்த சில மதிப்புகள் ஆகும். இந்த மதிப்புகளை நிலைநிறுத்தி தேசத்தை கட்டி எழுப்பும் பணியில் நாம் ஒவ்வொருவரும் பங்காளிகளாக வேண்டும்.

## தொடர் செயல்பாடுகள்

- 1919 முதல் நடைபெற்ற இந்திய சுதந்திரப் போராட்டத்தின் முக்கிய நிகழ்வுகளை இணைக்கும் வகையில் தகவல் தொழில்நுட்பத்தின் உதவியுடன் சமூக அறிவியல் ஆய்வகத்தில் ஒரு கண்காட்சி நடத்தவும்.
- 'இந்திய சுதந்திரப் போராட்டமும் காந்திஜியும்' என்ற தலைப்பில் ஒரு டிஜிட்டல் வினாடி வினா போட்டியை நடத்தவும்.
- இந்திய சுதந்திரப் போராட்டத்தோடு தொடர்புடைய முக்கிய இடங்களை உள்ளடக்கிய மெய்நிகர் சுற்றுலாவை ஏற்பாடு செய்யவும்.

# 7

# சுதந்திர இந்தியாவின் தற்காலம்



புது தில்லியில் திரண்டு கூடிய இலட்சக்கணக்கான மக்கள்... எல்லா பகுதிகளில் இருந்தும் அவர்கள் வந்து சேர்ந்துள்ளனர். மகிழ்ச்சியோடு மணிகளை ஒலித்துக்கொண்டு வரிசை வரிசையாக அணிவகுத்த குதிரை வண்டிகள், மரச்சக்கரங்களில் இணைக்கப்பட்ட இருக்கைகளில் ஏராளம் மக்களைக் கொண்டு வருகின்ற ஜீனிகளும் குழம்புகளில் ஆரஞ்சு, பச்சை, வெள்ளை சாயத்தினால் அலங்கரிக்கப்பட்ட காளைகள். பல வண்ணங்கள் பூசப்பட்ட மேல் தட்டும் இரு வசங்களையும் கொண்ட வண்டிகளில் நிரம்பி வழியும் மக்கள் கூட்டம்... கழுதையின் மேலும் குதிரையின் மேலும் மிதிவண்டிகளிலும் நடந்தும் ஓடியும் மக்கள் வந்தனர்... தலைப்பாகையுடன் கிராமப்புற மக்கள் பண்டிகைக் கால வண்ண உடைகள் அணிந்தும் தங்களுடைய நகைகளைக் கையிலும் காதிலும் மூக்கிலும் அணிந்து தங்கள் குடும்ப பெண்களுடன் வந்தனர்... அவர்கள் சத்தமாகக் கூறினர் ஆங்கிலேயர்கள் விடை பெறுகிறார்கள்... நேரு ஒரு புதிய கொடியை ஏற்றப்போகிறார். நாம் சுதந்திரமாக்கப்பட்டிரிக்கிறோம்...

*ஆதாரம்: டோமினிக்லேப்பியர் & லாரி காலின்ஸ், நள்ளிரவில் சுதந்திரம்*

ஆங்கிலேயர்களின் மேலாதிக்கத்தில் இருந்து இந்தியா 1947 ஆகஸ்ட்15 ஆம் நாள் விடுதலைப் பெற்ற காலை நேரத்தில் டெல்லி நகரில் காணப்பட்ட பல்வேறு காட்சிகளே மேலே தரப்பட்டுள்ளன.



**சுதந்திர நட்சத்திரம் மறையாமல் இருக்கட்டும்**

**சுதந்திர இந்தியாவில் பிரதமரின் செய்தி.**

ஒரு புதிய நட்சத்திரம் சொந்த நாட்டில் ஒரு புதிய சுதந்திர நட்சத்திரம் உதிக்கிறது. ஒரு பிரகாசமான விடியல் உதிக்கிறது. ஒரு புதிய ஆசை உருவாகிறது. ஒரு நீண்டகால கனவுநிறைவேறுகிறது. அந்த நட்சத்திரம் மறையாதிருக்கட்டும். அந்த ஆசை ஏமாற்றம் அடையாமல் இருக்கட்டும்.

நியூ டெல்லி — ஜவஹர்லால் நேரு

இந்தியாவிற்கு சுதந்திரம் கிடைத்த போது ஒரு முன்னணி செய்தித்தாளில் வெளியான செய்தி

- இதிலிருந்து என்னென்ன தகவல்களை அறிந்துகொள்ள முடிகிறது?
- இந்தியாவின் முதல் சுதந்திரதின கொண்டாட்டம் வெறும் மகிழ்ச்சியை மட்டும் தந்த நிகழ்வாக இருந்ததா?

இந்திய சுதந்திரமடைந்த தினத்தைக் கொண்டாட சுற்றிலுமுள்ள பகுதிகளிலிருந்து மக்கள் டெல்லியில் குவிந்தனர். நமது நாடு சுதந்திரமடைந்ததோடு இந்தியா, பாகிஸ்தான் என இரண்டு சுதந்திர நாடுகளாகப் பிரிக்கப்பட்டன. இதனால் இந்தியாவின் முதல் சுதந்திரதினம் மகிழ்ச்சி கொண்டாட்டத்துடன் கவலையும் நிறைந்த ஒரு நிகழ்வாக மாறியது.

## பிரிவினைக்குப் பின் இந்தியா

நிலப்படம் 7.1 ஐ உற்றுநோக்கவும். அதில் இருந்து இந்தியா மற்றும் பாகிஸ்தானின் அமைவிடத்தை பிரித்து அறியவும். இந்த நிலப்படத்தின் தனிச்சிறப்புகள் எவை? இந்தியா பிரிக்கப்பட்டதைப் பற்றி என்னென்ன தகவல்களை இந்த நிலப்படத்தில் இருந்து உங்களுக்குக் கண்டுபிடிக்க முடிகிறது?




நிலப்படம் 7.1

•

இந்தியப் பிரிவினையின் தெளிவான விவரங்களை உள்ளடக்கிய நிலப்படத்தைத் தயார்செய்ய லண்டனின் புகழ்பெற்ற வழக்கறிஞராக இருந்த சிறில் ராட்கிளிப்புக்கு பொறுப்பு வழங்கப்பட்டது. பிரிவினையைத்தொடர்ந்து சில ஆங்கிலேய இந்திய மாகாணங்கள் பாகிஸ்தானின் ஒரு பகுதியாக மாறியிருந்ததாலும் பெரும்பாலான பகுதிகள் இந்தியாவில்தான் இருந்தன என்பதை நிலப்படத்தில் இருந்து நீங்கள் புரிந்துகொண்டீர்கள் அல்லவா? ஆனால், வங்காளம் மற்றும் பஞ்சாப் போன்ற மாகாணங்கள் மட்டுமே பிரிக்கப்பட்டன. மேற்கு வங்காளம் இந்தியாவுடன் நிலைநின்ற போது கிழக்கு வங்காளம் கிழக்குப் பாகிஸ்தானாக

மாறியது. அதுபோலவே கிழக்குப் பஞ்சாப் இந்தியாவுடனும் மேற்குப் பஞ்சாப் பாகிஸ்தான் பகுதியாகவும் மாறின. மேலும் அசாமில் நடத்தப்பட்ட மக்கள் வாக்களிப்பில் சில்ஹட் கிழக்குப் பாகிஸ்தானின் ஒரு பகுதியாக மாறியது.

பிரிவினைக்குப் பின்னர் பாகிஸ்தானின் ஒரு பகுதியாக இருந்த மேற்குப் பஞ்சாபில் இருந்து இந்துக்களும் சீக்கியர்களும் இந்தியாவுக்குள் குடி பெயர்ந்தனர். அதேவேளை இந்திய பஞ்சாபில் இருந்து முஸ்லீம்கள் பாகிஸ்தானுக்கு குடிபெயர்ந்தனர். வங்காளம் பிரிக்கப்பட்டாலும் பஞ்சாபில் நிகழ்ந்தது போன்று பெருமளவிலான குடிபெயர்தல் வங்காளத்தில் நிகழவில்லை. இதற்கு வழிவகுத்த முக்கிய காரணிகள் கீழே தரப்பட்டுள்ளன.

- 1905 வங்கப் பிரிவினைக்கு எதிராக மதச் சார்பின்மையை அடிப்படையாகக் கொண்ட தேசியவாதம் வலுவடைந்தது.
- வங்காள மக்களின் மொழி அடிப்படையிலான ஒற்றுமை.
- பிரம்மபுத்திரா நதி மற்றும் அதன் துணை நதிகளும் இரு நாடுகளுக்கும் இடையில் விரைவான குடிபெயர்தலுக்கு தடையாக இருந்தன.

இந்தியா – பாகிஸ்தான் பிரிவினையைத் தொடர்புப்படுத்தி ஒரு செய்தி அறிக்கை தயார் செய்க.

## சில்ஹட்டும் பொது வாக்கெடுப்பும்

ஆங்கிலேய ஆட்சியின் போது சில்ஹட், அசாம் மாகாணத்தின் ஒரு பகுதியாக இருந்தது. 1947 ஆம் ஆண்டு மவுண்ட் பேட்டன் திட்டம் பஞ்சாப் மற்றும் வங்காள பிரிவினையுடன் சேர்ந்து சில்ஹட்டில் பொது வாக்கெடுப்பு நடத்த பரிந்துரைத்தது. அதைத் தொடர்ந்து நடந்த பொதுவாக்கெடுப்பின் விளைவாக சில்ஹட்டின் பெரும்பாலான பகுதிகள் கிழக்கு பாகிஸ்தானுடன் இணைவதற்கு ஆதரவான முடிவை எடுத்தன. சில்ஹட்டின் கரிம்கஞ்ச் பகுதி மட்டுமே அசாம் மாகாணத்தின் ஒரு பகுதியாக இந்தியாவுடன் நிலைத்திருந்தது.




இந்தியாவின் சுதந்திர நிகழ்வை "வரலாற்றில் மிகப்பெரிய உறவு பிரிவு" என்று சுட்டிக்காட்டியது. அக்கால கட்டத்தில் முன்னணி நாளிதழாக விளங்கிய 'மான்செஸ்டர் கார்டியன்'.

## ராட் கிளிஃப் வரைந்த எல்லைக்கோடு

இந்தியா – பாகிஸ்தான் பிரிவின் எல்லைக்கோட்டை தயார் செய்த சிறில் ராட் கிளிஃப் அதற்கு முன்பு இந்தியாவின் புவியியல் சிறப்புத் தன்மைகளை அறிந்திருக்கவே இல்லை. அவ்வாறு இந்தியாவைப் பற்றி எந்தவொரு அடிப்படை அறிவும் பெற்றிராத அவர் வெறும் ஐந்து வாரங்களில் தயார் செய்ததே ராட்கிளிஃப் எல்லைக் கோடு.



## பிரிவினை துயரமாக மாறியபோது...

"பிரிவினை கால கலவரங்களின் போது ராவல் பிண்டி மாவட்டம் தோகா கல்சா கிராமத்தில் 90 பெண்கள் கிணற்றில் குதித்து இறந்த துயர நிகழ்வு. பஞ்சாப் மக்களின் மனநிலையைப் பெரிதும் பாதித்தது. ஆண்களால் காப்பாற்ற இயலாத நிலையில் தற்கொலை செய்துகொண்ட ராஜஸ்தானிய பெண்களின் பாரம்பரிய தன்மை இங்கு மீண்டும் உயிர் பெற்றது... ஒரு மாதத்திற்கு முன்பு கம்புகள், கைத்துப்பாக்கிகள், கையெறி குண்டுகளுடன் வந்த ஒரு வகுப்பு வாத கூட்டம் அந்த கிராமத்தைச் சுற்றி வளைத்தது. கிராமவாசிகள் முடிந்தவரை அவர்களை எதிர்த்து போராடினர். இறுதியில் சரணடைய வேண்டியநிலை ஏற்பட்டது. கூடி ஆலோசனை நடத்திய ஆக்கிரமிப்பாளர்கள் அவர்களிடம் பத்தாயிரம் ரூபாய் கேட்டனர். உடனே கிராமவாசிகள் அதைக் கொடுத்தனர். மீண்டும் வருவதில்லை என உறுதிகொடுத்து திரும்பிச் சென்றனர். அவர்கள் மறு தினமே கூடுதல் பணத்தைக் கேட்டனர். எதிர்த்துப் போராடியவர்களில் நாற்பது பேர்களை வெட்டிக் கொலை செய்தனர். அதிகமான ஆக்கிரமிப்பாளர்கள் இருந்ததால் எதிரிகளின் ஆக்கிரமைப்பை கிராம மக்களால் தடுத்து நிறுத்த இயலவில்லை. அங்குள்ள பெண்கள் அவசரப்பட்டு ஒன்று சேர்ந்தனர். அவர்களின் தன்மானத்தைத் தவிர பிறவற்றை இழக்க நேரிடும் என்பதை உணர்ந்த 90 பெண்கள் ஒரு சிறிய கிணற்றுக்குள் குதித்தனர். அதில் மூன்று பேர் காப்பாற்றப்பட்டனர். அனைவரும் மூழ்கி இறப்பதற்கான தண்ணீர் அந்தக் கிணற்றில் காணப்படவில்லை."

*Source:* Urvashi Butalia, *The Other Side of Silence*

மேலே கூறப்பட்டவை "மௌனத்தின் மறுபக்கம்" என்ற புத்தகத்தில் உள்ள ஊர்வசி புட்டாலியா கூறிய செய்தியாகும். (1947 ஏப்ரல் 15 இல் ஸ்டேட்ஸ்மேன் இதழில் வெளியிடப்பட்டது) பிரிவினை காலத்தில் பஞ்சாபில் இதுபோன்ற பல துன்பங்களை மக்கள் எதிர்கொள்ள வேண்டியிருந்தது. உற்றவர்களை இழந்த துக்க நினைவுகள் அப்பகுதிகளில் வாழும் மக்களிடம் இன்றும் காண இயலும். அவர்களின் மனப்பான்மையும் கருத்துகளும் உருவாகுவதில் இந்த நினைவுகள் இன்றும் தாக்கம் செலுத்துகின்றன.



எல்லைப் பகுதிகளில் இருந்து இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் குடிபெயரும் மக்களின் படங்கள்

பிரிவினை இது போன்ற ஏராளமான பிரச்சினைகளை உருவாக்கியது. அவை எவை எனக் காண்போம்.

- இலட்சக்கணக்கான அகதிகள் இந்தியாவிலிருந்து பாகிஸ்தானுக்கும் பாகிஸ்தானிலிருந்து இந்தியாவிற்கும் குடிபெயர்ந்தனர்.
- பரவலான வன்முறைகள் ஏற்பட்டு ஆயிரக்கணக் கானோர் கொல்லப்படவும் செய்தனர்.
- கொல்கத்தா, டெல்லி, லாகூர் போன்ற இடங்களில் வகுப்புவாத வன்முறைகள் வெடித்தன.
- ஏராளமான பெண்கள் அவமானப்படுத்தப்பட்டனர்.
- ஏராளமான பெண்கள் மற்றும் குழந்தைகள் கடத்தலுக்கு இரையாயினார்கள்.

பிரிவினையைத் தொடர்ந்து இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் மக்கள் எதிர்கொண்ட பல்வேறு பிரச்சனைகளை உள்ளடக்கிய ஒரு டிஜிட்டல் விளக்கக் காட்சியை தயாரித்து குழு அடிப்படையில் வகுப்பில் வெளியிடவும்.

## தேசத்தந்தை இரத்த சாட்சியானார்

"நமது வாழ்க்கையிலிருந்து வெளிச்சம் மறைந்து போய் இருக்கிறது. எங்கும் இருள் சூழ்ந்துள்ளது... வெளிச்சம் மறைந்துவிட்டது என்று நான் கூறினேனா? எனக்குத் தவறு நேர்ந்துவிட்டது. பிரகாசித்துக்கொண்டிருந்தது சாதாரண தீபம் அல்ல... ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்குப் பிறகும் அது இங்கும் பிரகாசத்தைத் தரும். நூற்றாண்டுகள் கடந்தும் ஆயிரமாயிரம் இதயங்களுக்கு அது ஆறுதலை வழங்கிக் கொண்டிருக்கும்"

மகாத்மா காந்தியின் இரத்தசாட்சியைப் பிரகடனம் செய்து அன்றைய பிரதமர் ஜவஹர்லால் நேரு நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையின் ஒரு பகுதிதான் மேலே தரப்பட்டுள்ளது.

இந்து–முஸ்லீம் ஒற்றுமைக்காக பாடுபட்ட காந்தியடிகளை நியூடெல்லியிலுள்ள பிர்லா மாளிகை முற்றத்தில் வைத்து 1948 ஜனவரி 30 ஆம் தேதி வகுப்புவாத தீவிரவாதியான நாதுராம் விநாயக் கோட்சே சுட்டுக் கொலை செய்தான்.



காந்தியின் பூத உடலை சுமந்துகொண்டு செல்லும் இறுதி அஞ்சலி ஊர்வலம்

காந்தியடிகளின் இரத்த சாட்சியுடன் தொடர்புடைய நாளிதழ் செய்திகள் மற்றும் படங்களைச் சேகரித்து பதிப்பு அறிக்கை தயார் செய்து வகுப்பில் வெளியிடவும்.

## அரசியலமைப்பின் படிகள்




அரசியலமைப்பு உருவாக்கம் நவீன இந்தியாவின் உருவாக்கத்திற்கு அடித்தளமாக அமைந்தது. 1946 டிசம்பர் 13 இல் அரசியலமைப்பு உருவாக்கக் குழுவின் முறையான செயல்பாடு தொடங்கியது. ஜவஹர்லால் நேரு 1947 ஜனவரி 22 இல் அறிவித்த இலட்சிய அறிக்கையை அரசியலமைப்பு உருவாக்கக் குழு அங்கீகரித்தது. அதைத் தொடர்ந்து 1949 நவம்பர் 26 இல் அரசியலமைப்பு உருவாக்கக் குழு புதிய அரசியலமைப்புக்கு அங்கீகாரம் வழங்கியது. 1950 ஜனவரி 26 இல் இந்திய அரசியலமைப்பு நடைமுறையில் வந்து இந்தியா ஓர் இறையாண்மை மிக்க மக்களாட்சி குடியரசாக மாறியது. அரசியலமைப்பு சட்டத்தின்படி 1951-1952 இல் நடைபெற்ற சுதந்திர இந்தியாவின் முதல் பொதுத்தேர்தலின் அடிப்படையில் இந்தியா ஒரு பாராளுமன்ற மக்களாட்சி அமைப்புடைய நாடாக நடைமுறைக்கு வந்தது.

## சுதந்திர இந்தியா எதிர்கொண்ட சவால்கள்

காலனிமயமாக்கலின் விளைவுகளை அனுபவித்த இந்தியா சுதந்திரமடைந்த போது ஏராளம் சவால்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. அவற்றில் முக்கியமானவை எவை என ஆய்வு செய்வோம்.

- அகதிகளின் மறுவாழ்வு
- நாட்டரசுகளின் இணைப்பு
- போர்த்துக்கீசிய மற்றும் பிரெஞ்சு காலனிகளை இணைத்தல்
- மொழி அடிப்படையிலான மாநிலங்களின் புனரமைப்பு
- இந்திய பொருளாதாரத்தை வலுவடையச் செய்தல்
- சுதந்திரமான ஒரு வெளிநாட்டுக் கொள்கையை உருவாக்குதல்

இந்த சவால்களை எதிர்கொள்வதற்காக இந்திய அரசாங்கம் கொண்டுவந்த நடவடிக்கையை விளக்கமாக பரிசோதிப்போம்.

## அகதிகளின் மறுவாழ்வு

பிரிவினையைத் தொடர்ந்து 60 இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் பாகிஸ்தானில் இருந்து இந்தியாவிற்குள் அகதிகளாக வந்தனர். அவர்களுக்கு மறுவாழ்வுளிக்க அரசு நடவடிக்கை மேற்கொண்டது. 1951 இல் தான் மேற்குப் பாகிஸ்தானிலிருந்து வந்த அகதிகளின் பிரச்சினை முழுமையாக தீர்க்கப்பட்டது. பிரிவினையின் போது கிழக்குப் பாகிஸ்தானில் இருந்து அகதிகள் வருகை ஒப்பீட்டளவில் குறைவாக இருந்தபோதிலும் பின்னாளில் கிழக்குப் பாகிஸ்தான் மற்றும் மேற்குப் பாகிஸ்தானுக்கு இடையேயான மோதலின் விளைவாக கிழக்குப் பாகிஸ்தானில் இருந்து

### வங்காளதேசம் உருவாக்கம்

1947 ஆகஸ்ட் 15 இல் இந்தியாவில் ஆங்கிலேய ஆட்சி முடிவுக்கு வந்தபோது இன்றைய வங்காள தேசம் உட்படும் பகுதி கிழக்குப் பாகிஸ்தான் என அழைக்கப்பட்டது. மேற்குப் பாகிஸ்தானில் இருந்து வேற்றுமையை எதிர்கொண்ட கிழக்குப் பாகிஸ்தான் 1971 இல் சுதந்திரம் பெற்று வங்காள தேசம் என்ற நாடாக மாறினது.

இந்தியாவிற்கு அகதிகளின் வருகை தொடர்ந்து கொண்டே இருந்தது. 1971 இல் வங்காள தேசத்தின் உருவாக்கத்திற்குப் பின்னர் இந்த அகதிகளின் பிரச்சினைக்கு தற்காலிகமாகத் தீர்வு காணப்பட்டது.

## நாட்டு அரசுகளின் இணைப்பு

1947 இல் இந்திய சுதந்திரச் சட்டத்தின்படி இந்தியாவிலுள்ள 565 நாட்டு அரசுகளுக்கு சுதந்திர இந்தியாவிலோ, பாகிஸ்தானிலோ இணையவோ அல்லது சுதந்திரமாக தொடரவோ உரிமை இருந்தது. நாட்டு அரசுகளை இந்திய யூனியனில் இணைப்பது என்பது மிக கடினமான செயலாக இருந்தது. இச்செயலை வெற்றிகரமாக நிறைவேற்றியவர்கள் உள்துறை அமைச்சராக இருந்த சர்தார் வல்லபாய் பட்டேல் மற்றும் வெளியுறவுத்துறை செயலாளர் வி. பி. மேனோன் ஆவார். இணைப்பு ஒப்பந்தத்தில் (Instrument of Accession) கையெழுத்திட்டு இந்திய யூனியனில் இணைய அனைத்து நாட்டு அரசர்களும் அழைக்கப்பட்டனர். ஆனால் ஜுனக்கட், காஷ்மீர், திருவிதாங்கூர் மற்றும் ஹைதராபாத் நாட்டு அரசர்கள் இந்திய யூனியனில் இணைய மறுத்துவிட்டனர். இந்த நாட்டு அரசர்களை சமாதான பேச்சு வார்த்தை மூலமாகவும் இராணுவ நடவடிக்கை வழியாகவும் இந்திய யூனியனில் இணைக்கப்பட்டது. இந்திய யூனியனில் இணைக்கப்பட்ட நாட்டு அரசர்களுக்கு மன்னர் மானியம் வழங்கப்பட்டது.



சர்தார் வல்லபாய் பட்டேல்



வி.பி. மேனோன்

### மன்னர் மானியம் (Privy Purse)

இந்திய யூனியனில் இணைய நாட்டரசுகளுடன் இந்திய அரசு சில ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டது. இதனைத் தொடர்ந்து நாட்டரசுகளுக்கு அதிகாரமும் வருமானமும் இழக்க நேரிட்டது. இதற்கு ஈடாக நாட்டு அரசுக் குடும்பங்களுக்கு நிதியுதவியாக அரசு ஒரு குறிப்பிட்ட தொகையை வழங்கியது. இதுவே மன்னர் மானியம் என அழைக்கப்பட்டது. இதற்காகப் பெரும் தொகையை அரசு செலவு செய்ய வேண்டியிருந்தது. 1971 இல் பிரதமர் இந்திரா காந்தியின் ஆட்சி காலத்தில் அரசியலமைப்புச் சீர்திருத்தச் சட்டம் 26 இன் படி மன்னர் மானியம் வழங்குவது நிறுத்தப்பட்டது.

இந்திய யூனியனில் நாட்டரசுகளின் இணைப்பு என்ற தலைப்பில் வகுப்பில் ஒரு கலந்துரையாடல் நடத்தவும்.

## பிரெஞ்சு –போர்ச்சுக்கீசிய ஆட்சிப் பகுதிகளின் விடுதலை

1947 இல் இந்தியா ஆங்கிலேயர்களிடமிருந்து சுதந்திரம் அடைந்த பின்னரும் நாட்டின் சில பகுதிகள் அந்நிய சக்திகளான பிரெஞ்சு மற்றும் போர்ச்சுகீசியர்களின் அதிகாரத்திற்கு உட்பட்டிருந்தன. இதற்கு எதிராக அந்தந்த பகுதிகளில் மக்கள் போராட்டங்கள் தீவிரமடைந்தன. அதைத்தொடர்ந்து




நிலப்படம் 7.2

இந்திய அரசின் வேண்டுகோளை ஏற்று பிரான்ஸ் 1954இல் இந்தியாவை விட்டுச் செல்ல தயாரானது. அதைத்தொடர்ந்து பாண்டிச்சேரி, மாஹி, யானம், காரைக்கால், சந்திர நகர் போன்ற பிரெஞ்சு ஆட்சிப் பகுதிகள் மத்திய அரசின் நேரடி ஆட்சியின் கீழ் வந்தன. ஆனால் போர்ச்சுகீசியர் தங்கள் ஆட்சியின் கீழ் இருந்த கோவா, டையூ மற்றும் டாமனை விட்டுக் கொடுக்க மறுத்துவிட்டனர். 1954இல் ஏற்பட்ட மக்கள் போராட்டத்தைத் தொடர்ந்து தாத்ரா, நாகர்ஹவேலி பகுதிகளில் போர்ச்சுகீசிய ஆட்சி முடிவுக்கு வந்தது. பின்னர் 1961 இல் ராணுவ நடவடிக்கையின் மூலமாக கோவா, டாமன் மற்றும் டையூவை விடுதலைப் பெறச் செய்து இந்திய யூனியனுடன் இணைக்கப்பட்டன.

நிலப்படம் 7.2 லிருந்து பிரெஞ்சு –போர்ச்சுக்கீசிய ஆட்சிப் பகுதிகளைக் கண்டுபிடித்து அட்டவணைப்படுத்தவும்.

## மொழி அடிப்படையிலான மாநிலங்களின் புனரமைப்பு

> மொழி அடிப்படையில் மாகாணங்கள் உருவாக்கப்பட்டால் அது வட்டார மொழிகளுக்கு ஊக்கமளிப்பதாக இருக்கும்...
>
> மகாத்மா காந்தியடிகள்.

- தற்போதுள்ள பெரும்பாலான மாநிலங்கள் எதன் அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ளன?
- நமது அண்டை மாநிலங்களின் அதிகாரப்பூர்வமான மொழிகள் எவை?

இன்று பெரும்பாலான மாநிலங்களும் மொழியின் அடிப்படையில் தான் உருவாக்கப்பட்டுள்ளன என்பதைப் புரிந்து கொண்டீர்கள் அல்லவா? ஆனால் சுதந்திரத்திற்கு முன்பு நாட்டின் ஆட்சிப் பகுதிகளின் (மாகாணங்கள்) எல்லைகள் மொழியின் அடிப்படையில் உருவாக்கப்படவில்லை. கருத்துப் பரிமாற்றத்திற்கும் கலாச்சார உருவாக்கத்திற்கும் மொழி வலுவான தாக்கத்தை செலுத்துவதால், மொழி அடிப்படையில் ஆட்சிப் பகுதிகள் உருவாக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை சுதந்திரப் போராட்ட காலத்திலேயே எழுப்பப்பட்டது. தேசிய இயக்கத்திற்கு மக்களை அதிக அளவில் ஈடுபடுத்த இந்திய தேசியக் காங்கிரஸ்

தாய்மொழிக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து கருத்துக்களைப் பரப்பியது. 1920 இல் நடைபெற்ற நாக்பூர் காங்கிரஸ் மாநாட்டில் வைத்து மொழி அடிப்படையிலான காங்கிரஸ் கமிட்டிகள் உருவாக்கத் தீர்மானிக்கப்பட்டது.

சுதந்திரத்திற்குப் பின்னர் மொழி அடிப்படையில் மாநிலங்களின் புனரமைப்புடன் தொடர்புடைய முக்கிய படிநிலைகள் கீழே தரப்பட்டுள்ளன.

- மாநில புனரமைப்பைக் குறித்து ஆய்வு செய்ய அரசியலமைப்புக் குழு 1948 ஆம் ஆண்டு எஸ். கே . தர் தலைமையில் ஒரு சிறப்பு மொழி ஆணையத்தை நியமித்தது.
- மொழி அடிப்படையிலான மாநிலங்கள் வேண்டுமென வலுவான கோரிக்கை பற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க 1948 ஆம் ஆண்டு இந்திய தேசிய காங்கிரஸ் ஜவஹர்லால் நேரு, சர்தார் வல்லபாய் பட்டேல், பட்டாபி சீதாராமையா போன்றவர்கள் அடங்கிய ஒரு குழுவை அமைத்தது.
- தெலுங்கு மொழி பேசுபவர்களுக்குத் தனியாக ஆந்திர மாநிலம் வேண்டும் என்ற கோரிக்கை எழுந்த போது 1952 இல் கோரிக்கையை முன்னிறுத்தி பொட்டி ஸ்ரீ ராமுலு உண்ணாவிரதம் இருந்து உயிர் நீத்தார். அதைத்தொடர்ந்து நடந்த போராட்டத்தின் விளைவாக 1953 அக்டோபர் 1 ஆம் தேதி ஆந்திர மாநிலம் உருவானது..
- நீதிபதி ஃபசல் அலி தலைமையில் சர்தார் கே. எம். பணிக்கர், எச். என். குன்ஸ்ரூ ஆகிய உறுப்பினர்களை உட்படுத்தி மாநில புனரமைப்பு ஆணையத்தை (State Reorganisation Commission) 1953 இல் மத்திய அரசு நியமித்தது.
- 1956 இல் மாநில புனரமைப்பு மசோதா பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டதன் அடிப்படையில் 1956 நவம்பர் 1 ஆம் தேதி 14 மொழி அடிப்படையிலான மாநிலங்களும் 6 மத்திய ஆட்சிப் பகுதிகளும் உருவாக்கப்பட்டன.



பட்டாபி சீதாராமையா



நீதிபதி ஃபசல் அலி



சர்தார் கே. எம். பணிக்கர்



எச். என். குன்ஸ்ரூ

1956 இல் உருவாக்கப்பட்ட மாநிலங்கள் எவை? ஒவ்வொரு மாநிலத்தின் மொழியைக் கண்டறிந்து அட்டவணை தயார் செய்க.

## இந்திய பொருளாதார அமைப்பை வலுப்படுத்துதல்

'நாம் அரசியல் ரீதியாக சுதந்திரமாக காணப்படலாம். ஆனால் நமது சுதந்திரத்திற்கான போராட்டம் அந்தச் சொல்லுக்கான உண்மையான பொருள் இன்னமும் முடிவு பெறவில்லை. அதன் பொருளாதார நிலமை முழுமை பெறவில்லை...'

(1949 இல் ஜவஹர்லால் நேரு முதல் அமைச்சர்களுக்கு எழுதிய சிறப்புக் கடிதம்)
Aditya Mukherjee, *Nehru's India*

## இந்தியத் திட்டமிடுதலில் மைல்கல்கள்

- 1938 இல் தேசியத் திட்டமிடல் குழு (National Planning Committee) அமைக்கப்பட்டது.
- 1944 இல் தயாரிக்கப்பட்ட பம்பாய் திட்டம்.
- இந்தியாவின் எதிர்காலப் பொருளாதார நிலையைக் குறித்து தொலைநோக்குப் பார்வையுடன் முன்வைத்த எம். என். ராயின் மக்கள் திட்டம்.
- காந்தியக் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்ட ஜெ.சி. குமரப்பாவின் திட்டம்,
- 1950 மார்ச் 15 இல் நேருவின் தலைமையில் உருவாக்கப்பட்ட தேசியத் திட்டமிடல் ஆணையம் (National Planning Commission)
- 1951 முதல் தொடங்கப்பட்ட ஐந்தாண்டு திட்டங்கள்
- 2015ல் நடைமுறைக்கு வந்த நீதி ஆயோக்

ஆங்கிலேய ஆட்சியின் விளைவாக வீழ்ச்சியடைந்த இந்தியப் பொருளாதாரத்தைச் சீரமைக்க வேண்டியதன் தேவையை இந்தக் கடிதம் சுட்டிக்காட்டுகிறது.

1947 இல் நாம் சுதந்திரம் பெற்றாலும் இந்தியாவில் தீர்வு காண வேண்டிய ஏராளமான பொருளாதார சிக்கல்கள் காணப்பட்டன. அவற்றை எவ்வாறு கடந்து வந்தோம் என்பதைப் பார்ப்போம். சோவியத் யூனியனின் பொருளாதாரத் திட்டமிடலை மாதிரியாகப் பின்பற்றி இந்தியாவில் திட்டக் குழுவை உருவாக்க ஜவஹர்லால் நேரு முயற்சி செய்தார். அதன் விளைவாகச் சுதந்திரத்திற்குப் பின் இந்திய பொதுத்துறைக்கு முக்கியத்துவம் அளிக்கக்கூடிய கலப்புப் பொருளாதாரத்தைப் பின்பற்றியது.

**'அணைக்கட்டுகள் – நவீன இந்தியாவின் கோயில்கள்'**
**(ஜவஹர்லால் நேரு)**



1959 ஆம் ஆண்டு இந்தியப் பிரதமராக இருந்த ஜவஹர்லால் நேரு, தாமோதர் நதியில் பாஞ்சேத் அணைக்கட்டை (இன்றைய ஜார்கண்ட்) சந்தாள் பழங்குடியினத்தைச் சேர்ந்த பெண்மணி புதினி மெஜ்ஹானை வைத்து அணையை திறந்து வைத்தார்.

சுதந்திர இந்தியாவின் முக்கியமான பிரச்சனைகள் உணவு பற்றாக்குறையும் வறுமையும் ஆகும். இவற்றை எதிர்கொள்வதற்கான முதல் ஐந்தாண்டு திட்டத்தில் வேளாண்மைக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. வேளாண்மைத் தொழில்துறைகளின் வளர்ச்சிக்காக நீர்ப்பாசன வசதியும் மின்சக்தி உற்பத்தியும் மிகத் தேவையாக இருந்தன. எனவே நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் அணைக்கட்டுகள் கட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. சட்லஜ் நதியின் குறுக்கே கட்டப்பட்ட பக்ராநங்கல், தாமோதர் நதி பள்ளத்தாக்குத் திட்டம், மகாநதி குறுக்கே கட்டப்பட்ட ஹிராகுட் போன்றவை அக்காலத்தில் கட்டப்பட்ட மிக முக்கிய நதிநீர் சேமிப்புத் திட்டங்கள் ஆகும்.

பொருளாதார வளர்ச்சியை உறுதி செய்வதற்கும் வேலையில்லாத் திண்டாட்டத்திற்கு தீர்வு காண்பதற்காகவும் இரண்டாம் ஐந்தாண்டு திட்டத்தில் தொழில்துறையின் வளர்ச்சிக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. பொதுத்துறையை வலு உள்ளதாக்கி, அதன் வழியாக நாட்டை வளர்ச்சி அடைய செய்வதுதான் ஐந்தாண்டு திட்டங்களின் நோக்கமாக இருந்தது.

வெளிநாடுகளின் நிதி மற்றும் தொழில்நுட்ப உதவியுடன் பொதுத்துறையில் இரும்பு உருக்கு தொழிற்சாலைகள் தொடங்கப்பட்டன. அவற்றில் முக்கியமானவை கீழே தரப்பட்டுள்ளன.

| இரும்பு உருக்கு தொழிற்சாலைகள் | அமைந்துள்ள மாநிலம் | உதவி புரிந்தநாடுகள் |
|---|---|---|
| • ரூர்கேலா இரும்பு உருக்குத் தொழிற்சாலை | • ஒடிசா | • ஜெர்மனி |
| • பிலாய் இரும்பு உருக்குத் தொழிற்சாலை | • சத்தீஸ்கர் | • சோவியத் யூனியன் |
| • துர்காப்பூர் இரும்பு உருக்குத் தொழிற்சாலை | • மேற்கு வங்காளம் | • யுனைட்டெட் கிங்டம் (யு.கே) |
| • பொக்காரோ இரும்பு உருக்குத் தொழிற்சாலை | • ஜார்கண்ட் | • சோவியத் யூனியன் |

பின்னர் வந்த திட்டங்களில் வறுமை ஒழிப்பு, உணவு தன்னிறைவு, கல்வி, மின்னாற்றல் உற்பத்தி போன்ற துறைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. நிலச் சீர்திருத்தம், வேளாண்மை, வங்கி போன்ற துறைகளிலும் சுதந்திர இந்தியாவில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டன.

ஐந்தாண்டு திட்டங்கள் வாயிலாக சுதந்திர இந்தியாவின் பொருளாதார அமைப்பைப் பாதுகாக்க முடிந்ததா? வகுப்பில் ஒரு குழு விவாதம் நடத்தவும்.

## நிலச் சீர்திருத்தம் (Land Reforms)

சுதந்திர இந்தியாவில் வேளாண்துறையில் குறிப்பிடத்தக்க மாற்றத்திற்கு அடித்தளமிட்டது நிலச் சீர்திருத்தம் ஆகும். தனிநபர்கள் சொந்தமாக வைத்துக் கொள்ளும் நிலத்தின் அளவை நிர்ணயப்படுத்துவதுதான் இதன் நோக்கமாகும். சுதந்திரத்திற்கு முன்னரே இந்தியாவில் நிலச் சீர்திருத்தம் என்ற கருத்து இருந்தது. நேருவின் தலைமையில் கூடிய ஒரு குழுவின் பரிந்துரையின்படி பொருளாதார முன்னேற்றத்தை நோக்கமாகக் கொண்டு ஜெ.ஸி. குமரப்பாவின் தலைமையில் ஒரு வேளாண் சீர்திருத்தக் குழு அமைக்கப்பட்டது (Agrarian Reforms Committee) குழு அறிக்கையின் அடிப்படையில் நில உடமையாளர்கள் வைத்துக் கொள்ளும் நிலத்தின் வரம்புகளை நிர்ணயம் செய்வதன் வழியாக உபரி நிலம் கைப்பற்றப்பட்டு நிலமற்ற விவசாயிகளுக்குப் பகிர்ந்து

### பூமிதான இயக்கம் (Bhoodan Movement)


வினோபாபாவே

சட்டப்பூர்வமாக அல்லாமல் நிலச் சீர்திருத்தத்தை அமல்படுத்த வினோபாபாவின் தலைமையில் பூமிதான இயக்கம் தொடங்கப்பட்டது. வினோபாபாவேயும் அவரது ஆதரவாளர்களும் கிராமம் கிராமமாக நடைப்பயணம் மேற்கொண்டனர். பெரிய நில உடமையாளர்களைத் தங்கள் நிலத்தில் ஆறில் ஒரு பங்கைப் பூமிதானமாக வழங்குமாறு வற்புறுத்தினர். அவ்வாறு கிடைத்த நிலத்தை நிலமற்றவர்களுக்கு பகிர்ந்தளித்தனர். நிலச் சீர்திருத்த சட்டங்கள் நடைமுறையில் வந்தபோது பூமிதான இயக்கம் அதன் முக்கியத்தை இழந்தது.

அளிக்கப்படுவதற்கான சட்டம் நடைமுறைக்கு வந்தது. இது ஓரளவுக்கு வறுமை ஒழிப்புக்கும் உணவு உற்பத்தியைப் பெருக்கவும் துணை புரிந்தது.

## உணவு உற்பத்தி –புரட்சியின் வழியாக


டாக்டர் எம். எஸ். சுவாமிநாதன்

உணவு உற்பத்தி துறையில் தன்னிறைவு அடைய 1960 முதல் இந்தியா செயல்படுத்திய திட்டங்கள் இத்துறையில் பெருமளவிலான மாற்றங்களை ஏற்படுத்தியதால் இதனைப் புரட்சி என்கின்றோம். அரசியல் தலைவர்கள் மற்றும் அறிவியலாளர்களின் கூட்டு முயற்சிதான் உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெற இந்தியாவிற்கு உதவியது. பசுமைப் புரட்சி (Green Revolution) வேளாண்துறையின் வளர்ச்சி மற்றும் உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெறும் நோக்கத்துடன் தொடங்கப்பட்டது. அதிக உற்பத்தி திறன்கள் கொண்ட விதை இனங்கள், நீர்ப் பாசன வசதி, ரசாயன உரங்கள், பூச்சிக்கொல்லி மருந்துகள், அதிநவீன தொழில்நுட்ப எந்திரங்கள் போன்றவைகளைப் பயன்படுத்தி குறுகிய காலத்தில் வேளாண் துறையில் ஏற்படுத்தப்பட்ட மாற்றங்கள் பசுமைப் புரட்சி என அழைக்கப்படுகிறது.1960 முதல் 1970 வரையும் 1970 முதல் 1980 வரையும் இரண்டு கட்டங்களாகப் பசுமைப் புரட்சி நடந்தது. டாக்டர் எம். எஸ். சுவாமிநாதன் இந்தியாவின் பசுமைப் புரட்சியின் தந்தை என அழைக்கப்படுகிறார்.

### வெண்மைப் புரட்சி


டாக்டர் வர்கீஸ் குரியன்

மலையாளியான டாக்டர் வர்கீஸ் குரியன் தலைமையில் இந்தியாவில் பால் உற்பத்தியில் தேவையான மாற்றங்களுக்கும் வெண்மைப் புரட்சி துவக்கம் குறித்தது. இதன் பகுதியாக குஜராத்தில் ஆனந்த் என்ற நகரத்தில் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கம் என்ற பெயரில் பால் உற்பத்தியாளர்கள் சங்கம் செயல்பட தொடங்கியது. இது படிப்படியாக 'அமுல்' (Anand milk union limited) என்ற புகழ்பெற்ற பால் உற்பத்தியாளர் சங்கமாக மாறியது.

பசுமைப் புரட்சியைத் தொடர்ந்து பால் மற்றும் பால் உற்பத்திப் பொருட்களின் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்குடன் நடைமுறைப்படுத்திய வெண்மைப் புரட்சியும் (White Revolution) மீன் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்குடன் நீலப் புரட்சியும் (Blue Revolution) இந்தியாவில் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டன. இதன் வழியாக நாட்டில் ஏராளம் வேலை வாய்ப்புகளை உருவாக்கவும் நாட்டின் பொருளாதார வளர்ச்சியை உறுதி செய்யவும் இயன்றது.

வேளாண் துறையில் ஏற்பட்ட புரட்சிகள் உணவு உற்பத்தியை அதிகரிக்க எவ்வாறு உதவி செய்தன?

## வங்கிகளின் தேசியமயமாக்கல் (Nationalisation of Banks)

சுதந்திர இந்தியாவில் வங்கிகள் பெரிய தொழில் அதிபர்கள் மற்றும் செல்வந்தர்களின் ஆதிக்கத்தில் இருந்தன. வங்கிகள் செல்வந்தர்களுக்கு முன்னுரிமை வழங்கியதால் விவசாயிகள் மற்றும் சாதாரண மக்களுக்கு வங்கி சேவைகளும் கிடைக்காமல் இருந்தன. பின்னர் 1969 ஆம் ஆண்டில்

இந்திரா காந்தி தலைமையிலான இந்திய அரசு 14 முக்கிய வங்கிகளின் உரிமையை ஏற்றுக்கொண்டது. இது வங்கிகளின் தேசியமயமாக்கல் என்று அழைக்கப்படுகிறது. பிற்காலத்தில் அரசு மேலும் 6 வங்கிகளின் உரிமையை ஏற்றுக்கொண்டது.

சுதந்திரத்திற்குப் பின் இந்தியா திட்டங்களின் அடிப்படையிலான ஒரு பொருளாதாரக் கொள்கையைப் பின்பற்றியது என்பதை நாம் பார்த்தோம் அல்லவா? பொதுத்துறையை வலுப்படுத்துவதற்கு இத்தகைய பொருளாதாரக் கொள்கைகள் துணை புரிந்தன. 1990 களில் நாட்டின் பொருளாதாரக் கொள்கைகளில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டன. அதனைத் தொடர்ந்து தாராளமயமாக்கல், தனியார்மயமாக்கல் மற்றும் உலகமயமாக்கல் போன்ற பொருளாதாரக் கொள்கைகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டது. அதன் பயனாக பொதுத்துறையில் பல தொழில் நிறுவனங்களும் தனியார்மயமாக்கப்பட்டன.

சுதந்திரத்திற்குப் பின் இந்தியாவில் நடைமுறைப்படுத்தி வரும் பொருளாதாரச் சீர்திருத்தங்களின் நன்மை தீமைகள் பற்றி வகுப்பில் ஒரு விவாதம் நடத்தவும்.

## கல்வி

இந்தியாவில் நவீன கல்விக்கு அடித்தளம் இட்டது ஆங்கிலேயர்களின் ஆட்சி காலத்தில் தான் என நீங்கள் ஏற்கனவே கற்றிருந்தீர்கள். சுதந்திரத்திற்குப் பின்னர் இந்தியாவின் கல்வியைப் பற்றி ஆய்வு செய்யவும் பரிந்துரைகள் வழங்கவும் அரசு பல கட்டங்களாகப் பல்வேறு ஆணையங்களை ஏற்படுத்தியது.

சுதந்திர இந்தியாவின் முக்கிய கல்வி ஆணையங்களும் அவை கவனம் செலுத்தும் முக்கிய துறைகளும் கீழே தரப்பட்டுள்ளன.

| கல்வி ஆணையம் / கல்விக் கொள்கை | ஆண்டு | கவனம் செலுத்திய துறைகள் |
|---|---|---|
| டாக்டர் ராதாகிருஷ்ணன் ஆணையம் | 1948 | பல்கலைக்கழக கல்வி |
| டாக்டர் லக்ஷ்மண சாமி முதலியார் ஆணையம் | 1952 | உயர்நிலைக் கல்வி |
| டாக்டர் டி. எஸ். கோத்தாரி ஆணையம் | 1964 | கல்வியின் தேசிய அமைப்பு |
| தேசியக் கல்விக் கொள்கை | 1986 | ஆரம்பக் கல்வி, தொழிற்கல்வி |
| தேசியக் கல்விக் கொள்கை | 2020 | மழலையர் கல்வி முதல் மேல்நிலைக் கல்வி வரை, உயர்கல்வி |

'சுதந்திர இந்தியாவில் கல்வி முன்னேற்றம்' என்ற கருத்தை மையமாகக் கொண்டு வகுப்பில் ஒரு கருத்தரங்கம் நடத்தவும்.

## அறிவின் புரட்சி: அறிவியல் தொழில்நுட்பம் வழியாக

> "அறிவியல் முன்னேற அனுமதிக்கப்பட்டால் அதன் முன்னேற்றத்திற்கு எந்த எல்லையும் இல்லை."
>
> (ஜவஹர்லால் நேரு –இந்தியாவைக் கண்டடைதல்)



ஹோமி ஜே பாபா



மேக்நாத் சாகே

இந்தியாவின் எதிர்காலத்தை நிர்ணயிப்பதில் அறிவியல் வளர்ச்சி ஒரு தவிர்க்க முடியாத காரணி என்பதைப் புரிந்து கொண்ட ஜவஹர்லால் நேருவின் கூற்றையே மேலே நீங்கள் வாசித்தீர்கள். இந்தியாவில் அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சியை அவர் ஊக்குவித்தார். அத்துடன் அறிவியல் மனப்பான்மையை (Scientific Temper) அடிப்படையாகக் கொண்ட ஒரு சமூக கண்ணோட்டத்தை உருவாக்குவதைத் தமது குறிக்கோளாகக் கொண்டார். இதற்காக ஹோமி ஜே பாபா மற்றும் மேக்நாத் சாகே போன்ற அறிவியல் ஆலோசகர்களின் சேவைகள் அவருக்குக் கிடைத்தன.

சுதந்திர இந்தியாவில் அறிவியல் புரட்சியை ஊக்குவிக்கும் வகையில் ஏராளம் நிறுவனங்கள் அக்காலகட்டத்தில் உருவாயின. அவற்றுள் முக்கியமானவை கீழே தரப்பட்டுள்ளன.

- இந்தியத் தொழில்நுட்பக் கழகம் (IIT)
- தேசிய வைராலஜி நிறுவனம் (NIV)
- பாபா அணு ஆராய்ச்சி மையம் (BARC)
- அகில இந்திய மருத்துவ அறிவியல் கழகம் (AIIMS)
- பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு (DRDO)
- இந்திய மேலாண்மை கழகம் (IIM)

### சிரிக்கும் புத்தர் (Smiling Buddha)

பாபா அணு ஆராய்ச்சி நிலையம் இந்தியாவில் அணு ஆயுத சோதனைக்குத் தலைமையிடமாக உள்ளது. 1974 மே 18–இல் இந்தியா தனது முதல் அணு ஆயுத சோதனையை ராஜஸ்தானிலுள்ள பொக்ரானில் நடத்தியது. இந்த அணு ஆயுத சோதனை "சிரிக்கும் புத்தர் " என்ற பெயரில் அறியப்படுகிறது. இந்த ஆராய்ச்சி அந்த ஆண்டின் புத்த பூர்ணிமா நாளில் நடத்தப்பட்டதால் இதற்கு இப்பெயர் சூட்டப்பட்டது. 1998 இல் பொக்ரானில் நடத்திய இரண்டாவது அணு ஆயுத பரிசோதனை "ஆப்ரேஷன் சக்தி "எனப்படும்.

இந்தியாவில் அறிவியல் தொழில்நுட்பத் துறையில் செயல்படும் முக்கிய நிறுவனங்களின் படங்களும் அவற்றை பற்றிய விளக்கங்களும் உட்படுத்தி ஒரு மின் பதிப்பு (Digital Magazine) தயார் செய்க.

## விண்வெளி ஆராய்ச்சி



விக்ரம் சாராபாய்

விண்வெளி ஆராய்ச்சித் துறையில் முன்னேறிக் கொண்டிருக்கும் நாடாகும் இந்தியா. இந்திய விண்வெளி ஆராய்ச்சிக்கான அடிப்படை நோக்கம் என்பது நாட்டின் வளர்ச்சியில் விண்வெளி தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதே ஆகும். ஹோமி ஜே பாபா, விக்ரம் சாராபாய் ஆகியோர் விண்வெளி ஆராய்ச்சியில் பாராட்டதக்க சேவை செய்த இந்தியாவின் முக்கிய அறிவியலாளர்கள் ஆவார்.

நமது நாட்டில் விண்வெளி ஆராய்ச்சியை நோக்கமாகக் கொண்டு செயலாற்றும் பல்வேறு நிறுவனங்கள் செயல்படுகின்றன. அவற்றில் முக்கியமான நிறுவனம் 1969 இல் பெங்களூருவை தலைமையிடமாகக் கொண்டு நிறுவப்பட்ட இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையமாகும் (ISRO). ஸ்ரீ ஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி மையம், ஹைதராபாத்தை தலைமையிடமாக கொண்டு செயல்படும் தேசிய தொலை நுண்ணுணர்வு மையம் (NRSC), திருவனந்தபுரத்தில் உள்ள விக்ரம் சாராபாய் விண்வெளி ஆய்வு மையம் (VSSC) போன்றவை இந்திய விண்வெளி ஆராய்ச்சி துறையின் கட்டுப்பாட்டில் இயங்கும் பிற நிறுவனங்களாகும்.



சதீஸ் தவான் விண்வெளி மையம்

விண்வெளி ஆய்வுப் பணிகளில் இந்தியாவை உலகின் உச்சத்திற்கு கொண்டு சென்ற பாராட்டுக்குரிய முக்கிய சாதனைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

- 1975 ஏப்ரல் 19 இல் இந்தியாவின் முதல் செயற்கைக்கோளான ஆரியபட்டா விண்ணில் ஏவப்பட்ட திட்டம்.
- சந்திராயன் I, சந்திராயன் II, சந்திராயன் III போன்ற சந்திரனின் ஆய்வு திட்டங்கள்.
- 2013 இல் மங்கள்யான் திட்டம்.
- சூரிய ஆய்வு மற்றும் விண்வெளி காலநிலை ஆராய்ச்சிக்கான ஆதித்யா L 1 ஏவுதல் திட்டம்.

இவை தவிர மனிதர்களை விண்வெளிக்கு அனுப்பும் ககன்யான் திட்டப் பணியை வெற்றிகரமாக முடிப்பதற்கு இந்தியா முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

### தேசிய விண்வெளி தினம்



சந்திரனின் மேற்பரப்பை சந்திராயன் III வெற்றிகரமாக ஆய்வு செய்ததை நினைவு கூரும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் 23 ஆம் நாள் இந்தியாவின் தேசிய விண்வெளி தினமாகக் கொண்டாடப்படுகிறது.

### ‘இந்தியாவின் ஏவுகணை நாயகன்’ (Missile Man of India)



டாக்டர் ஏ. பி. ஜே. அப்துல் கலாம்

இந்தியாவின் ஜனாதிபதியாக இருந்த டாக்டர் ஏ. பி. ஜே. அப்துல் கலாம் ஏவுகணை தொழில்நுட்பவியலாளரும் விண்வெளி ஆராய்ச்சியாளரும் ஆவார்.பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையம் (DRDO), இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையம் (ISRO) போன்ற நிறுவனங்களில் அவர் மிக உயர்ந்த பதவிகளை வகித்தார். ஏவுகணை தொழில்நுட்ப அறிவியலில் இவர் அளித்த நன்கொடைகளைக் கவனத்தில் கொண்டு இவரை "இந்தியாவின் ஏவுகணை நாயகன்" .என்று அழைக்கிறோம்.

விண்வெளி ஆராய்ச்சித் துறையில் உள்ள புதுமையான சாத்தியக்கூறுகளைப் புரிந்துகொள்ள விண்வெளி அறிவியலாளர்களை நேர்காணல் செய்வதற்கான வினாநிரலைத் தயாரிக்கவும்.

## இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை



உலக அமைதியை இலக்காகக் கொண்டு உருவாக்கப்பட்ட அணிசேரா அமைப்பினுடைய சிற்பிகளின் படம் மேலே தரப்பட்டுள்ளது. அவர்களை அடையாளம் காண முயற்சிக்கவும்.

இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையின் சிற்பியான ஜவஹர்லால் நேரு, நமது தேசிய நலனைப் பாதுகாக்கும் வெளியுறவுக் கொள்கையை வகுத்தார். இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையின் அடிப்படைத் தத்துவங்களைப் பற்றி அறிந்து கொள்வோம்.

- அமைதியான ஒத்துழைப்பு
- காலனி ஆதிக்கத்தையும் இனவெறியையும் எதிர்த்தல்
- நாட்டுப் பாதுகாப்பையும் இறையாண்மையும் பாதுகாத்தல்
- அணிசேராக் கொள்கை
- பஞ்சசீலத் தத்துவங்கள்

## பஞ்சசீலத் தத்துவங்கள்

இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையின் அடிப்படையில் பஞ்சசீலத் தத்துவங்கள் உருவாக்கப்பட்டன. 1954 இல் இந்தியப் பிரதமராக இருந்த ஜவஹர்லால் நேருவும் சீனப் பிரதமராக இருந்த சௌ – என் – லாவும்

சேர்ந்து கையெழுத்திட்ட பஞ்சசீலத் தத்துவங்களில் கீழே கொடுக்கப்பட்டுள்ள கருத்துக்கள் அடங்கியுள்ளன.

- நாடுகளின் பொது எல்லையையும் இறையாண்மையும் ஒருவருக்கொருவர் ஏற்றுக் கொள்ளுதல்.
- ஒருவருக்கொருவர் போர் செய்யாமல் இருத்தல்.
- உள்நாட்டுக் காரியங்களில் தலையிடாமல் இருத்தல்.
- சமத்துவமும் ஒருவருக்கொருவர் உதவி செய்வதும்
- அமைதியான ஒத்துழைப்பைப் பேணுதல்.

## அணிசேரா இயக்கம் (Non Aligned Movement)

இரண்டாம் உலகப்போருக்குப் பின்னர் அமெரிக்காவும் சோவியத் யூனியனும் உலகளாவிய இரு சக்திகளாக மாறின. இவர்களிடையே ஆரம்பித்த பனிப்போர் (Cold War) உலக அமைதிக்கு அச்சுறுத்தலாக அமைந்தது. இது இரு பெரும் வல்லரசு நாடுகளுடனும் சேராமல் சுதந்திரமாகச் செயல்படவும் தேசிய நலன்களைப் பாதுகாக்கவும் இந்தியாவின் தலைமையில் உருவான வெளியுறவுக் கொள்கையின் அடிப்படையில் அணிசேரா அமைப்பு உருவாக்கப்பட்டது.

உலகின் அனைத்து நாடுகளுடனும் ஆரோக்கியமான நட்புறவைப் பேண முயற்சிப்பதுடன் உலக நாடுகளுக்கு இடையே இந்தியாவின் கௌரவத்தையும் விருப்பங்களையும் உயர்த்துவதற்கு நாடு சிறப்பு கவனம் செலுத்துகிறது.



1983ஆம் ஆண்டு புதுடில்லியில் நடைப்பெற்ற ஏழாவது அணிசேரா நாடுகளின் உச்சி மாநாட்டில் அப்போதைய இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி, கியூபா ஜனாதிபதி ஃபிடல் காஸ்ட்ரோ மற்றும் அப்போதைய இந்தியக் குடியரசுத் தலைவர் கியானி ஜெயில் சிங் ஆகியோர் பங்கேற்ற காட்சி.

அணிசேரா இயக்கத்தின் முக்கியமான சிற்பிகளுடன் தொடர்புடைய தகவல்களைத் திரட்டி சுயவிவர ஆல்பம் தயார் செய்க.

காலனி ஆதிக்கத்தின் விளைவுகளையும் சவால்களையும் கடந்து உலகின் முக்கிய சக்திகளில் ஒன்றாக வளர சுதந்திர இந்தியாவால் முடிந்தது. எனினும் சமூக, பொருளாதார துறைகளில் நாம் இன்னும் வெகுதூரம் முன்னேற வேண்டியுள்ளது.

சுதந்திர இந்தியா பல்வேறு துறைகளில் அடைந்த முன்னேற்றங்களைப் பற்றிதான் நாம் கலந்துரையாடினோம். இக்காலகட்டத்தில் நமது மாநிலமான கேரளமும் பல்வேறு வழிகளில் கடந்து சென்று முன்மாதிரியான செயல்பாடுகள் வழியாக உலகின் கவனத்தை ஈர்த்துள்ளது. அவை எவையெனப் பார்ப்போம்.

## உலகின் கவனத்தை ஈர்த்த கேரளத்தின் வளர்ச்சி அனுபவங்கள்.

**குறைந்த அளவிலான வளங்களை வைத்து என்ன செய்ய முடியும் என்பது பற்றி இந்தியாவின் கொள்கைகளை உருவாக்கும் வல்லுநர்கள் (கேரளத்திலிருந்து) கற்றுக்கொள்ள வேண்டும்.**

*Jean Drez and Amartya Sen, An uncertain glory: India and its contradictions (Quoted in Thirthankar Roy and Ravi Raman K; Kerala 1956 to the present India's Miracle State, 2024)*




கேரளம்–ஐக்கிய கேரள உருவாக்கத்திற்கு முன்பு

புகழ்பெற்ற பொருளாதார வல்லுனரான அமர்த்தியா சென் கேரள வளர்ச்சி மாதிரியைப் பற்றி நடத்திய கருத்து தான் மேலே தரப்பட்டுள்ளது. இதிலிருந்து என்னென்ன கருத்துக்களை நீங்கள் புரிந்து கொண்டீர்கள்?

- 
- 

திருவிதாங்கூர், கொச்சி, மலபார் ஆகிய மூன்று அரசியல் நிலப்பகுதிகளாகப் பிரிக்கப்பட்ட பகுதிகளும் தென் கர்நாடகத்தின் காசர்கோடு தாலுகாவும் சேர்த்து 1956 நவம்பர் ஒன்றில் கேரள மாநிலம் அதிகாரப்பூர்வமாக உருவானது. கேரளா சட்டமன்றத்திற்கான முதல் தேர்தல் 1957 இல் நடைபெற்றது. கேரளாவின் முதல் முதலமைச்சர் இ. எம். எஸ். நம்பூதிரிப் பாடு தலைமையில் அரசு அமைக்கப்பட்டது.



EMS நம்பூதிரிப் பாடு

ICT யின் உதவியுடன் கேரள மாநில உருவாக்கத்தோடு தொடர்புடைய அதிக தகவல்களை உட்படுத்தி ஒரு விளக்கப்படக் காட்சி தயார் செய்க.

கேரளத்தில் நிலைபெற்று இருந்த சமூக– பொருளாதார நிலைமையைக் கருத்தில் கொண்டு அரசு தொலைநோக்கு பார்வையுடன் ஏராளமான சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்தியது. அவற்றில் முக்கியமானவற்றை பற்றிப் பார்ப்போம்.

## நிலச் சீர்திருத்தம் –கேரளம்

நிலச்சீர்திருத்த நடவடிக்கைகள் கேரளாவில் தொடங்குவதற்கு முன் இங்குள்ள விவசாயிகளின் பொதுவான நிலைமையை குறிப்பிடுகின்ற கவிதையாகும் சங்கம்புழை கிருஷ்ண பிள்ளையின் 'வாழைக்குலை' என்ற கவிதை. இக்கவிதையின் மையக் கருத்துக்கள் பின்வருமாறு.

மலையப்புலையனும் அவரது குடும்பத்தினரும் மிகக் கவனத்துடன் நட்டு வளர்த்த வாழை மரக் கன்று வளர்ந்து பெரிய குலையைத் தருகிறது. வாழைக்குலை முற்றிப் பழுக்கிறது. உள்ளூர் வழக்கப்படி அந்தக் குலையை நில உடமையின் அடியாட்கள் வந்து வெட்டி எடுத்துச் செல்கின்றனர். பழத்தினுடைய ருசியை எண்ணி அதை உண்ணலாம் என ஆசையோடு காத்திருந்த மலையப்புலையனும் அவனது மனைவியும் குழந்தைகளும் அனுபவிக்கின்ற நெஞ்சக் குமுறுதல்களே சங்கப்புழையின் வாழைக் குலை என்ற கவிதையின் மையக்கருத்து. பசித்தோருடையவும் தோற்கடிக்கப் பட்டோருடையவும் ஒடுக்கப்பட்டோருடையவும் வலியைக் கவிதை விளக்குகிறது.

சாதி அமைப்பின்படி கீழ் வகுப்பினரை மேல் வகுப்பினர் தங்களுக்கு விருப்பம் போல் நடத்த அனுமதிக்கும் நீதி அமைப்பையும் அந்நாளைய அதிகார அமைப்பையும் கடுமையான மொழியில் கேள்வி கேட்கின்றார் கவிஞர். அனைத்துக் கஷ்டங்களையும் பொருட்படுத்தாமல் மண்ணில் உழைத்து பயிர்களை உற்பத்தி செய்கின்ற மனிதனின் இயலாமையையும், எந்தவித வெட்கமும் இன்றி மொத்தப் பலனையும் சொந்தம் ஆக்குகிற நில உடமையின் ஆணவம் தொடரும் நாள்வரை வாழைக்குலை என்ற கவிதையின் பாடுபொருள் சிறந்து விளங்கும்.

இந்த தொகுப்பிலிருந்து அந்தக் காலத்தின் சமூக நிலைமையைப் பற்றி என்னென்ன குறிப்புகள் கிடைக்கின்றன?

- 

இதுபோன்ற சமூக–பொருளாதார பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க கேரளா அரசு 1957ஆம் ஆண்டு விவசாய குத்தகைச் சட்டத்தை அறிமுகப்படுத்தியது. அதைத்தொடர்ந்து 1970 ஜனவரி 1 அமலுக்கு வந்த கேரள நிலச் சீர்திருத்தச் சட்டத்தின் கீழ் குத்தகைதாரர்களுக்கு விவசாய நிலங்கள் மீது நிரந்தர உரிமை வழங்கப்பட்டது.

### நிலவரம்பு

கேரள நிலச் சீர்திருத்த சட்ட பிரிவு 82 இன் படி தனி நபருக்கு அதிகபட்சமாக 7.5 ஏக்கர் நிலமும் ஒரு குடும்பத்திற்கு 15 ஏக்கர் நிலமும் மட்டுமே சொந்தமாக வைத்திருக்க முடியும். ஆனால் குடும்பத்தில் ஐந்து பேருக்கு மேல் இருந்தால் 20 ஏக்கர் வரை வைத்திருக்கலாம்.

(Department of land revenue, Govt. of Kerala)

### கேரளத்தில் நிலச் சீர்திருத்த சட்டங்களின் முக்கிய விளைவுகள்

- சொந்தமாக வைத்திருக்கும் நிலத்தின் வரம்பு நிர்ணயிக்கப்பட்டது.
- நிலப் பிரபுத்துவ முறை ஒழிக்கப்பட்டது
- விவசாய நிலத்தில் குத்தகைதாரர்களுக்கு நிரந்தர உரிமை கிடைத்தது.
- வேளாண்துறையில் காணப்பட்ட சுரண்டலும் சமத்துவமின்மையும் ஓரளவு நீக்கப்பட்டது.

கேரளத்தின் சமூக – பொருளாதார துறைகளில் சிறப்பான மாற்றங்களுக்கு வழிவகுத்த நிலச் சீர்திருத்தச் சட்டத்தின் வரலாற்றை சித்தரிக்கும் ஒரு நழுவுப் படம் தயாரிக்கவும்.

## கேரளத்தில் அறிவு பரவலும் பரிமாற்றமும்




### படிப்பு இல்லையெனில் வயலுக்கில்லை...

'எங்களுடைய குழந்தைகளுக்குக் கல்வி கற்க வாய்ப்பு வழங்கவில்லை என்றால் இங்கு காணப்படும் எல்லா வயல்களிலும் களைகளை முளைக்கச் செய்வேன்'

மகாத்மா அய்யங்காளி

திருவல்லாவில் உள்ள புல்லாடு அரசுப் பள்ளியில் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த குழந்தைகளைச் சேர்க்க அனுமதி வேண்டி கல்விப் போராட்டம் நடைபெற்றது. தங்களுடைய குழந்தைகளைத் தீண்டத்தகாதவர்களுடன் அமர அனுமதிக்க மாட்டோம் என உயர் குலத்து தலைவர்கள் அறிவித்த காரணத்தால் கால வரையறையின்றி பள்ளிக்கூடம் மூடப்பட்டது. இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து வெள்ளிக்கரை ஜோதி, குறுப்பன் தெய்வத்தான் போன்றவர்களின் தலைமையில் பெரிய அளவில் போராட்டங்கள் நடத்தப்பட்டன. இதன் விளைவாகத் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த குழந்தைகள் பள்ளிக்கூடத்தில் சேர்க்கப்பட்டனர்.

சமூகத்தில் அனைத்துப் பிரிவினர்களைச் சேர்ந்த குழந்தைகளும் ஒன்றாக அமர்ந்து கல்வி கற்கும் வாய்ப்பு மறுக்கப்பட்ட ஒரு காலகட்டம் இருந்தது என்பதை மேலே தரப்பட்டுள்ள நிகழ்வு நமக்கு தெரிவிக்கிறது. ஆனால் பிற்காலத்தில் கேரளத்தில் கல்வி பொதுவானதாகவும் அனைத்து மக்களுக்கும் கிடைக்க கூடிய ஒன்றாக மாறியது. இதற்கு வழிவகுத்த முக்கிய காரணிகள் நிலச் சீர்திருத்தங்கள், சமூக சீர்திருத்த இயக்கங்கள், மிஷனரிகளின் செயல்பாடுகள் மற்றும் தேசிய இயக்கத்தின் வளர்ச்சி போன்றவையாகும். இன்று காணப்படும் அனைவருக்கும் கல்வி, இலவச கல்வி போன்ற பள்ளிக்கல்வி முறை பரவுவதற்கு வேறு சில காரணிகளும் பங்களித்துள்ளன. அவை எவையெனக் காண்போம்.

- அச்சிடுதலின் பரவல்
- நூலக இயக்கம்
- எழுத்தறிவு இயக்கம்
- முறைசாரா கல்விச் செயல்பாடுகள்

### நூலக இயக்கம்


பி. என். பணிக்கர்

கேரள நூலக இயக்கம் கேரளத்தின் மிகப்பெரிய கட்டுக்கோப்பான கலாச்சார இயக்கமாகும். 1829 இல் திருவிதாங்கூர் மன்னராயிருந்த சுவாதி திருநாள் திருவனந்தபுரத்தில் நிறுவிய பொதுமக்கள் நூலகம் திருவிதாங்கூரின் முதல் நூலகமாகும். 1945 இல் பி. என். பணிக்கர் தலைமையில் திருவிதாங்கூரில் நடைபெற்ற நூலகங்களின் மாநாட்டில் உருவாக்கப்பட்ட கூட்டமைப்பால் நூலக இயக்கத்திற்கு துவக்கமிடப்பட்டது.

- அதிகாரம் பரவலாக்கல்

## கேரளத்தின் கல்விச் சாதனைகள்

நிலச் சீர்திருத்தச் சட்டத்தின் வாயிலாக விவசாய நிலம் விவசாயிகளுக்கு கிடைத்ததன் பயனாக கேரளத்தில் கல்வி வளர்ச்சியடைந்தது. நிலச் சீர்திருத்த சட்டங்கள் மற்றும் 1958 இல் கேரளா கல்விச்சட்டம் போன்றவற்றின் வழியாக ஆரம்பக் கல்வி இலவசமாகவும் அனைவருக்கும் ஏற்றதாகவும் நடைமுறைப்படுத்த கேரளத்திற்கு முடிந்தது. பொது மக்கள் எழுத்தறிவு செயல்பாடுகளால் 1991 ஏப்ரல் 18 இல் கேரளம் இந்தியாவிலேயே முழுமையான எழுத்தறிவு பெற்ற முதல் மாநிலமாக மாறுவதற்குக் காரணமாய் அமைந்தது.

1994 ஏப்ரல் 23 இல் கேரள பஞ்சாயத்து ராஜ் சட்டம் நடைமுறையில் வந்த போது சுயாட்சி நிறுவனங்களுக்குக் கல்வித்துறையில் அதிகமான அதிகாரங்கள் கிடைத்தன. இதனால் மக்களின் பங்களிப்போடு பல்வேறு கல்வித் திட்டங்கள் தொடங்க முடிந்தது.

## கேரளமும் உயர்கல்வியும்



கேரள மின் அறிவியல், புதுமை மற்றும் தொழில்நுட்ப பல்கலைக்கழகம், திருவனந்தபுரம்

ஆரம்பக் கல்வித் துறையில் ஏற்பட்ட முன்னேற்றம் படிப்படியாக கேரளத்தின் உயர்கல்வித் துறையிலும் பரவியது. சமூகத்தின் அனைத்து துறைகளிலும் சமமான மாற்றத்தை வழிநடத்தும் திறன் கொண்ட ஓர் இளம் தலைமுறையை உருவாக்குவதே உயர்கல்வித் துறையின் பொதுவான நோக்கமாகும். அறிவியல் தொழில்நுட்பம் மற்றும் மனித மேம்பாட்டுத் திறன் போன்ற பாடங்களில் தேர்ச்சி பெறுவதோடு ஆராய்ச்சி மற்றும் புதுமையான கண்டுபிடிப்புகளை ஊக்குவித்தல் என்ற நோக்கத்தை முதன்மையாகக் கொண்டு கேரளத்தில் உள்ள கல்வி நிறுவனங்கள் செயல்படுகின்றன.

கேரள மாநிலம் உருவானபோது ஒரே ஒரு பல்கலைக்கழகம் (கேரளப் பல்கலைக்கழகம்) மட்டுமே இருந்தது. ஆனால் இன்று அறிவியல் – தொழில்நுட்பம் – வேளாண்மை – சுகாதாரம் போன்ற துறைகளுக்கு முக்கியத்துவம் வழங்கி பல்வேறு பல்கலைக்கழகங்கள் செயல்பட்டு வருகின்றன. தவிர, தொழில் திறன்களை வளர்ப்பதற்காக கேரளத்தில் பாலிடெக்னிக்குகள், தொழில்துறை பயிற்சி நிறுவனங்கள் (ITI) போன்றவை செயல்பட்டு வருகின்றன. கேரள மாநிலம் உருவானது முதல் அனைவருக்கும் கல்வி என்ற இலக்குடன் செயல்பட்டு வரும் கல்வித்துறையின் சாதனைகள், கேரளம் ஒரு முன்மாதிரி மாநிலமாக உருவாக முக்கிய காரணமாய் அமைந்தது.



கேரளத்தின் உயர்கல்வித் துறையைப் பிற மாநிலங்களில் உள்ள உயர்கல்வித் துறையுடன் ஒப்பிட்டு குறிப்பு தயார் செய்யவும்.

கீழே தரப்பட்டுள்ள அட்டவணையைப் பகுப்பாய்வு செய்து இந்தியாவின் எழுத்தறிவு சதவிகிதத்துடன் கேரளத்தின் எழுத்தறிவு சதவிகிதத்தை ஒப்பீடு செய்து குறிப்பு தயார் செய்க.

**எழுத்தறிவு சதவிகிதம்**

| வருடம் | இந்தியா | கேரளம் |
|---|---|---|
| 1951 | 27 | 47 |
| 1961 | 24 | 55 |
| 1971 | 29 | 70 |
| 1981 | 36 | 79 |
| 1991 | 43 | 90 |
| 2001 | 55 | 91 |
| 2011 | 74 | 94 |
| 2021 | 78 | 94 |

*Source*: Census of India, various years; except for the year 2021, *Economic Review*, Government of Kerala *(Quoted in Thirthankar Roy and Ravi Raman K; Kerala 1956 to the present India's Miracle State, 2024)*

## சுகாதாரத்துறை




மேலே தரப்பட்டுள்ள செய்திகளில் இருந்து கேரளத்தின் சுகாதாரத் துறையைப் பற்றி என்னென்ன தகவல்களை உங்களால் கண்டுபிடிக்க இயல்கிறது?

வளர்ந்த நாடுகளுடன் போட்டி போடும் விதத்தில் அமைந்த ஒரு பொது சுகாதார முறை கேரளத்தில் நிலவில் உள்ளது. குறைந்த செலவில் குறைவான வசதிகளுடன் சிறந்த சுகாதாரக் கட்டமைப்பை உலக தரத்திற்கு உயர்த்தவும் நிறைவான நலவாழ்வு பராமரிப்பை உறுதி செய்யவும் கேரளத்திற்கு முடிகிறது. சுகாதாரத் துறையில் நாம் அடைந்த சாதனைகளின் பலன்கள் கீழே தரப்பட்டுள்ளன.

- குறைந்த குழந்தை இறப்பு விகிதம்
- குறைந்த தாய்மார் இறப்பு விகிதம்
- நீண்ட ஆயுள் காலம்
- வேகமாகக் குறைந்து வரும் மக்கள் தொகை வளர்ச்சி விகிதம்

உங்கள் பகுதியில் உள்ள ஆரம்பச் சுகாதார மையத்தை நேரில் கண்டு சுகாதாரத் துறையில் அரசு நடைமுறைப்படுத்தியுள்ள முக்கிய செயல்பாடுகளைக் குறித்து பட்டியல் தயார் செய்யவும்.

கல்வி, சுகாதாரம் போன்ற துறைகளில் நாம் அடைந்த சாதனைகள் வழியாக கேரளத்தில் தனி நபர் வருமானம் குறைவாக இருந்த போதிலும் மனித மேம்பாட்டுக் குறியீட்டில் சுகாதாரத் துறையில் உயர்ந்த நிலையை அடைய கேரளத்தால் முடிந்தது. 1965 இல் நடைமுறைப்படுத்தப்பட்ட அனைவருக்கும் பொது விநியோக முறை வழியாக வறுமை ஒழிப்பில் பிற மாநிலங்களுக்கு கேரளம் முன்மாதிரியாக உள்ளது. பெண் சக்தி மேம்படுத்துவது குடும்ப ஸ்ரீ வழியாகவும் உள்ளாட்சி நிர்வாகத்தில் அதிகாரப் பகிர்வு வழியாகவும் கேரள மாநில எழுத்தறிவு இயக்கத்தின் (KSLMA) செயல்பாட்டின் வழியாகவும் முன்னேற்றமடைய கேரளத்திற்கு இயன்றது.

குடும்ப ஸ்ரீ – லோகோ

நிலச் சீர்திருத்தம், கல்வி, பொதுச் சுகாதாரம், போன்ற துறைகளில் கேரளம் அடைந்துள்ள சாதனைகளை உட்படுத்தி வகுப்பில் ஒரு குழு விவாதம் நடத்தவும்.

மக்களாட்சி விழுமியங்களுக்கும் சமூக நீதிக்கும் முக்கியத்துவம் கொடுத்து கேரளத்தில் வேளாண் –கல்வி –சுகாதாரம் போன்ற துறைகளில் வளர்ச்சி அடைந்துள்ளன. அதனால் புதிய சவால்களைச் சமாளித்து, வளர்ச்சி அடைந்த நாடுகளின் தரத்திற்கு இணையாக நிலை நிற்க நமது மாநிலத்திற்கு முடிந்துள்ளது.

## தொடர் செயல்பாடுகள்

- இந்தியப் பிரிவினை தொடர்பான நிகழ்வுகளும் படங்களும் திரட்டி டிஜிட்டல் பதிப்பு (Digital Album) தயார் செய்யவும்.
- "சுதந்திரத்திற்குப் பின் இந்தியா–எனது நிலப்படத் தொகுப்பு" என்ற தலைப்பில் பாடப்பகுதியுடன் தொடர்புடைய முக்கிய நிலப்படங்களை உட்படுத்தி ஒரு டிஜிட்டல் நிலப் படத்தொகுப்பு (Digital Album) தயார் செய்யவும்.

- கேரளா அரசு கல்வி மற்றும் சுகாதாரத் துறைகளில் நடைமுறைப்படுத்தியுள்ள முக்கிய திட்டங்களையும் அவற்றின் இலக்கையும் உட்படுத்தி ஒரு டிஜிட்டல் காட்சி (Digital Presentation) தயார் செய்யவும்.
- சுதந்திர இந்தியாவில் கல்வியை மேம்படுத்த நடைமுறைப்படுத்திய முக்கிய சீர்திருத்தங்களைக் கால வரிசைப்படி பட்டியலிடவும்.
- உங்கள் பள்ளியின் கல்வி மேம்பாட்டிற்காக தன்னாட்சி நிறுவனங்களின் பங்களிப்பு பற்றி ஒரு விவாதம் நடத்தவும்.
- இந்தியாவின் விண்வெளி ஆய்வுப் பணிகளில் பாராட்டத்தக்க சாதனைகளை விளக்கும் டிஜிட்டல் தொகுப்பு தயார் செய்யவும்.



# 8

# ஜனநாயகம் ஓர் இந்தியனின் அனுபவம்

நூற்றாண்டுகளாக வடமேற்கு எல்லைகளில் வாழ்ந்திருந்த இலட்சக்கணக்கான இந்துக்களும் சீக்கியர்களும் தங்களது வீடுகளை விட்டு சொந்தப் பாதுகாப்பிற்காக சீக்கியர்களும் இந்துக்களும் பெரும்பான்மையாக உள்ள கிழக்குப் பகுதிகளுக்குக் குடி பெயர்ந்தனர். அவர்கள் கால்நடையாகவும் மாட்டு வண்டிகளிலும் லாரிகளிலும் நெருங்கியிருந்தும் இரயில்களின் வெளிப் பக்கங்களிலும் மேற் கூரையிலும் பயணம் செய்தனர். மேற்கிலுள்ள பாதுகாப்பான பகுதிகளுக்குப் பயணம் செய்து கொண்டிருந்த இஸ்லாமியர்களுடன் பயணத்திற்கிடையே சந்திகளிலும் வழி ஓரங்களிலும் இரயில்வே நிலையங்களிலும் வைத்து அவர்களிடையே மோதல்கள் ஏற்பட்டன.

கலவரம் ஒட்டு மொத்த அழிவாக மாறியது. 1947 கோடைக் காலத்தில் பாகிஸ்தான் என்ற புதிய நாட்டின் உருவாக்கம் அதிகாரப் பூர்வமாக அறிவிக்கப்பட்ட போது இந்துக்களும் இஸ்லாமியர்களும் சீக்கியர்களும் அடங்கிய பத்து தச இலட்சம் மக்கள் இடம் பெயர்ந்து கொண்டிருந்தனர். மழைக் காலம் தொடங்கியதால் அவர்களில் சுமார் பத்து இலட்சம் பேர் மரணமடைந்தனர். வட இந்தியா முழுவதும் ஆயுதங்கள் ஏந்தி, மறைந்தும் பயத்திலும் மூழ்கி வாழ்ந்தனர்.

Source: Khushwant Singh, *Train to Pakistan*



பிரபல எழுத்தாளர் குஷ்வந்த் சிங் எழுதிய 'டிரெயின் டு பாகிஸ்தான்' என்ற நாவலின் ஒரு பகுதியே நீங்கள் வாசித்தது. 1947 இல் இந்திய பிரிவினையைத் தொடர்ந்து உண்டான அகதிகளின் பெருக்கத்தைக் குறித்தும் மக்கள் அனுபவித்த துன்பங்களையும் பற்றியுமே இங்கு வருணிக்கப்படுகிறது. சுதந்திரத்திற்குப் பின் இந்தியா எதிர்கொண்ட முக்கிய சவால்களை நாம் முந்தைய அதிகாரத்தில் விவாதித்தோமல்லவா? சுதந்திர இந்தியா எதிர்கொண்ட முக்கிய சவால்கள் எவை?

- பிரிவினைக்குப் பிந்தைய குடியேற்றமும் இடப்பெயர்தலும்
- ..........................................................................................
- ..........................................................................................

பிரிவினையும் பிரிவினைக்குப் பிந்தைய குடியேற்றமும் இடம்பெயர்தலும் இந்திய சமூகத்தில் பெரிய மாற்றங்களை உருவாக்கின. பாகிஸ்தானிலிருந்து இந்தியாவில் குடியேறினவர்களின் மறுவாழ்வு அந்தந்தப் பகுதிகளில் மதம், மொழி, சமூகம் மற்றும் பொருளாதாரப் பிரச்சனைகளை உருவாக்கியது. இவற்றிற்கு அரசியல் தீர்வு காண வேண்டியது கட்டாயமானதாகயிருந்தது. கடத்தப்பட்ட நபர்களுக்கான (மீட்பும் மறுவாழ்வும்) சட்டம் 1949 (The Abducted Persons (Recovery and Restoration) Act, 1949), இடப்பெயர்வு செய்தவர்களுக்கான (இழப்பீடும் மறுவாழ்வும்) சட்டம் 1954 (The Displaced Persons (Compensation and Rehabilitation) Act, 1954), குடியுரிமைச் சட்டம் 1955 (Citizenship Act of 1955) போன்ற சட்டங்களின் வாயிலாக இந்தப் பிரச்சனைகளைத் தீர்க்க நாடு முயன்றது. மேலும் சிறுபான்மையினரின் உரிமைகள் அடிப்படை உரிமைகளாக அரசியலமைப்பில் உட்படுத்தப்பட்டன.

சுதந்திர இந்தியா எதிர்கொண்ட இன்னொரு முக்கிய சவால் நாட்டு அரசுகளின் ஒன்றிணைப்பாகும். மூன்று ஒப்பந்தங்கள் வழி ஒருங்கிணைத்தல் செயல்பாடு நடைமுறைப்படுத்தப்பட்டது.

- **தற்போதையநிலை ஒப்பந்தம் (Stand Still Agreement)**

நாட்டு அரசுகள் அவற்றின் தற்போதைய நிலையிலேயே தொடர வேண்டும் என்பதே இந்த ஒப்பந்தத்தின் நோக்கமாகும். இதன் மூலம் இந்த அரசுகள் பாகிஸ்தானுடன் இணைவதைத் தடுக்க முடிந்தது.

- **சேர்க்கை ஒப்பந்தம் (Instrument of Accession)**

இது நாட்டு அரசுகள் இந்திய யூனியனில் இணைவதற்கான ஒப்புதல் அளிக்கும் ஒப்பந்தமாகும். அதே வேளை உள்சுயாட்சி உரிமையும் இதன்மூலம் நாட்டு அரசுகளுக்கு வழங்கப்பட்டது.

- **இணைப்பு ஒப்பந்தம் (Merger Agreement)**

இது நாட்டு அரசுகள் முழுமையாக இந்திய யூனியனில் இணைவதற்கான ஒப்பந்தமாகும். இந்த ஒப்பந்தத்தின்படி சுயாட்சி உரிமை இழக்கப்படுகிறது.




சுதந்திரம் பெற்ற பின்னர் ஒரு தற்காலிக அரசாங்கமே இந்தியாவை ஆட்சி செய்தது. ஜனநாயக அமைப்பை நிறுவுவதற்காக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஓர் அரசாங்கம் அமைய வேண்டியது தேவையாகயிருந்தது. இதன்படி சுதந்திரமானதும் நீதிபூர்வமான தேர்தல் தேவைப்பட்டது. இதற்காக அரசியலமைப்புச் சட்டப்படி 1950 ஜனவரி 25 ஆம் நாள் தேர்தல் ஆணையம் நடைமுறைக்கு வந்தது. 1951 அக்டோபர் முதல் 1952 பிப்ரவரி வரை முதல் பொதுத்தேர்தல் நடைபெற்றது. இந்தியாவின் முதல் பொதுத் தேர்தலைக் குறித்து ஹிந்துஸ்தான் டைம்ஸ் என்ற பிரபல ஆங்கில நாளிதழில் வெளிவந்த கருத்து கீழே கொடுக்கப்பட்டுள்ளது.



DELHI EDITION — Regd. No. D. 232

The Hindustan Times

LARGEST CIRCULATION IN NORTHERN, NORTH-WESTERN AND CENTRAL INDIA

VOL. XXVII. NO. 344 — PRICE TWO ANNAS

**“உலக வரலாற்றில் மிகவும் பெரிய ஜனநாயகத் தேர்தல் சோதனையை இந்திய மக்கள் மிகுந்த பாராட்டுதல் பெறும் அளவுக்கு நடத்தினர் என்பது அனைவராலும் உலகளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டது.”**

முதல் பொதுத்தேர்தலை ஒரு பரிசோதனை தேர்தல் என்று விவரிப்பதற்கான காரணம் என்ன?

இந்தியா போன்ற பரந்த மற்றும் பன்முகத்தன்மை நிறைந்த ஒரு நாட்டில் சுதந்திரமாகவும் நீதிபூர்வமாகவும் தேர்தல்களை நடத்துவது என்பது பல சவால்கள் நிறைந்ததாகும். அவற்றை ஆராய்வோம்.

- தொகுதிகளின் எல்லைகளைத் தீர்மானித்தல்.
- வயது வந்தோர் வாக்குரிமை அடிப்படையில் வாக்காளர் பட்டியல் தயாரித்தல்.
- வாக்களிப்பதின் முக்கியத்துவத்தை எழுத்தறிவில்லாத பெரும்பான்மையான மக்களுக்கு உணர்த்துதல்.
- தேவையான தேர்தல் அதிகாரிகளைக் கண்டுபிடித்து பயிற்சி அளித்தல்.
- வெளிப்படையான பாரபட்சமற்ற நீதிபூர்வமான தேர்தல்களை உறுதி செய்தல்.

இதுபோன்ற பல சவால்களை எதிர்கொண்டு நடந்த பொதுத்தேர்தலுக்குப் பின்னர் முதல் பிரதமராக ஜவகர்லால் நேரு உறுதிமொழி செய்து பதவியேற்றார். இத்துடன் நாட்டில் ஜனநாயக ஆட்சிமுறைக்குத் தொடக்கமானது.

சுதந்திரத்திற்கு பிந்தைய இந்தியாவில் ஒற்றுமையை நிலைநாட்டவும் ஜனநாயக ஆட்சியை செயல்படுத்தவும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து கலந்துரையாடி குறிப்பு தயாரிக்கவும்.

**இந்தியாவில் ஒரு கட்சி ஆதிக்கம்**

ஓர் அரசியல் கட்சி தொடர்ச்சியாக அதிகப் பெரும்பான்மையுடன் தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சியில் நிலைத்து நிற்பதே இந்தியாவில் ஒரு கட்சி ஆதிக்கம் என்று அறியப்படுகிறது. இந்திய ஜனநாயக அமைப்பிற்குள் ஒரு கட்சி ஆதிக்கம் நிலை பெற்றிருந்தது.

முதல் தேர்தலில் ஓர் அரசியல் கட்சியின் மீது பெரும்பான்மையான மக்கள் நம்பிக்கை வைத்ததால் ஒரு கட்சி ஆட்சி ஆதிக்கத்திற்கு வழிவகுத்தது. பிற்காலத்தில் ஒரு கட்சி ஆதிக்கம் படிப்படியாகக் குறைந்து பல கட்சிகள் உருவாக்கத்திற்கும் முன்னணி அமைப்பிற்கும் இந்திய அரசியல் மாற்றங்களுக்கு உள்ளானது.

## ஒரு கட்சி ஆதிக்கத்திலிருந்து முன்னணி அமைப்பிற்கு

முதல் தேர்தலில் பெரும்பான்மையான இடங்களைப் பெற்று இந்திய தேசியக் காங்கிரசின் தலைமையிலான அரசாங்கம் அதிகாரத்தில் வந்தது. தொடர்ந்து 1957 லும் 1962 தேர்தல்களிலும் இந்திய தேசியக் காங்கிரஸ் ஆட்சியை தக்க வைத்தது. 1967 இல் தேர்தலில் தேசிய அளவில் ஆதிக்கத்தை தக்க வைத்துக் கொள்ள முடிந்தாலும், மாநில அளவில் காங்கிரசின் ஆதிக்கம் பின்னடைந்தது. எனினும் 1989 வரையுள்ள பொதுத்தேர்தல்களில் (1977 முதல் 1979 வரையுள்ள ஜனதா கட்சி ஆட்சியைத் தவிர) காங்கிரஸ் கட்சியே ஆதிக்கம் செலுத்தியது. 1977-இல் தேர்தலில் காங்கிரஸ் தோல்வியடையவே ஜனதா கட்சி தலைமையிலான ஆட்சி ஆதிகாரத்தில் வந்தது. தொடர்ந்து நடைபெற்ற இரண்டு தேர்தல்களிலும் (1980, 1984) காங்கிரஸ் கட்சி தனித்து பெரும்பான்மையைப் பெற்றது. இருப்பினும் 1989 இன் தேர்தலிலிருந்து பல கட்சி அமைப்பை அடிப்படையாகக் கொண்ட கூட்டணி அரசியலுக்கு இந்திய ஜனநாயகம் மாறியது. 1989 க்குப் பிறகு ஜனதாதளம் தலைமையிலான தேசிய முன்னணியும் அதைத் தொடர்ந்து 1991 இல் பிற அரசியல் கட்சிகளின்

ஆதரவுடன் காங்கிரஸ் கட்சியும் ஆட்சிக்கு வந்தன. 1996 தேர்தலைத் தொடர்ந்து முதலில் பா.ஜ.க. வும் பின்னர் வெவ்வேறு கட்சிகள் சேர்ந்த ஐக்கிய முன்னணியும் சேர்ந்து (United Front) அரசாங்கத்தை அமைத்தன. 1998, 1999 ஆண்டுகளில் நடைபெற்ற தேர்தல்களில் பா.ஜ.க. தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி (National Democratic Alliance) அதிகாரத்தில் வந்தது. 2004, 2009 ஆண்டுகளில் காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி (United Progressive Alliance) அதிகாரத்தில் வந்தது. 2014, 2019, 2024 ஆண்டுகளின் தேர்தல்களில் தொடர்ச்சியாக பா.ஜ.க. தலைமையிலுள்ள தேசிய ஜனநாயகக் கூட்டணி வெற்றி பெற்று ஆட்சியைத் தக்க வைத்துக் கொண்டது.

இந்தியாவின் கூட்டணி அரசியலின் வரலாற்றை நாம் ஆராய்ந்தால் முக்கியமாக கீழே கூறப்பட்டுள்ள முறைகளில் அரசாங்கங்கள் உருவாக்கப்படுகின்றன.

- தேர்தலுக்கு முன்னரே ஒரு பொது குறைந்தபட்ச திட்டத்தின் அடிப்படையில் கூட்டணியாகப் போட்டியிட அரசியல் கட்சிகளுக்கு இடையே உடன்பாடு உண்டாக்குதல்.
- தேர்தலுக்குப் பின் கூட்டணி அமைத்து அரசாங்கம் அமைத்தல்
- மக்களவையில் (Loksabha) பெரும்பான்மை இல்லாத அரசாங்கத்திற்கு வெளியே நின்று ஆதரவை வழங்குதல்

முதலாவது பொதுத்தேர்தல் முதல் பல்வேறு அரசாங்கங்களின் காலவரிசைப் பட்டியலைத் தயாரிக்கவும்.

## அவசரநிலை – இந்திய ஜனநாயகத்தில் நெருக்கடிக்காலம்




மேலே கொடுக்கப்பட்டுள்ள செய்தி படத்தொகுப்பைக் கவனிக்கவும். இந்திய ஜனநாயகம் எதிர்கொண்ட ஒரு முக்கியமான நெருக்கடியே அவசரநிலை என்பது.


இந்திராகாந்தி


மொரார் ஜி தேசாய்


ஜெயபிரகாஷ் நாராயணன்

1975 ஜூன் 25 ஆம் நாள் நாட்டில் உள்நாட்டு அவசரநிலை பிரகடனப்படுத்தப்பட்டது. அடிப்படை உரிமைகளை முடக்குதல், பத்திரிக்கைச் சுதந்திரம் மறுத்தல் போன்ற ஜனநாயக உரிமை மீறல்கள் அவசரநிலையின் பகுதியாக செயல்படுத்தப்பட்டன. இந்தியாவில் அவசரநிலை பிரகடனத்தின் பின்னணியை நாம் ஆராய்வோம். நாட்டின் பல பகுதிகளில் ஒன்றிய அரசிற்கெதிராக ஏற்பட்ட போராட்டங்களே முக்கியமான ஒரு காரணமாகும். குஜராத்தில் மொரார்ஜி தேசாய் தலைமையில் நடந்த போராட்டம் மாநில அரசை கலைத்து விட வழிவகுத்தது. தொடர்ந்து நடந்த தேர்தலில் காங்கிரஸ் தோல்வியடைந்தது. ஜெயபிரகாஷ் நாராயணன் தலைமையில் பீகாரில் நடைபெற்ற தொடர் போராட்டங்கள் தேசிய அளவிலும் தாக்கத்தைச் செலுத்தியது. இது ஒன்றிய அரசிற்கெதிரேயுள்ள போராட்டங்களுக்கும் காரணமானது. 1970 களில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி, உணவுப் பற்றாக்குறை, வேலையின்மை ஆகியவையே இந்தப் போராட்டங்களுக்குக் காரணமாயின.

இந்த அரசியல் நெருக்கடிகளுக்கு இடையே பிரதம மந்திரி இந்திராகாந்திக்கு எதிராக அலகாபாத் உயர் நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்த தேர்தல் வழக்கில் பாதகமான தீர்ப்பு கிடைக்கப்பெற்றதால் தேர்தல் ரத்து செய்யப்பட்டது. தீர்ப்பைத் தொடர்ந்து இந்திராகாந்தியின் ராஜினாமா கோரி எதிர்க் கட்சிகள் போராட்டத்தைத் தீவிரப்படுத்தின. இருப்பினும் உச்சநீதிமன்றம் அலகாபாத் உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பை நிறுத்தி வைத்தது. அதைத் தொடர்ந்து எதிர்க்கட்சிகளின் போராட்டங்கள் உள்நாட்டு பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக உள்ளன என்ற காரணத்தை வைத்து ஒன்றிய அரசு அரசியலமைப்பின் 352 வது பிரிவின் படி நாட்டில் தேசிய அவசர நிலையை அறிவித்தது.

தேசிய அவசரநிலை அரசியலமைப்பின் கூட்டாட்சி முறையை ஒழிக்கவும், ஒன்றிய அரசின் அதிகாரத்தை மையப்படுத்தவும் அடிப்படை உரிமைகள் முடக்கப்படவும் நீதிமன்றங்களின் நீதிநியாய மறு ஆய்வு அதிகாரத்தை இல்லாமலும் செய்தது. மேலும் என்னென்ன விளைவுகளை அவசரநிலை உருவாக்கியது என்பதைச் சோதனை செய்வோம்.

- எதிர்க்கட்சித் தலைவர்கள் விசாரணையின்றி சிறையில் அடைக்கப்பட்டனர்.
- நாளிதழ்களுக்கும் செய்திகளுக்கும் தணிக்கை ஏற்படுத்தப்பட்டது.
- பொருளாதாரக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன.

கடுமையான கட்டுப்பாடுகளும் அடக்கு முறைகளும் இருந்தபோதிலும் அவசரநிலைக்கு எதிராக நாடு முழுவதும் பல போராட்டங்கள் நடந்தன. அதைத் தொடர்ந்து 1977 மார்ச்சில் அவசர நிலை திரும்பப் பெறப்பட்டு தேர்தல் அறிவிக்கப்பட்டது. அவசரநிலைக்குப் பிறகு நடைபெற்ற தேர்தலில் காங்கிரஸ் தோற்கடிக்கப்பட்டு ஜனதாக் கட்சியின் தலைமையில் அரசாங்கம் அமைக்கப்பட்டு மொரார்ஜி தேசாய் பிரதம மந்திரியானார். அவசர நிலை

காலத்தில் உண்டான நிகழ்வுகள், ஜனநாயகத்தைப் பாதுகாப்பதில் குடிமக்களின் விழிப்புணர்வு, ஊடகங்களின் ஈடுபாடு, குடிமக்களின் உரிமைகள் போன்றவற்றின் முக்கியத்துவங்களை விளக்குகின்றன.

**அவசரநிலை (Emergency)**

போர், வெளிநாட்டு ஆக்கிரமிப்பு, ஆயுதக் கிளர்ச்சி ஆகியவற்றால் நாட்டின் பாதுகாப்பிற்குக் கடுமையான அச்சுறுத்தல் ஏற்படும் சூழ்நிலைகளில் நடவடிக்கைகளை எடுக்க அவசரநிலை அரசாங்கத்திற்கு அதிகாரம் வழங்குகிறது. இதுபோன்ற சூழ்நிலைகளில் அரசியலமைப்பின் 352 வது பிரிவின்படி ஜனாதிபதியால் அறிவிக்கப்படும் ஒரு கட்டுப்பாடுதான் அவசரநிலை.

அவசர நிலை உருவாக்கின சவால்களை ஜனநாயக முறைகளின் அடிப்படையிலே இந்திய மக்கள் எதிர்கொண்டனர். இது இந்திய ஜனநாயகத்தின் வலிமையையும் முக்கியத்துவத்தையும் விளக்குகிறது. ஜனநாயகத்தை சீர்குலைக்கும் அவசர நிலை போன்ற சூழ்நிலைகளை மீண்டும் நிகழாமல் இருப்பதற்கான விழிப்புணர்வை உருவாக்க இந்த அனுபவங்கள் நமக்கு உதவுகின்றன.

அவசரநிலை காலத்தின் நாளிதழ்கள் செய்திகளைச் சேகரித்து கண்காட்சி நடத்தவும்.

பொதுமக்களின் கருத்துக்களை ஒன்றிணைப்பதிலும் குடிமக்களுக்கு ஜனநாயகக் கல்வி வழங்குவதிலும் அரசியல் கட்சிகளுக்கு இணையாக பிற சமூக நிறுவனங்களும் தன்னார்வக் குழுக்களும் முக்கிய பங்கு வகித்துள்ளன. அவற்றில் சிலவற்றை நாம் அறிந்துகொள்வோம்.

## மக்கள் இயக்கங்களும் இந்திய ஜனநாயகமும்

ஜனநாயக இந்தியாவில் பல்வேறு பிரிவு மக்களின் நலன்களைப் பாதுகாப்பதற்கும் அதிகாரத்தில் பிரதிநிதித்துவம் கிடைப்பதற்கும் பல்வேறு இயக்கங்கள் உருவாக்கப்பட்டன. 1970 ற்குப் பிறகு தலித்துகள், பெண்கள், வேளாண்மை செய்பவர்கள் ஆகிய சமூகப் பிரிவினர்களுக்கிடையே முக்கிய அரசியல் கட்சிகள் தங்களது பிரச்சினைகளையும் தேவைகளையும் சரியான முறையில் கவனத்தில் கொள்ளவில்லை என்ற உணர்வு வலிமையடைந்தது. இந்தப் பிரிவினர் தங்களுக்கென்று இயக்கங்களை உருவாக்கி போராட்டங்களை நடத்தவும் செய்தனர். இவற்றில் சில இயக்கங்களை அறிந்து கொள்வோம்.

## பிற்படுத்தப்பட்டோர் இயக்கங்களும் மண்டல் ஆணையமும்

பிற்படுத்தப்பட்டவர், பழங்குடியினர் பிரிவில் உட்படுத்தப் படாமலும் சமூக ரீதியாகவும் கல்வி ரீதியாகவும் பின் தங்கிய மக்களே இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (Other Backward Classes) ஆவர்.



பி. பி. மண்டல்



வி.பி. சிங்

அரசுப் பணிகளில் இந்தப் பிரிவினரின் பிரதி நிதித்துவத்திற்காகவும் கல்வி முன்னேற்றத்திற்காகவும் பல்வேறு இயக்கங்களும் அரசியல் கட்சிகளும் தோன்றின. பிற்படுத்தப்பட்ட பிரிவினரின் சமூக பின் தங்கிய நிலைக்கான காரணங்களைக் குறித்து அறியவும், தீர்வுகளைப் பரிந்துரைப்பதற்காகவும் 1953 இல் ஒன்றிய அரசு ஓர் ஆணையத்தை நியமித்தது. இது காகா கலேல்கர் (Kaka Kalelkar) ஆணையம் என்ற பெயரில் அழைக்கப்பட்டது. ஆணையம் சில பரிந்துரைகளைச் சமர்ப்பித்த போதிலும் அவை செயல்படுத்தப்படவில்லை. அவசரநிலைக்குப் பின்னர் ஆட்சிக்கு வந்த ஜனதா அரசு ஓ. பி. சி. பிரிவுகளின் சமூகநிலை, கல்வி ஆகியவற்றில் பின்தங்கிய நிலையைக் குறித்து ஆய்வு செய்து தீர்வுகளைப் பரிந்துரைக்க 1979 இல் பி. பி. மண்டல் தலைமையில் ஓர் ஆணையத்தை அமைத்தது. இது இரண்டாம் பிற்படுத்தப்பட்ட பிரிவு ஆணையம் (Second Backward Classes Commission) என்றும் மண்டல் ஆணையம் என்றும் அழைக்கப்படுகிறது.

அரசுப் பணிகளிலும் கல்வி நிலையங்களிலும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 27% இட ஒதுக்கீடு பரிந்துரை செய்யப்பட்ட அறிக்கையை 1980 இல் ஆணையம் ஒன்றிய அரசிடம் சமர்ப்பித்தது. வி.பி. சிங்கின் தலைமையிலான தேசிய முன்னணி 1990 இல் இந்த அறிக்கையை அமல்படுத்த தீர்மானித்தது. இந்தத் தீர்மானம் இந்தியாவில் பல நகரங்களில் போராட்டங்களுக்கும், வன்முறைகளுக்கும் காரணமானது. எனினும் பின்னர் இந்த அறிக்கையைச் செயல்படுத்த உச்சநீதி மன்றம் அனுமதி வழங்கியது. இன்று நாட்டில் அனைத்து முக்கியமான அரசியல் கட்சிகளும் ஓ.பி.சி. இட ஒதுக்கீட்டை ஏற்றுக்கொள்கின்றன. மக்கள் தொகையில் பாதியளவாக உள்ள பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் நலனை உறுதி செய்ய முடிந்தது என்ற நிலையில் மண்டல் ஆணையத்தின் அறிக்கைக்கு இந்திய ஜனநாயக வரலாற்றில் பெரும் முக்கியத்துவம் உண்டு. மண்டல் ஆணையத்தின் உருவாக்கம் முதல் அந்த அறிக்கை நடைமுறைபடுத்தப்பட்ட காலகட்டத்தில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான பல்வேறு அரசியல் இயக்கங்களும் சமூக இயக்கங்களும் தோன்றின. ஜனதாதளமும், ஜனதாதளத்திலிருந்து உருவான பிற கட்சிகளும் இதற்கு எடுத்துக்காட்டுகளாகும்.

### பி. பி. மண்டல்

பீகாரில் உள்ள சோசலிச தலைவராக இருந்த பி. பி. மண்டல் இரண்டாம் பிற்படுத்தப்பட்ட ஆணையத்தின் தலைவராக இருந்தார். 1967 -1970, 1977-1979 காலகட்டங்களில் இவர் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தார். 1968 இல் ஒன்றரை மாதங்கள் பீகாரின் முதல்வராக இருந்தார். 1977 இல் ஜனதாகட்சியில் உறுப்பினராகச் சேர்ந்தார்.

மண்டல் ஆணையம் அமைக்கப்பட்ட பின்னணியும் அதன் அறிக்கை செயல்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து ஏற்பட்ட நிகழ்வுகளையும் குறித்து விவாதம் செய்து குறிப்பு தயாரிக்கவும்.

## தலித் இயக்கங்கள் (Dalit Movements)

சுதந்திரத்திற்குப் பிந்தையை இந்தியாவில் தலித் பிரிவினர் சமூகத்தின் முக்கிய நீரோட்டத்திலிருந்து ஒதுக்கி வைக்கப்படுவதாகவும் அவர்களுக்கு உரிய உரிமைகள் மறுக்கப்படுகின்றன என்ற உணர்விலிருந்தும் தலித் இயக்கங்கள் தோன்றின. கல்வி, தொழில் போன்ற துறைகளில் தலித் பிரிவினருக்கு அரசியலமைப்பு இட ஒதுக்கீட்டை உறுதி செய்திருந்தாலும் அவர்களுக்கு சமூக முக்கியத்துவம் வாய்ந்த துறைகளிலும் பிரதான அரசியலிலும் நிர்வாகத்திலும் உரிய இடம் வழங்கப்படாத நிலைமை காணப்பட்டது. கல்வி, தொழில் போன்ற துறைகளில் பின்தங்கிய நிலை, சமூக பொருளாதார சமத்துவமின்மை, சொந்தமாக நிலம் இல்லாமை போன்ற பிரச்சினைகளைத் தலித் மக்கள் எதிர்கொள்ள வேண்டியிருந்தது. அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கிய சிற்பி டாக்டர் பி. ஆர். அம்பேத்கரின் கருத்துக்களால் ஈர்க்கப்பட்ட தலித் பிரிவினர் ஒருங்கிணைந்து இயக்கங்களை உருவாக்கினர். இத்தகைய இயக்கங்களில் முக்கியமானது தலித் சிறுத்தைகள் இயக்கமாகும்.

## தலித் சிறுத்தைகள் இயக்கம்

1972 இல் மகாராஷ்டிராவில் தலித் சிறுத்தைகள் இயக்கம் உருவாக்கப்பட்டது. நகர்ப்புறங்களைச் சார்ந்த கல்வி கற்ற தலித் இளைஞர்களே இந்த இயக்கத்திற்குத் தலைமை வகித்தனர். பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு சமூக நீதி, சமத்துவம், சாதி ஒழிப்பு போன்ற அம்பேத்கரின் கருத்துகள் தலித் சிறுத்தைகள் இயக்கத்தில் தாக்கம் செலுத்தின. ஜாதி பாகுபாட்டிற்கு எதிராக தீவிரமான எதிர்ப்புகள், காவல்துறையின் நியாயமற்ற நடவடிக்கைகளுக்கு எதிராக அதிகமான மக்களின் பங்களிப்புடன் கூடிய போராட்டங்கள், இலக்கிய கலாச்சார நிகழ்ச்சிகள், பிற சமூகநீதி இயக்கங்களுடன் இணைந்து மேற்கொள்ளப்பட்ட பல்வேறு செயல்பாடுகள் போன்றவற்றை இவர்கள் ஏற்பாடு செய்தனர். தீண்டத் தகாதவர்களாகக் கருதப்பட்டு ஓரங்கட்டப்பட்டவர்களுடைய வாழ்க்கையை இலக்கியம், சினிமா, நாடகம் ஆகியவற்றில் கருப்பொருள்களாக மாற்றவும் தலித்துகளுக்கு எதிரான தாக்குதலுக்கு எதிராக வலுவான நடவடிக்கைகள் எடுக்க அரசாங்கத்தை வற்புறுத்தவும் தலித் சிறுத்தைகள் இயக்கத்திற்கு முடிந்தது.



டாக்டர். பி. ஆர். அம்பேத்கார்



கான்ஷிராம்

தலித் வகுப்பினரின் மேம்பாட்டிற்காக உருவாக்கப்பட்ட மற்றொரு அமைப்பு 1978 இல் உருவாக்கப்பட்ட பிற்படுத்தப்பட்ட மற்றும் சிறுபான்மைச் சமூகங்களின் பணியாளர்கள் கூட்டமைப்பு (BAMCEF- Backward and minority communities Employees Federation) ஆகும். இந்த அமைப்பு பணியாளர்களின் நலன்களைப் பாதுகாப்பதற்காக மட்டுமே உருவாக்கம் செய்யப்பட்டதல்ல. மாறாக பட்டியல் சாதியினர், பழங்குடியினர், பிற பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சிறுபான்மையினர் ஆகியோருக்கு அரசியல் அதிகாரம் கிடைப்பதற்காகவும் இந்த இயக்கம் செயல்பட்டது. இந்த அமைப்பில் இருந்து தான் தலித் ஷோஷித் சமாஜ் சங்கர்ஷ்

சமிதியும் கான்ஷிராமின் தலைமையில் பகுஜன் சமாஜ் கட்சியும் (BSP) உருவாயின. உத்தரப் பிரதேசம், ஹரியானா, பஞ்சாப் ஆகிய மாநிலங்களில் தலித்துகளின் ஆதரவுடன் அரசியல் செல்வாக்கைப் பெற பி. எஸ்.பிக்கு முடிந்தது.

தலித் இயக்கங்களையும் அவற்றின் செயல்பாடுகளையும் பகுப்பாய்வு செய்யவும்.

## பெண்கள் முன்னேற்றங்கள்

பாலின சமத்துவம், பெண் கல்வி, தொழில், சமூக–அரசியல் துறைகளில் விகிதாச்சார பிரதிநிதித்துவம் போன்ற தேவைகளுக்காக செயல்பட்ட இயக்கங்களே பெண் உரிமை இயக்கங்கள். குடும்ப வன்முறை, உரிமை மறுப்பு, அடக்குமுறை, பாலியல் துன்புறுத்தல், ஆண் ஆதிக்கம் போன்றவை பெண் சமூகம் எதிர்கொள்ளும் பிரச்சனைகள் ஆகும். இத்தகைய பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்பதற்காக நாட்டில் பல இயக்கங்கள் தோன்றின. முக்கியமான சில பெண் இயக்கங்களைப் பற்றி நாம் கலந்துரையாடலாம்.

### மது எதிர்ப்பு இயக்கம் (Anti-Arrack Movement)

1990 களில் ஆந்திர பிரதேசத்தில் நெல்லூர் மாவட்டத்தில் உருவான பெண்கள் முன்னேற்ற இயக்கமே மது எதிர்ப்பு இயக்கம். ஆயிரக்கணக்கான பெண்கள் இணைந்த இந்த இயக்கம் பின்னர் மாநிலம் முழுவதும் பரவியது. உள்ளூரிலேயே தயாரித்து விநியோகிக்கப்பட்ட போதைப் பொருள் சாராயம். போதைப் பொருளின் பரவலான பயன்பாடு சமூகத்தில் முரண்பாடுகளை உருவாக்கியதோடு இளைஞர்களின் மனதையும் உடல் நிலையையும் சேதப்படுத்தின. இது கிராமத்தின் பொருளாதார அடித்தளத்தை சீரழிக்கவும், குடும்ப வன்முறை, பெண்களுக்கு எதிரான வன்முறைகள், வறுமை போன்றவற்றிற்கும் வழி வகுத்தன. பெண்கள் எதிர்கொள்ளும் பாலியல் வன்முறை, பொது இடங்களில் வன்முறைகள், பாலின பாகுபாடு போன்ற பல்வேறு பிரச்சனைகளை நிவர்த்தி செய்யும் இயக்கமாக இந்த மது எதிர்ப்பு இயக்கம் வளர்ந்தது. இது சமூகத்தில் போதைப் பொருளுக்கு எதிராகவும் பெண்கள் நேரிடுகிற பிரச்சனைகளுக்கு எதிராகவும் சமூக விழிப்புணர்வை உருவாக்க உதவியது.



மது எதிர்ப்பு போராட்டாம், ஹைத்ரபாத் - 1992

மது எதிர்ப்பு இயக்கம் பெண்கள் விடுதலை இயக்கமாக எவ்வாறு பரிணமித்தது என்பதை கலந்துரையாடி குறிப்பு தயாரிக்கவும்.




போதைப் பொருள் பயன்பாடு சமூகத்தில் உருவாக்கும் பல்வேறு பிரச்சினைகளைத் தீர்ப்பது மது எதிர்ப்பு இயக்கத்தின் நோக்கமாகும். இன்றைய சமூகத்தில் போதைப்பொருள் பயன்பாடு பல பிரச்சினைகளை உருவாக்கி வருகிறது. அதற்கு எதிராக ஒரு விழிப்புணர்வு நிகழ்ச்சி ஏற்பாடு செய்யவும்.

## நிர்பயா இயக்கம்

டெல்லியில் பெண்களுக்கு எதிரான வன்முறைகளுக்கு எதிரே உருவான பொதுமக்கள் இயக்கமே நிர்பயா இயக்கம். 2012 இல் டெல்லி நகரத்தில் ஒரு பெண் பாலியல் வன்கொடுமைக்கு இரையாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டார். இந்தச் சம்பவம் நாடு முழுவதும் பெரும் போராட்டங்களுக்கு வழி வகுத்தது. இந்தப் போராட்டமே நிர்பயா இயக்கம் உருவாவதற்குக் காரணமானது. பெண்களுக்கு எதிரான பாலியல் வன்கொடுமைகளுக்கு எதிராக வலுவான சட்ட நடவடிக்கைகள் எடுக்கவும், அதுபோன்ற வழக்குகளில் சட்ட நடவடிக்கைகளை விரைவு படுத்தவும், முன்மாதிரியான தண்டனை உறுதி செய்வதும் நிர்பயா இயக்கம் முன்வைத்த முக்கிய கோரிக்கைகள் ஆகும். இந்தியக் குற்றவியல் சட்டத் திருத்தம் 2013 (நிர்பயா சட்டம்) பாலியல் வன்முறை வழக்குகளைக் கையாள அதிவிரைவு நீதிமன்றங்கள் (Fast-track Courts) போன்றவை நிர்பயா போராட்டத்திற்கு பின் உருவானவைகளாகும்..

## மீனவர்களின் முன்னேற்றம்

தேசிய மீனவர் சங்கம் – லோகோ

உலகிலேயே இரண்டாவது பெரிய மீனவர் சமூகமே இந்திய மீன்பிடி தொழிலாளர்கள். கிழக்கு, மேற்குக் கடலோரப் பகுதிகளில் வசிக்கின்ற கோடிக்கணக்கான மக்களின் வாழ்வாதாரமாக மீன்பிடித்தல் உள்ளது. மீனவர்கள் தங்களது வாழ்வாதாரம் தொடர்பாக எதிர்கொள்ளும் பிரச்சனைகளைத் தீர்க்க பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. 1980 களின் நடுப்பகுதியில் நமது நாட்டின் பொருளாதாரக் கொள்கைகளில் ஏற்பட்ட மாற்றங்கள் மீன்பிடித் துறைகளிலும் குறிப்பிடத்தக்க தாக்கத்தை செலுத்தியது. முக்கியமாக ஆழ்கடல் மீன் பிடித்தல் தொடர்பான ஒன்றிய அரசின் கொள்கைகளுக்கு எதிரே போராட்டங்கள் நடத்தப்பட்டன. தேசிய மீனவர் சங்கம் (National Fishworkers Forum-NFF) என்ற சங்கத்தின் தலைமையில் போராட்டங்கள் நடத்தப்பட்டன. இது பல்வேறு மாநிலங்களில் பணிபுரியும் பாரம்பரிய மீன்பிடித் தொழிலாளர்களின் குழுக்களை ஒருங்கிணைத்து அவர்களின் உரிமைகளைப் பாதுகாக்க பாடுபடும் ஓர் அமைப்பாகும். இந்தியாவின் கடல் பகுதியில் வெளிநாட்டு நிறுவனங்களுக்கு மீன் பிடிப்பதற்கான அனுமதி வழங்கியது, வெளிநாட்டு நிறுவனங்களுக்கு இந்தியக் கடற் பகுதியில் மீன்பிடிக்க ட்ரோலிங் (rolling) உரிமம் அனுமதித்தது போன்றவை பாரம்பரிய மீன்பிடித் துறையை அழித்துவிடும் என்பதை சுட்டிக்காட்டியே சட்டப் போராட்டங்களும் நேரடி போராட்டங்களும் நடத்தப்பட்டன. கடலோர சுற்றுச்சூழல் பாதுகாப்பும் இந்த அமைப்பின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாகும். கேரளாவில் மீன்பிடித் தொழிலாளர்களின் NFF ன் தலைமையில் தொழிலாளர்கள் ஒருங்கிணைத்து உரிமை போராட்டத்தை வலுப்படுத்தினர். மீனவ தொழிலாளர்களின் சங்கம் என்ற உணர்வு உருவானது ஜனநாயக அமைப்பில் அவர்களின் பங்களிப்பை அதிகரிக்க உதவியது.

## சுற்றுச்சூழல் இயக்கங்கள் (Environmental Movements)

அறிவியல் பூர்வமற்ற வளர்ச்சி உருவாக்கும் சுற்றுச்சூழல் பிரச்சனைகளுக்கும் அதன் விளைவாக ஏற்படும் சமூக அநீதிகளுக்கும் எதிராக சுற்றுச்சூழல் இயக்கங்கள் தோன்றின. பெரிய அளவிலான நீர்ப்பாசன திட்டங்கள், தொழிற்சாலைகள், சுரங்கத் தொழில், காடு அழிப்பு ஆகியவை ஏற்படுத்தும் சுற்றுச்சூழல் மற்றும் சமூகப் பிரச்சனைகளை இந்த இயக்கங்கள் முக்கியமாகக் கருத்தில் கொண்டன. இயற்கை வளங்களைப் பாதுகாத்தல், பல்லுயிர் பாதுகாப்பு, சுற்றுச்சூழல் கொள்கை உருவாக்குதல், சுற்றுச்சூழல் விழிப்புணர்வு வளர்த்தல், நிலையான சீரான வளர்ச்சி போன்ற பல செயல்பாடுகளில் சுற்றுச்சூழல் இயக்கங்களுக்கு ஈடுபட முடிந்தது. அகில இந்திய அளவில் கவனத்தை ஈர்த்த சில முக்கிய சுற்றுச் சூழல் இயக்கங்களை அறிந்து கொள்வோம்.

| இயக்கங்கள் | சிறப்புகள் |
| --- | --- |

### சிப்கோ இயக்கம்



சுந்தர்லால் பகுகுணா

- உத்தரகாண்டின் இமாலயப் பகுதிகளில் தொழிற்சாலைகளுக்காக பெரிய அளவில் மரங்கள் வெட்டப்படுவதை எதிர்த்தல்.
- உள்ளூர் மக்களுக்கு வன வளங்களின் மீதான உரிமைகளை பாதுகாப்பதற்கான நிலையை உருவாக்கினார்.
- பெண்களின் பங்கேற்பும் தலைமையும்.
- மரங்களைக் கட்டித் தழுவி போராடும் முறை.

### நர்மதா பச்சோவா ஆந்தோலன்



மேதா பட்கர்

- நர்மதா நதியில் சர்தார் சரோவர் திட்டத்திற்கு எதிராக உருவாக்கப்பட்ட இயக்கம்.
- பழங்குடி மக்களின் குடி ஒழிப்பிற்கு எதிராக செயல்பட்டது.
- உள்ளூர் மக்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்க செயல்பட்டது.
- நியாயமற்ற குடி ஒழிப்பிற்கும், புனர் குடியேற்றங்களுக்கும் எதிராக செயல்பட்டது.

### சைலன்ட் வாலி (அமைதி பள்ளத்தாக்கு)



சைலன்ட் வாலி (அமைதி பள்ளத்தாக்கு) தேசிய பூங்கா.

- சைலன்ட் வாலியில் முன்மொழியப்பட்ட நீர்மின் திட்டத்திற்கு எதிரான இயக்கம்.
- மழைக்காடுகள் மற்றும் பல்லுயிர் பாதுகாப்பிற்காகவும் செயல்பட்டது.
- போராட்டங்களைத் தொடர்ந்து சைலன்ட் வாலி மின் திட்டம் கைவிடப்பட்டது.
- சைலன்ட் வாலி தேசியப் பூங்காவாக அறிவிக்கப்பட்டது.

சுற்றுச்சூழல் இயக்கங்கள் மற்றும் பொதுமக்கள் இயக்கங்களின் தலையீடுகளின் விளைவாகப் பல சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சட்டங்களும் சுற்றுச்சூழல் உரிமைகளைப் பாதுகாக்கும் சட்டங்களும் பாதுகாக்கப்பட்ட வனப்பகுதிகளின் அறிவிப்புகளும் தேசியப் பூங்காக்களின் அறிவிப்புகளும் இந்தியாவில் உருவாயின.

**2002** — *பல்லுயிர்ச் சட்டம்*

**2006** — *பட்டியல் பழங்குடியினர் மற்றும் பாரம்பரிய வன குடிகளின் உரிமைகள் அறிந்து கொள்ளும் சட்டம்*

**2013** — *நிலம் கையகப்படுத்துதல், புனர் குடியேற்றம் ஆகியவற்றில் நியாயமான இழப்பீடு மற்றும் வெளிப்படைத் தன்மைக்கான உரிமைச் சட்டம்.*

நவீன காலத்தில் வளர்ச்சி நடவடிக்கைகளால் ஏற்படும் சுற்றுச்சூழல் மற்றும் சமூகப் பிரச்சனைகள் என்ற தலைப்பில் விவாதம் ஒன்று ஏற்பாடு செய்யவும்.

## விவசாயிகளின் இயக்கம் (Peasant Movements)


வேளாண் போராட்டம்

வேளாண்மை செய்பவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகளைக் கருத்தில் கொண்டு பல இயக்கங்கள் இந்தியாவில் தோன்றின. பசுமைப் புரட்சியைத் தொடர்ந்து வேளாண் துறைக்கு ஓர் உத்வேகம் கிடைத்தது என்றாலும் 1980-களின் நடுப்பகுதியில் நமது பொருளாதாரக் கொள்கையில் ஏற்பட்ட தாராளமயமாக்கல் கொள்கைகள் வேளாண் துறையை நெருக்கடிக்குள் ஆக்கின. வேளாண் துறையில் ஏற்பட்ட சீர்திருத்தங்கள் உற்பத்தியையும் உணவு பாதுகாப்பையும் தொழில்துறையையும் கடுமையாகப் பாதிப்பதாக இருந்தன. இதற்கு எதிராக உத்தரப்பிரதேசத்தில் உருவாக்கப்பட்ட பாரதிய கிசான் யூனியன் (BKU) கிராமப்புறங்களில் வேளாண்மை செய்பவர்களை ஒருங்கிணைத்து பெரும் போராட்டங்களை நடத்தியது. மகாராஷ்டிராவில் ஷேத்காரி சங்கமும் கர்நாடகாவில் ரயத சங்கமும் நாட்டின் பல்வேறு பகுதிகளில் ஏற்பட்ட வேளாண் முன்னேற்ற இயக்கங்களுக்கு எடுத்துக்காட்டுகளாகும். 2020 – 2021 காலகட்டத்தில் டெல்லியின் எல்லைப் பகுதிகளில் சம்யுக்த கிஸான் மோர்சா வின் ஆதரவில் ஒன்றிய அரசாங்கத்தின் வேளாண் சட்டங்களுக்கு எதிராக நடத்தப்பட்ட வேளாண் போராட்டம் மக்களின் பங்கேற்பினால் கவனத்தைப் பெற்றது. போராட்டத்தைத் தொடர்ந்து வேளாண்மை செய்பவர்களின் கோரிக்கைகளை அரசாங்கம் ஏற்றுக் கொண்டது.

பிற வேளாண் இயக்கங்களையும் வேளாண் சட்டங்களையும் உட்படுத்தி குறிப்பு தயாரிக்கவும்.

## தகவல் அறியும் உரிமைக்கான இயக்கம்

தகவல் அறிவதற்கான இயக்கமும் அதைத் தொடர்ந்து உருவான சட்டமும் பொதுமக்கள் போராட்டங்களுக்கு கிடைக்கும் வரவேற்பிற்கும் வெற்றிக்கும் எடுத்துக்காட்டுகள் ஆகும். 1990 இல் ராஜஸ்தானில் மஸ்தூர் கிஷான் சக்தி சங்கம் (MKSS) என்ற சங்கமே இந்த இயக்கத்தை தொடங்கியது. ராஜஸ்தானில் பீம் தெஹ்சில் என்ற பின் தங்கிய பகுதியில் இருந்து முதலில் பொதுக் கட்டுமானங்கள் தொடர்பான ஆவணங்கள் தரும்படி வேண்டினர். இது பள்ளிக்கூடங்கள், மருந்தகங்கள், சிறிய அணைகள் ஆகியவை கட்டுவது தொடர்பாகப் பொது நிதி தவறாகப் பயன்படுத்தப்பட்டதாக எழுந்த ஐயங்கள் காரணமாக நிகழ்ந்தது. MKSS இன் முன்னணியில் தில்லியை மையமாக்கி தகவல் அறியும் உரிமைக்கான தேசியக் கவுன்சில் (National Council for People's Right to Information) உருவாக்கப்படவும் தேசிய அளவில் பிரச்சாரம் ஆரம்பிக்கப்பட்டது. மேலும் நுகர்வோர் கல்வி ஆராய்ச்சி மையம் (Consumer Education and Research Centre), பிரஸ் கவுன்சில், ஷூரி குழு ஆகியவையும் அதே தேவையை முன்வைத்து தகவல் அறியும் உரிமைக்கான வரைவு வடிவம் தயாரிப்பதற்கு அறிவுறுத்தின. இந்தச் சூழலில் தான் 2005 இல் தகவல் அறியும் உரிமைக்கான சட்டம் நடைமுறைக்கு வந்தது.

### தகவல் அறியும் உரிமைச் சட்டம்
### (Right to Information Act)

2005 இல் இந்திய நாடாளுமன்றத்தால் தகவல் அறியும் உரிமைச் சட்டம் அங்கீகரிக்கப்பட்டு 2005 அக்டோபர் 12 இல் சட்டம் அமலுக்கு வந்தது.இந்தச் சட்டம் பொது நிறுவனங்களிலிருந்தும் அதிகாரிகளிடமிருந்தும் குடிமக்களுக்கு தகவல்கள் கிடைப்பதற்கான உரிமையை உறுதி செய்கிறது. இதன்படி தகவல்கள் 30 நாட்களுக்குள் வழங்கப்பட வேண்டும். மனுதாரரின் உயிருக்கும் சுதந்திரத்திற்கும் அச்சுறுத்தல்கள் ஏற்படும் சூழ்நிலைகளில் 48 மணி நேரத்திற்குள் தகவல்கள் வழங்கப்பட வேண்டும். தகவல்கள் கொடுப்பதற்காக ஒவ்வொரு நிறுவனத்திலும் ஒரு தலைமை தகவல் அதிகாரி பணியாற்றுகிறார். குறிப்பிட்ட நேரத்திற்குள் தகவல்கள் கிடைக்கப் பெறாவிட்டால் மனுதாரருக்கு மேலதிகாரியிடம் மேல் முறையீடு செய்யலாம். தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை செயல்படுத்துவதற்காக மத்தியிலும் மாநிலங்களிலும் தகவல் அறியும் உரிமை ஆணையங்கள் செயல்படுகின்றன. ஜனநாயகத்தில் வெளிப்படை தன்மை அவசியம் என்பதாலும் ஊழல் ஒழிக்கப்பட வேண்டும் என்பதாலும் பொது விவரங்கள் தொடர்பான அதிகாரப்பூர்வமான தகவல்கள் பொதுமக்களுக்குக் கிடைக்க வேண்டி உள்ளது.

தகவல் அறியும் உரிமை இயக்கம் இந்திய ஜனநாயகத்தை எவ்வாறு வலுப்படுத்துகிறது என்ற தலைப்பில் ஒரு கட்டுரை தயாரிக்கவும்.

## வட்டார இயக்கங்கள்

இந்தியா பன்முகத்தன்மை நிறைந்த நாடு ஆகும். இயற்கை அமைப்பு, காலநிலை, மொழி, கலாச்சாரம், வாழ்க்கை முறை, மதம், இனம் போன்றவற்றில் இந்தப் பன்முகத்தன்மையைக் காணலாம். இவற்றின் அடிப்படையில் ஒரு பகுதியின் சிறப்புக் கவனம், நன்மைகள், பாதுகாப்பு போன்ற தேவைகளுக்காக தோன்றிய இயக்கங்களே வட்டார இயக்கங்கள். முன் வைக்கப்படும் கோரிக்கைகளின் அடிப்படையில் இத்தகைய இயக்கங்களை முக்கியமாக குடியேற்ற எதிர்ப்பு இயக்கங்கள், வட்டார சுயாட்சி இயக்கங்கள், பிரிவினைவாத இயக்கங்கள் என வகைப்படுத்தலாம். இதுபோன்ற சில இயக்கங்களும் அவற்றை இந்திய ஜனநாயகம் எவ்வாறு அணுகியது என்பதையும் நாம் பார்ப்போம்.

## திராவிட இயக்கம்


ஈ. வே. ராமசாமி நாயக்கர்

திராவிட மக்களின் அரசியல் அதிகாரம், தமிழ் மொழியின் வளர்ச்சி, பகுத்தறிவு போன்ற கருத்துகளின் செல்வாக்கால் இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பக் காலத்தில் தமிழ்நாட்டில் ஆரம்பித்த இயக்கமே திராவிட இயக்கம். திராவிடக் கலாச்சாரத்தின் மேல் பிராமண கலாச்சாரம் ஆதிக்கம் செலுத்துவதை எதிர்ப்பது என்பதும் இந்த இயக்கத்தின் நோக்கமாக இருந்தது. ஈ. வே. ராமசாமி நாயக்கரின் சுயமரியாதை என்ற சித்தாந்தத்திலிருந்து இந்த இயக்கம் உருவானது. பின்னர் அவர் திராவிடக் கழகம் என்ற அரசியல் கட்சியை உருவாக்கினார். இது திராவிட முன்னேற்றக் கழகமாக (DMK) மாறியது. வலுவான போராட்டங்கள் மூலமாக தமிழ்நாடு அரசியலில் செல்வாக்கு செலுத்திய டி.எம்.கே. 1967 இல் அதிகாரத்தில் வந்தது. பிற்கால தமிழ்நாடு அரசியலில் பல்வேறு திராவிட இயக்கங்களின் செல்வாக்கைப் பார்க்க முடியும்.

## குடியேற்ற எதிர்ப்பு இயக்கங்கள்

கட்டுப்பாடற்ற குடியேற்றத்தால் ஒரு பகுதியின் சொந்த மக்களுக்கு உருவாகின்ற இனம் – மொழி – கலாச்சாரம் – பொருளாதாரம் – தொழில் பிரச்சனைகளை அடிப்படையாகக் கொண்டு உருவாகின்ற இயக்கங்களே குடியேற்ற எதிர்ப்பு இயக்கங்கள். இவற்றில் மிகவும் முக்கியமானது அஸ்ஸாம் இயக்கம்.

## அஸ்ஸாம் இயக்கம்

குடியேற்றத்திற்கு எதிராக குறிப்பாக வங்கதேசத்தினரின் வருகைக்கு எதிராக 1979 முதல் 1985 வரை அஸ்ஸாமில் நடந்த போராட்டமே அஸ்ஸாம் இயக்கத்திற்கு தொடக்கம் குறித்தது. ஆல் அஸ்ஸாம் ஸ்டூடன்ஸ் யூனியன் (அனைத்து அஸ்ஸாம் மாணவர் சங்கம்) இந்த இயக்கத்திற்குத் தலைமை வகித்தது. வங்காள தேசத்திலிருந்து சட்டவிரோதக் குடியேற்றம் அஸ்ஸாம் மக்களின் வேலை வாய்ப்புகளை அழித்துவிடும் என்றும் வறுமைக்கும் பொருளாதார நெருக்கடிக்கும் வழி வகுக்கும் என்றும் போராட்டக்காரர்கள்

கவலை தெரிவித்தனர். 1951 ற்குப் பிறகு சட்ட விரோதமாக அஸ்ஸாமில் குடியேறியவர்களை வெளியேற்ற வேண்டும் எனப் போராட்டக்காரர்கள் கோரிக்கை வைத்தனர். பரவலான வன்முறைக்கும் மோதல்களுக்கும் இப் போராட்டம் வழிவகுத்தது. ஒன்றிய அரசுப் போராட்டக்காரர்களுடன் 1985 இல் கையெழுத்திட்ட ஒப்பந்தமும் அதைத் தொடர்ந்து ஜனநாயக தலையீடுகளும் இந்தப் பிரச்சினையை ஓரளவு தீர்க்க உதவியது.

## சுயாட்சிக்கான இயக்கம்

நாட்டிற்குள் அதிக சுயாட்சிக்கு வேண்டியோ, சிறப்பு மாநில அந்தஸ்துக்கு வேண்டியோ தோன்றிய இயக்கங்களே இவை. வட்டாரமாக புறக்கணிக்கப்படுகிறது என்ற மனப்பான்மை, மொழியியல், கலாச்சார தன்மைகள், சமநிலையற்ற பொருளாதார வளர்ச்சி போன்ற விஷயங்களை எழுப்பிக் கொண்டு இது போன்ற இயக்கங்கள் சுயாட்சி வேண்டும் எனக் கோருகின்றன. இந்தப் பிரிவில் வரும் இயக்கங்களைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள பட்டியலில் இருந்து நாம் அறிந்து கொள்வோம்.

| இயக்கங்கள் | தலைமை வழங்கிய அமைப்பு | காரணங்கள் / தேவைகள் | தீர்வு |
|---|---|---|---|
| கூர்க்கா லேண்ட் இயக்கம் | கூர்க்கா தேசிய விடுதலை முன்னணி (Gorkha National Liberation Front) | மேற்கு வங்காளத்தில் நேபாள மொழி பேசும் கூர்க்கா பிரிவினருக்கு ஒரு தனிப்பட்ட மாநிலம் உருவாக்குதல் | 1988 இல் சுயாட்சி அதிகாரம் பெற்ற டார்ஜிலிங் கூர்க்கா ஹில் கவுன்சில் உருவாக்கப்பட்டது.<br>2012 இல் கூர்க்கா ஹில் கவுன்சிலுக்குப் பதிலாக கூர்க்காலேண்ட் டெரிடோரியல் அட்மினிஸ்ட்ரேஷன் உருவாக்கப்பட்டது. |
| ஜார்க்கண்ட் இயக்கம் | ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சா | பீகாரிலிருந்து ஜார்க்கண்ட் பகுதி பிரிக்கப்பட்டு தனி மாநிலம் உருவாக்குதல் | 2000-இல் ஜார்க்கண்ட் மாநிலம் உருவானது. |
| தெலுங்கானா இயக்கம் | தெலுங்கானா ராஷ்டிர சமிதி | ஆந்திரப்பிரதேசம் பிரிக்கப்பட்டு தெலுங்கானா மாநிலம் உருவாக்குதல் | 2014 இல் தெலுங்கானா மாநிலம் உருவானது. |

## பிரிவினைவாத இயக்கங்கள்

இந்தியாவில் இருந்து சில பகுதிகளைப் பிரித்து சுதந்திர நாடுகளை உருவாக்கும் நோக்கத்தோடு தொடங்கப்பட்ட இயக்கங்களே இந்தப் பிரிவில் அடங்கும். பஞ்சாப். ஜம்மு காஷ்மீர், மிசோராம், நாகலாந்து ஆகிய மாநிலங்களில் உள்ள பிரிவினைவாத இயக்கங்கள் இதில் அடங்கும்.

## காலிஸ்தான் இயக்கம்

சீக்கிய மக்களுக்கு காலிஸ்தான் என்ற தனிநாடு வேண்டுமென்ற தேவையை முன்னிறுத்தி பஞ்சாபில் எழுந்த இயக்கமே காலிஸ்தான் இயக்கம். சீக்கிய சமூகத்தின் தீவிரமான பிரிவு இந்த இயக்கத்திற்கு தலைமை வகித்தது. தனிநாடு கிடைக்கப் பெறுதல் என்ற இலக்கை அடைய ஆயுதமேந்திய வழிகளை இவர்கள் கையாண்டனர். முக்கிய சீக்கிய ஆராதனை ஆலயமாகிய அமிர்தசரஸில் உள்ள பொற்கோவிலை போராட்டக்காரர்கள் அவர்களின் மையமாக மாற்றினர். கோவிலில் நுழைந்த தீவிரவாதிகளை ஒன்றிய அரசு 1984 இல் 'ஆப்ரேஷன் ப்ளூஸ்டார்' என்ற ராணுவ நடவடிக்கை மூலம் அடக்கியது. இதைத்தொடர்ந்து பிரதமர் இந்திரா காந்தி தனது இரண்டு சீக்கிய மெய்காப்பாளர்களால் படுகொலை செய்யப்பட்டார். இந்திரா காந்தியின் மரணத்தைத் தொடர்ந்து நாட்டின் பல பகுதிகளில் சீக்கியர்களுக்கு எதிராகக் கலவரங்கள் வெடித்தன. இந்தக் கலவரத்தில் நிரபராதிகளான பல சீக்கியர்கள் கொல்லப்பட்டனர். பிரதமர் ராஜீவ் காந்தியும் சீக்கியத் தலைவர் ஹர்சந்த் சிங் லோங் கோவாலும் சேர்ந்து 1985 இல் பஞ்சாப் ஒப்பந்தத்தில் கையெழுத்திடப்பட்ட பிறகு நிலைமைகள் மாறியது. அதைத்தொடர்ந்து உருவான திறமையான ஜனநாயக நடவடிக்கைகள் மூலம் பஞ்சாபின் பிரிவினை வாதத்தை முற்றிலுமாக ஒழிக்கவும் சமாதானத்தை திரும்ப நிலைநாட்டவும் முடிந்தது.

## ஜம்மு காஷ்மீரில் பிரிவினைவாத இயக்கங்கள்

அரசியலமைப்பு பிரிவு 370 ன் படி சிறப்பு உரிமைகள் வழங்கப்பட்ட மாநிலமாகும் ஜம்மு காஷ்மீர். இந்தியாவிலிருந்து காஷ்மீரைப் பிரித்து சுதந்திர நாடாக்குவது அல்லது பாகிஸ்தானுடன் இணைப்பது என்ற நோக்கத்துடன் ஜம்மு காஷ்மீரில் உள்ள பிரிவினைவாத இயக்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இவர்கள் நடத்திய ஆயுத தாக்குதல்கள் நாட்டின் பாதுகாப்பிற்கும் ஒருமைப்பாட்டிற்கும் ஒற்றுமைக்கும் பெரும் அச்சுறுத்தலாக இருந்தது. அமைதிப் பேச்சு வார்த்தைகள் மூலமாகவும் சிறப்பு பொருளாதார மேம்பாட்டு நடவடிக்கைகள் மூலமாகவும் அமைதியை நிலைநாட்ட ஒன்றிய அரசு முயற்சித்தது. ஜம்மு காஷ்மீருக்கு வழங்கப்பட்ட பிரிவு 370 இன் படி உள்ள சிறப்பு உரிமைகளை 2019 ல் ஒன்றிய அரசு ரத்து செய்து, ஜம்மு காஷ்மீர் மறு சீரமைப்புச் சட்டம் நிறைவேற்றவும் செய்தது. இதன்படி ஜம்மு காஷ்மீரின் மாநில அந்தஸ்து ரத்து செய்யப்பட்டு ஜம்மு காஷ்மீர், லடாக் என இரண்டு யூனியன் பிரதேசங்களாக மறுசீரமைக்கப்பட்டன. 2024 இல் ஜம்மு காஷ்மீர் சட்டமன்றத்திற்கு அமைதியான முறையில் தேர்தல் நடைபெறவும் ஜம்மு காஷ்மீர் தேசிய மாநாட்டுத் தலைவர் உமர் அப்துல்லா முதல்வராக அரசாங்கம் அமைக்கவும் முடிந்தது.

இந்தியாவின் வடமேற்குப் பகுதிகளைப் போலவே வடகிழக்குப் பகுதிகளிலும் பிரிவினைவாத இயக்கங்கள் வளர்ந்து வந்தன. வட கிழக்கு மாநிலங்களில் நிலவில் இருந்த சில பிரிவினைவாத இயக்கங்களை நாம் தெரிந்து கொள்ளலாம்.

## வடகிழக்குப் பிரிவினை வாத இயக்கங்கள்

| இயக்கம் | தலைவர் | தேவை | தீர்வு |
|---|---|---|---|
| மிசோ தேசிய முன்னணி (MNF) | லால் டெங்கா | மிசோ பழங்குடியி னருக்குக்காக தனி நாடு | 1986இல் சமாதான ஒப்பந்தத்தின் படி மிஸோராமுக்குச் சிறப்பு அதிகாரங்களுடன் முழு மாநில அந்தஸ்து வழங்க முடிவு செய்யப்பட்டது. |
| நாகா தேசிய கவுன்சில் | அங்காமி ஸஃபு பிஸோ | நாகா பகுதிகளை ஒன்றிணைத்தல், சுயாட்சி, பழங்குடி கலாச்சாரம் பாதுகாக்கப்படல் | 2015 இல் நாகா சமாதான ஒப்பந்தம் கையெழுத்தானது. |

## இந்திய ஜனநாயகம் நேரிடும் வேறு சில சவால்கள்

நமது நாட்டில் ஜனநாயக செயல்முறையைச் சீர்குலைக்கும் முக்கிய சவால்கள் வகுப்புவாதம், ஒன்றிய – மாநில உறவுகளில் மோதல்கள், ஊழல், அரசியலில் குற்றவியல் தன்மை, கட்சித்தாவல் போன்ற செயல்பாடுகள் ஆகும். இவை மக்களின் வாழ்வாதாரத்தையும் நாட்டின் முன்னேற்றத்தையும் பொருளாதார வளர்ச்சியையும் மோசமாகப் பாதிக்கின்றன. இந்தச் செயல்கள் இந்திய ஜனநாயகத்திற்கு எவ்வாறு சவால்களை ஏற்படுத்துகின்றன என்பதை ஆராய்வோம்.

### வகுப்புவாதம் (Communalism)

மதத்தின் அடிப்படையில் மக்களை பிரித்து சமூக மோதல்களை உருவாக்கும் சித்தாந்தமே வகுப்புவாதம். காலனித்துவக் காலத்தில் பிரித்து ஆளுதல் என்ற பிரிட்டீஷ் தந்திரம் மதத்தின் அடிப்படையில் இந்திய மக்களைப் பிரிப்பதற்கும் வகுப்பு வாதம் வளர்வதற்கும் காரணமானது. அதேபோல் இந்தியப் பிரிவினையைத் தொடர்ந்து உண்டான கலவரங்களும் மக்களை மதத்தின் அடிப்படையில் பிரிப்பதற்கும் வகுப்புவாதம் வளர்வதற்கும் வழி வகுத்தது. வகுப்புவாதப் பிரிவினை நமது அரசியலமைப்பின் விழுமியங்களான மதச்சார்பின்மை, சமூக நீதி ஆகியவற்றை பலவீனப்படுத்தி நாட்டின் ஒற்றுமைக்கும் ஒருமைப்பாட்டிற்கும் அச்சுறுத்தலாகவும் மாறுகிறது. மதத்தின், வகுப்பு வாதத்தின் அடிப்படையில் பொது கருத்து உருவாக்கப்படுவதும் அரசியல் கட்சிகள் இதைத் தேர்தல்களில் வாக்காளர்களிடம் செல்வாக்கு செலுத்த பயன்படுத்துவதும் ஜனநாயகத்திற்குச் சவாலாக அமைகிறது.. மக்களிடம் கவனம் உருவாக்குவதன் மூலமாகவும் விழிப்புணர்வு மூலமாகவும் சரியான ஜனநாயக கல்வியின் மூலமாகவும் மட்டுமே வகுப்புவாதத்தை எதிர்க்க முடியும்.

'வகுப்புவாதம் இந்திய ஜனநாயகத்திற்கு ஏற்படுத்தும் ஆபத்து' என்ற தலைப்பில் ஒரு சொற்பொழிவு தயாரிக்கவும்.

## ஒன்றிய – மாநில உறவுகளில் மோதல்கள்
## (Tensions in Centre-State Relations)




மேலே கொடுக்கப்பட்டுள்ள தலைப்புச் செய்திகள் வாசித்தீர்கள் அல்லவா. அதிகார வரம்புகளை மீறும் ஆளுநருக்கு எதிராக மாண்புமிகு உச்சநீதிமன்றத்தின் கண்காணிப்புகள் இவை. இதிலிருந்து நீங்கள் என்ன புரிந்து கொண்டீர்கள்?

•

•

ஒன்றிய –மாநில உறவுகளிலேயே மோதல்கள் இந்திய ஜனநாயகம் நேரிடும் மற்றொரு முக்கிய சவாலாகும். அரசியலமைப்பு அதிகாரங்களை ஒன்றிய அரசுக்கும் மாநில அரசுக்கும் பிரித்து அளிக்கப்பட்டு இருந்தாலும், அதிக அதிகாரம் ஒன்றிய அரசிற்கு உறுதி செய்யப்பட்டுள்ளது. சில காரியங்களில் ஒன்றிய அரசின் அதிக அதிகாரத்தை இது உறுதி செய்துள்ளது. மறுபுறம் மாநிலங்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்கள் சுதந்திரமாகப் பயன்படுத்தப்படுவதற்கான உரிமைகளையும் அரசியலமைப்பு வழங்குகிறது. ஆனால் அடிக்கடி மாறி மாறி வரும் ஒன்றிய அரசுகள் நேரடியாகவோ ஆளுநர்களின் மூலமாகவோ மாநிலங்களின் இந்த உரிமையில் தலையிடுகின்றன. ஒன்றிய அரசு வரையறுக்கப்பட்ட திட்டங்களிலும், வளங்களை விநியோகிப்பதிலும் அரசியலின் தலையீட்டை நமக்கு காண முடியும். இத்தகைய நடவடிக்கைகள் தான் ஒன்றிய – மாநில உறவுகளை முக்கியமாக குழப்பத்திற்கு உள்ளாக்குகிறது.

ஒன்றிய அரசுக்கும் மாநில அரசுக்கும் இடையே உருவாகும் சட்டப்பூர்வமான மோதல்களுக்குத் தீர்வு காண நீதித்துறைக்குதான் அதிகாரம் உள்ளது.

## ஒன்றிய – மாநில உறவுகள் (Centre – State Relations)

அரசியலமைப்பு உண்மையில் ஒரு சட்டக்கூடு. அதாவது வெறும் எலும்புக்கூடு தான். அதற்கு சதையும் ரத்தமும் தருவது உண்மையான அரசியல் செயல்முறைகள் ஆகும். எனவே இந்தியக் கூட்டாட்சியை ஒரு பெரிய அளவில் தாக்கம் செலுத்துவது மாறிக்கொண்டிருக்கும் அரசியல் செயல்முறைகளாகும். அரசியலமைப்பு நிலவில் வந்த நாள் முதலே ஒன்றிய மாநில உறவுகள் நிலைநிறுத்துவதில் ஆளுநரின் பங்கு மிகவும் முக்கியமானதாகும்.

## ஆளுநரின் பங்கு (Role of Governor)

ஆளுநரின் பங்கு எப்போதுமே மாநிலங்களுக்கும் ஒன்றிய அரசுக்கும் இடையை உள்ள ஒரு சர்ச்சைக்குரிய விஷயமாகும். ஆளுநர் என்பவர் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு அதிகாரப்பூர்வமான பதவி அல்ல. ஓய்வு பெற்ற ராணுவ அதிகாரிகள், அரசு அதிகாரிகள், அரசியல்வாதிகள் போன்றோர்களே பொதுவாக ஆளுநர்களாக நியமிக்கப்படுகின்றனர். ஆளுநரை நியமிப்பது ஒன்றிய அரசின் பரிந்துரை மூலம் ஜனாதிபதியாகும். ஆளுநராக நியமிக்கப்படுவதற்கான குறைந்த வயது 35 ஆகும்.

ஒன்றிய அரசிலும் மாநிலங்களிலும் வெவ்வேறு அரசியல் கட்சிகள் ஆட்சி செய்யும் சூழலில் ஆளுநரின் பங்கு மிகவும் விவாதங்களுக்குரியதாகவும் மாறுகிறது. இந்தக் காரணத்தால் ஆளுநரின் செயல்பாடுகள் மாநில அரசின் நடவடிக்கைகளில் ஒன்றிய அரசின் தலையீடாக பல வேளைகளில் விமர்சிக்கப்படுகின்றன. ஒன்றிய –மாநில உறவுகளைக் குறித்து ஆய்வு செய்ய 1983 இல் ஒன்றிய அரசு நியமித்த சர்க்காரியா ஆணையம் தீவிரமான அரசியல்வாதிகளை ஆளுநராக நியமிக்க கூடாது என்று பரிந்துரைத்துள்ளது.

### சர்க்காரியா ஆணையம்

ஒன்றிய –மாநில உறவுகளைக் குறித்து ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பிக்க ஒன்றிய அரசால் நியமிக்கப்பட்ட ஆணையம் ஆகும். 1983 இல் நியமிக்கப்பட்ட ஆணையத்தில் தலைவர் உச்சநீதிமன்றத்தில் இருந்து ஓய்வு பெற்ற நீதிபதி ஆர். எஸ். சர்க்காரியா ஆவார். 1988–இல் ஆணையம் அறிக்கையை சமர்ப்பித்தது. ஒன்றிய அரசின் அதிகாரங்கள் காலம் செல்லும்தோறும் அதிகரித்து வருவதாக ஆணையம் சுட்டிக் காண்பித்தது. ஒன்றிய மாநில உறவுகளில் உராய்வுகளுக்கும் மோதல்களுக்கும் தவிர்க்கப்பட்ட அரசியல் அமைப்பு மற்றும் அரசியல் ரீதியான மாற்றங்கள் தேவை என்பதை ஆணையம் கண்டறிந்தது. சர்க்காரியா ஆணையத்தின் அறிக்கை பரவலாக வரவேற்கப்பட்டாலும் அது முழுமையாக செயல்படுத்தப்படவில்லை.

ஆளுநரின் பங்கும் அதிகாரங்களும் விவாதத்திற்குரியவையாக மாறுவதற்கு இன்னொரு காரணமும் உண்டு. அரசியலமைப்பின் 356 ஆம் பிரிவு இந்த விவாதத்திற்கான அடிப்படையாகும். இந்தியாவின் எந்த மாநிலத்திலும் ஜனாதிபதி ஆட்சியை அமல்படுத்த முடியும் என்று இந்தப் பிரிவு வழி செய்கிறது. ஆளுநரின் அறிக்கை அடிப்படையில் ஜனாதிபதிக்கு அந்த மாநிலத்தில் ஜனாதிபதி ஆட்சியைக் கொண்டுவர முடியும். இருப்பினும் அரசியலமைப்பின் விதிகளுக்கு உட்பட்டு ஆட்சியை நிர்வகித்துச் செல்வதில் மாநில அரசு தவறும் போது மட்டுமே இந்தப் பிரிவை பயன்படுத்த முடியும் என்று அரசியலமைப்பு உறுதியாகக் கூறுகிறது. ஆளுநரின் இந்த அதிகாரம் ஏராளமான மோதல்களுக்கு வழிவகுத்ததுண்டு. சட்டமன்றத்தில்

### 356-ஆம் பிரிவு

மாநிலங்களில் ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுகளைக் கலைக்கவோ மாநில ஆட்சியை ஏற்று நடத்தவோ பிரிவு 356 ஜனாதிபதிக்கு அதிகாரத்தை வழங்குகிறது. ஆளுநர் ஜனாதிபதிக்கு அளிக்கும் அறிக்கையின் அடிப்படையில் குடியரசுத் தலைவரின் ஆட்சி ஏற்படுத்தப்படுகிறது.

- இந்திய அரசியலமைப்பு நடைமுறைக்கு வந்த பிறகு இந்தப் பிரிவு 1951 இல் பஞ்சாப் அரசைக் கலைக்க முதலில் பயன்படுத்தப்பட்டது.
- 1967 பொதுத் தேர்தலுக்கு முன்பு வரை 356–ஆம் பிரிவு அபூர்வமாகவே பயன்படுத்தப்பட்டது. ஆனால் 1967 க்கு பிறகு இது பரவலாக பயன்படுத்தப்பட்டது.

தனிப்பெரும்பான்மையுள்ள மாநில அரசுகளைக் கூட ஜனாதிபதி கலைத்த நிகழ்வுகள் உள்ளன 1959 இல் கேரளா அரசு கலைக்கப்பட்டது இதற்கு உதாரணமாகும்.

## ஆளுநரின் அதிகாரங்களும் கடமைகளும்

ஒன்றிய அரசியல் உள்ளது போலவே மாநிலங்களிலும் நாடாளுமன்ற ஆட்சி முறையையே அரசியலமைப்பு வழங்குகிறது. எனவே, ஆளுநர் மாநிலத்தின் பெயரளவிலான தலைவராக இருப்பார். உண்மையான நிர்வாக அதிகாரம் முதலமைச்சர் தலைமையிலான அமைச்சரவையிடமே உள்ளது. எனவே ஆளுநர் தனது அதிகாரங்களை அமைச்சரவையின் ஆலோசனையின் பெயரிலேயே பயன்படுத்த வேண்டும். ஆளுநரின் முக்கியமான அதிகாரங்களும் கடமைகளும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

### சட்டமியற்றும் அதிகாரங்கள் (Legislative Powers)

- சட்டமன்றத்தைக் கூட்டவும் சட்டமன்றக் கூட்டத் தொடர்களின் முடிவை அறிவிக்கவும் சட்டமன்றத்தை கலைக்கவும் அதிகாரம் உண்டு.
- சட்டமன்றத்தில் உரையாற்ற வேண்டும்.
- சட்டமன்றம் நிறைவேற்றிய மசோதா அங்கீகரித்தல்.
- ஆணைகளை வெளியிடுதல்.
- பட்ஜெட், பண மசோதாக்கள் சபையில் தாக்கல் செய்வதற்கு முன் அனுமதி வழங்குதல்.

### நிர்வாக அதிகாரங்கள் (Executive Powers)

- மாநிலத்தில் அனைத்து நிர்வாக அதிகாரங்களும் ஆளுநரின் பெயரிலேயே பயன்படுத்தப்படுகின்றன.
- மாநிலத்தின் அதிகப் பெரும்பான்மை பெற்ற அரசியல் கட்சியோ கூட்டணி தலைவரையோ ஆட்சி அமைக்க அழைத்தல்.
- மாநிலத்தின் முதலமைச்சரையும் முதலமைச்சரின் பரிந்துரையின்படி மற்ற அமைச்சர்களையும் நியமித்தல்.

- தலைமை வழக்கறிஞர், மாநில பி.எஸ்.சி. தலைவர், பி.எஸ்.சி உறுப்பினர்கள் ஆகியோரை நியமித்தல்.

### நீதித்துறை அதிகாரங்கள் (Judiciary Powers)

- மாநில அரசின் நிர்வாக அதிகார எல்லைக்குள் வரும் குற்றங்களுக்கு மன்னிப்பு வழங்குதல், தண்டனையைத் தற்காலிகமாக நிறுத்தி வைக்கவோ, தண்டனைகளைக் குறைக்கவோ அல்லது எளிதாக்கவோ உள்ள அதிகாரம்.

### விருப்ப அதிகாரங்கள் (Discretionary Powers)

- சட்டமன்றத்திற்கு ஒரு கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்காத நிலையில் அமைச்சரவை அமைக்கும் விஷயத்தில் ஆளுநருக்கு விருப்ப அதிகாரத்தைப் பயன்படுத்தலாம்.
- மாநிலத்தின் ஆட்சி நிலைகளைக் குறித்து குடியரசுத் தலைவருக்கு அறிக்கை சமர்ப்பித்தல்.
- சட்டமன்றம் நிறைவேற்றும் மசோதாக்களை ஆளுநரின் அதிகாரத்திற்காகச் சமர்ப்பிக்கும் போது ஆளுநருக்கு பின்வரும் நடவடிக்கைகளை எடுக்கலாம்.
    - மசோதாவிற்கு அங்கீகாரம் கொடுக்கவோ அல்லது நிராகரிப்பதாகவோ அறிவிக்கலாம்.
    - திருத்தங்களுடன் சட்டமன்றத்திற்குத் திருப்பி அனுப்பலாம். அவ்வாறு திருப்பி அனுப்பப்பட்ட மசோதா சபையால் மீண்டும் பரிசீலிக்கப்பட்டு திருத்தங்களுடனோ அல்லது திருத்தங்கள் இல்லாமலோ நிறைவேற்றப்பட்டு ஆளுநரிடம் சமர்ப்பிக்கப்பட்டால் ஆளுநர் அதற்கு ஒப்புதல் வழங்க கடமைப்பட்டுள்ளார்.
    - மசோதாவை ஜனாதிபதியின் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கலாம்.

மாநிலத்தின் ஜனநாயகச் செயல்முறையை சுமுகமான முறையில் அரசியலமைப்பின் உணர்வுக்கு ஏற்றார் போல் முன்னெடுத்துச் செல்வதில் மாநில அரசுக்கு உதவுதல் என்ற கடமை ஆளுநருக்கு உள்ளது. அவர் முதலமைச்சர் தலைமையிலான அமைச்சரவையைக் கட்டுப்படுத்தும் அதிகாரி இல்லை. மாறாக அவர் அதன் நண்பரும் சிந்தனையாளரும் வழிகாட்டியுமே ஆவார். அரசியலமைப்பு பரிந்துரைக்கப்பட்ட முறையில் உள்ள ஆளுநரின் தலையீடுகள் ஜனநாயக செயல்முறையை வலுப்படுத்துவதோடு அரசியலமைப்பின் கண்ணியத்தை உயர்த்தவும் செய்கிறது.

'ஒன்றிய – மாநில உறவுகளில் ஏற்படும் மோதல்கள்' ஜனநாயகத்திற்குச் சவாலாக மாறுவது எவ்வாறு? என்ற தலைப்பில் ஒரு குழு விவாதம் ஏற்பாடு செய்யவும்.

### ஊழல் (Corruption)



எந்த ஒரு அதிகாரம் அல்லது பதவியையோ பயன்படுத்தியும் முறைகேடான செல்வாக்கை செலுத்தியும் சட்டபூர்வமாகக் கிடைக்கும் சம்பளத்திற்கு மேலாக பணத்தையோ அல்லது வேறு எந்த கையூட்டுகளையோ பெறுவதை ஊழல் என்று கருதலாம். லஞ்சம், உறவினர்களுக்குச் சலுகை செய்தல், சட்டவிரோதமாக சொத்து சேர்த்தல் ஆகியவை ஊழல்களுக்கு உதாரணங்களாகும். நாட்டின் பொருளாதார முதலீடுகள், பொருளாதார வளர்ச்சி ஆகியவற்றையும் நமது ஜனநாயக அமைப்பையும் ஊழல் எதிர்மறையாகப் பாதிக்கிறது. ஊழல் மக்களுக்குக் கிடைக்க வேண்டிய உரிமைகள், நலத்திட்டங்கள், வசதிகள் ஆகியவை ஒரு சிலரிடம் மட்டுமே குவிவதற்குக் காரணமாகிறது. இது சாதாரண மக்களுக்கு ஜனநாயக அமைப்பின் மேல் உள்ள நம்பிக்கையை இழக்க வழிவகுக்கிறது. ஊழலுக்கு எதிராக மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்துதல், வலுவான சட்ட அமைப்பை நிறுவுதல், ஊழல் விசாரணை முறைகளை அரசியல் செல்வாக்கிலிருந்து விடுவித்தல், அரசியல் கட்சிகளின் நிதி ஆதாரங்களை வெளிப்படையாக்குதல், நிர்வாகத்தை வெளிப்படையாக்குதல், மக்களிடம் ஊழலுக்கு எதிரான விழிப்புணர்வு ஏற்படுத்துதல் ஆகியவை ஊழலை தடுப்பதற்கான வழிகளாகும்.

### தேர்தல் பத்திரம் (Electoral Bond)



கொடுக்கப்பட்டுள்ள செய்தித் தலைப்புகளைப் பாருங்கள். தேர்தல் பத்திரங்களை உச்சநீதிமன்றம் ரத்து செய்தது குறித்த செய்திகளாகும். தேர்தல் பத்திரம் என்றால் என்ன? நாம் பார்ப்போம்.

இது தனிநபருக்கும் நிறுவனங்களுக்கும் தங்களுக்கு விருப்பமான தொகையை ஏதாவது அரசியல் கட்சிக்கு நன்கொடையாக வழங்கும் திட்டமாகும். 2017-18 ஆம் ஆண்டு ஒன்றிய அரசு பட்ஜெட்டில் தேர்தல் பத்திரங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. முந்தைய மாநில, மக்களவைத் தேர்தல்களில் பதிவான மொத்த வாக்குகளில் ஒரு சதவீதத்திற்குக் குறையாமல் வாக்குகள் பெற்றதும் தேர்தல் ஆணையத்தில் பதிவு செய்யப்பட்ட அனைத்து கட்சிகளும் இந்தப் பத்திரங்கள் வாயிலாகப் பணம் திரட்டலாம். ஆயிரம் முதல் ஒரு கோடி ரூபாய் வரை நிறுவனங்களுக்கோ தனிநபருக்கோ அவர்களுக்கு விருப்பமான தொகைக்கு எஸ்.பி.ஐ வழியாகப் பத்திரங்கள் வாங்கலாம். நன்கொடை என்ற வகையின் கீழ் வருவதால் இந்தத் தொகைக்கு வரி விலக்கு உண்டு. நன்கொடையாளரிடமிருந்து பெற்ற பத்திரங்களை அரசியல் கட்சிகள் 15 நாட்களுக்குள் பணமாக மாற்ற வேண்டும்.

பத்திரங்களின் வெளிப்படைத் தன்மையையும் சட்ட பாதுகாப்பையும் ஆராய்ந்து 2024 பிப்ரவரி 15 ஆம் நாள் உச்ச நீதிமன்றம் தேர்தல் பத்திரங்களை ரத்து செய்தது. தேர்தல் பத்திரம் அடிப்படை உரிமைகளுக்கு எதிரானது என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

தேர்தல் பத்திரங்கள் ஊழலுக்கு எவ்வாறு காரணமாகின்றன என்ற தலைப்பில் உச்சநீதிமன்றத் தீர்ப்பு மற்றும் செய்தித்தாள் அறிக்கைகளின் அடிப்படையில் ஒரு குறிப்பு தயாரிக்கவும்.

## அரசியலை குற்றமயமாக்கல்
## (Criminalisation of Politics)

ஜனநாயகம் எதிர்கொள்ளும் இன்னொரு முக்கிய சவாலே அரசியலைக் குற்றமயமாக்குதலாகும். அரசியல் கட்சிகளின் தலைவர்களோ ஆதரவாளர்களோ குற்ற செயல்களில் ஈடுபடுவதோ குற்ற செயல்களை ஊக்குவிப்பதோ அரசியலை குற்றமயமாக்குதலாகும். மேலும் குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்கள் அரசியலில் ஈடுபடுவதும் அரசியல் குற்றமயமாக்கலாகும். மக்களைப் பயமுறுத்தி ஏதாவது கட்சிக்கு ஆதரவாக வாக்களிக்கத் தூண்டுவதும் அதற்கான சூழ்நிலைகளை உருவாக்குவதும் ஜனநாயகத்தின் மதிப்பிழப்புக்குக் காரணங்கள் ஆகின்றன. குற்றங்களில் ஈடுபடுபவர்கள் அரசியல் கட்சிகளின் தலைமைப் பொறுப்பை அடைவதும் ஆட்சியாளர்களாக மாறுவதும் குடிமக்களுக்கு ஜனநாயக அமைப்பின் மீதான நம்பிக்கையை இழக்கச்செய்கிறது. குற்றச் செயல்களில் ஈடுபட்டு விசாரணையில் உள்ளவர்கள், தண்டனை பெற்றவர்கள் தேர்தலில் போட்டியிடுவதைத் தடை செய்யும் தேர்தல் சீர்திருத்தங்கள், வலுவான சட்ட அமைப்புகள், அரசியல் அரங்கில் குற்றமயமாக்கலுக்கு எதிரான விழிப்புணர்வு போன்றவை அரசியலைக் குற்றமயமாக்கல் இல்லாமல் ஆக்குவதற்குரிய வழிகளாகும்.

## கட்சித்தாவல் (Defection)

1967 தேர்தலுக்குப் பிறகு இந்திய அரசியலில் தோன்றிய மற்றொரு நடைமுறை கட்சித் தாவல் ஆகும். ஒரு கட்சியின் வேட்பாளராகத் தேர்தலில் போட்டியிட்டு தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதி தனது சொந்தக் கட்சியை விட்டு வேறொரு கட்சியில் சேருவதைக் கட்சித் தாவல் எனலாம். தேர்தல் காலத்தில் வாக்காளர்கள் மக்கள் பிரதிநிதிகளின் மீது வைத்திருந்த நம்பிக்கைக்கு துரோகம் செய்யும் நிலையே இங்கு ஏற்படுகிறது. இது பெரும்பாலும் ஆட்சி நெருக்கடியை உருவாக்கி ஜனநாயகத்திற்கு சவாலாகவும் மாறுகிறது. பின்னர் கட்சித் தாவலை தடை செய்வதற்கு 1985 இல் அரசியல் அமைப்பு 52 ஆவது திருத்தத்தின்படி கட்சித் தாவல் தடை சட்டத்தை நாடாளுமன்றம் நிறைவேற்றியது.

அரசியல் கட்சிகள் தங்கள் உறுப்பினர்கள் கட்சித் தாவுவதைத் தடுக்க பலவித உத்திகளைக் கையாளுகின்றன. ஒரு கட்சியின் நம்பிக்கையான உறுப்பினரின் தலைமையில் ஒரு தனிப்பட்ட இடத்தில் உறுப்பினர்கள் ஒன்றுகூடி பிற அரசியல் கட்சிகளின் தாக்கத்தை தடை செய்ய திட்டம் தீட்டுகின்றனர். இந்தச் செயல்முறையை ரிசார்ட் அரசியல் என்று சிறப்பித்துக் கூறுவது உண்டு. 1982 இல் ஹரியானாவில் இதன் வரலாறு தொடங்குகிறது. அதைத்தொடர்ந்து கர்நாடகா, ஆந்திரப் பிரதேசம், குஜராத், உத்தரப்பிரதேசம், பீகார், மகாராஷ்டிரா, உத்தரகாண்ட், தமிழ்நாடு போன்ற மாநிலங்களிலும் இத்தகைய செயல்கள் ஏற்பட்டன.

'அரசியலை குற்றமயமாக்குவதும் கட்சித் தாவலும் இந்திய ஜனநாயகம் எதிர்கொள்ளும் சவால்களாகும்'. இந்தியத் தேர்தல் ஆணையம் இது தொடர்பாக எடுத்த நிலைப்பாடுகள், நடவடிக்கை முறைகள் ஆகியவற்றை அடிப்படையாக்கி ஒரு குறிப்பு தயாரிக்கவும்.

சுதந்திரத்திற்குப் பிறகு நாடு எதிர்கொண்ட பல நெருக்கடிகளை ஜனநாயக வழிமுறைகள் மூலம் மேற்கொள்ள நமக்கு முடிந்தது. இது நம்முடைய ஜனநாயகத்தின் நிலைநிற்றலை நிரூபிக்கிறது. நாளடைவில் மாற்றங்களை ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒரு துடிப்பான அரசியலமைப்பே நம்முடையது. அரசியலமைப்பு விழுமியங்களோடு உள்ள மதிப்பும் அதற்கு கீழ் நடப்பதும் ஜனநாயகத்தை மேலும் வளப்படுத்துகின்றது.

## தொடர் செயல்பாடுகள்

- ஜனநாயகம் ஒரு வாழ்க்கை முறையாக நமது சமூகத்தில் எவ்வாறு வெளிப்படுகிறது என்ற தலைப்பில் ஒரு கருத்தரங்கை ஏற்பாடு செய்யவும்.
- இந்தியாவின் குடியரசுத் தலைவர்கள், பிரதமர்கள் ஆகியோரின் டிஜிட்டல் சுய விபர ஆல்பம் தயாரிக்கவும்.
- சுற்றுச்சூழல் விழிப்புணர்வின் அவசியத்தைக் கருத்தில் கொண்டு சுற்றுச்சூழல் ஆர்வலருடன் ஒரு நேர்காணலை ஏற்பாடு செய்யவும்.

# 9

# இந்திய சமூக அமைப்பை அறிதல்




படம் 1



படம் 2



*மேலே கொடுக்கப்பட்டுள்ள படங்களைக் கவனியுங்கள்*

படம் 1 இல் சில சமூக நிறுவனங்களைக் கவனித்தீர்கள் அல்லவா?

அவை எவையெல்லாம்?

படம் 2 இல் நீங்கள் என்ன பார்க்கிறீர்கள்?

நாம் வாழும் சமூகத்தை நமது உடல் அமைப்புடன் ஒப்பிட்டுப் பார்க்கலாமா?

நமது உடல் சிக்கலான ஓர் இயந்திரம் போன்றது. அது நம்மை உயிருடன் வைத்திருக்க எப்போதும் எண்ணற்ற செயல்களைச் செய்து கொண்டிருக்கிறது. அனைத்து உயிரினங்களிலும் அவற்றின் உடல் பண்புகளுக்கு ஏற்ப நிரந்தரமாக ஒழுங்கமைக்கப்பட்ட ஓர் உயிரியல் அமைப்பு (Organic Structure). உள்ளது. இந்த உயிரியல் அமைப்பிலுள்ள ஒவ்வொரு உறுப்புக்கும் அதனதன் தனிப்பட்ட செயல்பாடுகள் உண்டு. இந்தச் செயல்பாடுகளுக்கேற்ப உடல் உறுப்புக்கள் ஒன்றோடொன்று தொடர்பு கொண்டுள்ளன. உயிரியல் அமைப்பின் வெவ்வேறு பகுதிகளுக்கு இடையிலான தொடர்புக்கு ஏற்ப, இந்த அமைப்பு செயல்படுகிறது. இந்த நிலை தான் உயிர் முறை அமைப்பு (Organic System). பல்வேறு பகுதிகளின் முறையான ஒழுங்குமுறையைத் தான் மண்டலம் (System) என்ற சொல் குறிக்கிறது. இரத்த மண்டலம், சுவாச மண்டலம் போன்ற ஒவ்வொரு உயிரியல் மண்டலங்களும் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டு ஒன்றாகச் செயல்படவும், உடல் செயல்பாடுகளைச் சமநிலைப்படுத்தவும் செய்கிறது.

இம்முறையில், சமூகத்தில் வேறுபட்ட சமூக நிறுவனங்களும், கூறுகளும் (Parts) ஒன்றிணைந்து செயல்பட்டு சமூகத்தின் நிலையான தன்மையையும் ஒழுங்கையும் நிலை நிறுத்துகிறது என்பதை நீங்கள் கவனித்திருக்கிறீர்களா?

சமூகத்தில் ஒழுங்கையும் நிலையான தன்மையும் நிலைநிறுத்த சமூகத்தின் பல்வேறு கூறுகள் (Parts) ஒன்றிணைந்து செயல்படுகின்றன. கல்வி, போக்குவரத்து, தகவல் தொடர்பு, ஊடகங்கள், சட்டம், நீதி நியாய அமைப்பு, சுகாதாரம், பாதுகாப்பு அமைப்புகள், மதம் மற்றும் கலாச்சார நிறுவனங்கள், அரசாங்கம் போன்ற சமூகத்தின் ஒவ்வொரு கூறுகளும் ஒன்றோடொன்று சார்ந்தும் இணைந்தும், செயல்படும்போது தான் ஒரு சமூக அமைப்பு (Social System) உருவாகிறது.


ஹெர்பர்ட் ஸ்பென்சர்

சமூகத்தை ஓர் உயிர் முறை அமைப்புடன் ஒப்புமைப்படுத்திய சமூகவியலாளரே ஹெர்பர்ட் ஸ்பென்சர். மனித உயிர்முறை அமைப்பின் சமூக அமைப்புக்கும் இடையேயுள்ள ஒற்றுமையை வெளிப்படுத்திக்கொண்டு சமூகம் ஒரு சமூக உயிரி (Social Organism) என்ற கருத்தை அவர் முன் வைத்தார்.

மனித உடலில் உள்ள உறுப்புகள் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டு துணையுடன் செயல்படுகிறது. அதுபோன்று சமூகத்தின் பல்வேறு காரணிகளான குடும்பம், கல்வி, பொருளாதாரம், மதம், மற்றும் அரசாங்கம் போன்ற சமூக நிறுவனங்கள் சமூகத்தின் நிலையான தன்மையையும் வளர்ச்சியையும் ஒழுங்கையும் பராமரிக்க எவ்வாறு ஒன்றிணைந்து செயல்படுகின்றன என்பதைப் புரிந்து கொள்ள ஹெர்பர்ட் ஸ்பென்சரின் கற்பனை நமக்கு உதவுகிறது.

பள்ளிக்கூடம் மற்றும் அதன் பல்வேறு காரணிகளைக் காட்டும் படத்தைக் கவனியுங்கள்.




கல்வி நிலையத்தின் பல்வேறு காரணிகள் எவை?

ஒவ்வொன்றின் செயல்பாடுகள் என்னென்ன?

இவை ஒன்றோடொன்று தொடர்பு கொண்டும் இணைந்தும் செயல்படுபவையா?

இவை அனைத்தும் ஒருங்கிணைந்து செயல்படவில்லை என்றால் என்ன நிகழும்?

இவ்வாறு ஒவ்வொரு சமூக நிறுவனங்களுக்கும் பல்வேறு காரணிகளும் அவற்றின் செயல்பாடுகளும் உண்டு. அவை ஒன்றோடொன்று இணைந்தும் துணையும் கொண்டவையாக இருக்கும்.

உங்கள் பகுதியில் உள்ள ஒரு நிதி நிறுவனத்தைப் பற்றியும் மற்றும் அதன் பல்வேறு காரணிகளைக் குறித்தும் சிந்தித்துப் பாருங்கள். எந்தெந்த காரணிகளின் ஒருங்கிணைப்பு அந்த நிறுவனத்தின் செயல்பாடுகளை நிலை நிறுத்துகிறது?

மனிதர்கள் சமூக உயிரிகள் அல்லவா?
மிதுன் என்ற நபரின் ஒரு நாள் செயலை நாம் உற்றுப் பார்க்கலாம்.



- அப்பாவின் அழைப்பைக் கேட்டு மிதுன் காலையில் விழித்தெழுவான்.
- மிதுன் என்ற அதிகாரி வேலைக்குச் செல்ல அரசாங்கத்தின் பொதுப் போக்குவரத்து முறையைப் பயன்படுத்துகிறார்.
- மதிய உணவின் போது தற்போதைய அரசியல் பிரச்சினைகள் மற்றும் தேர்தல்கள் குறித்தும் உடன்பணியாளர்களுடன் விவாதிப்பதுண்டு.
- பணம் பரிவர்த்தனைக்காக அலுவலகத்திற்கு அருகில் உள்ள வங்கிக்குச் செல்வதுண்டு.
- ஊரில் நடைபெறும் விழாக்கள், கொண்டாட்டங்கள், பிற பொழுதுபோக்கு நிகழ்வுகளில் மிதுன் கலந்துகொள்வதுண்டு.
- சமூக ஊடகங்கள் வாயிலாக பள்ளி நாட்களின் நண்பர்களுடன் நட்பை நிலைநிறுத்த நேரம் ஒதுக்குவதுண்டு.
- தன் தொடர் கல்வியை தொடர்வதற்கு இரவு நேரங்களில் இணைய வகுப்புகளில் பங்கேற்பதுண்டு.

மிதுனின் ஒருநாள் வாழ்க்கையைப் பற்றி அறிந்தீர்கள் அல்லவா? அவர் எந்தெந்த சமூக நிறுவனங்களுடன் பரஸ்பர தொடர்பு (Interaction) கொண்டுள்ளார்?

- 
- 
- 
- 
- 
- 
- 

நீங்கள் ஒரு நாளில் பரஸ்பரம் தொடர்புகொள்ளும் சமூக நிறுவனங்கள் எவையெல்லாம் என்று குறிக்கவும்?

சமூகத்தின் நிலைநிற்பிற்காக ஒன்றிணைந்தும் துணையோடும் செயல்படும் பல்வேறு சமூக நிறுவனங்கள் சேர்ந்ததுதான் சமூகம் (Society). சமூகத்தின்

தனிநபர்கள் மற்றும் குழுக்களின் நடத்தைகளையும் செயல்களையும் சமூக நிறுவனங்கள் கட்டுப்படுத்துகின்றன. ஒரு சமூக அமைப்பு (Social System) என்பது பல்வேறு சமூக நிறுவனங்களை ஒன்றோடொன்று இணைத்து சமூகத்தில் உள்ள உறவுகளையும் தலையீடுகளையும் ஒழுங்குபடுத்தும் ஓர் அமைப்பாகும். சமூக பரஸ்பர தொடர்புகளின் முறையான ஒழுங்கமைப்பாக சமூக அமைப்பைக் காணலாம்.

## இந்திய சமூக அமைப்பு (Indian Social System)

நமது நாடு பன்முகத்தன்மை கொண்ட நாடாகும். இந்திய சமூகம் பல்வேறு சமூகங்களும் கலாச்சாரங்களும் இணைந்து உருவானதாகும். இந்தியாவின் ஆரம்பக்கால சமூகவியலாளர்களில் முக்கியமானவர் ஜி. எஸ். குரே. ஆவார். இந்திய சமூக அமைப்பைக் குறித்த அவரது கண்ணோட்டத்தை வாசியுங்கள்.



ஜி.எஸ்.குரே

இந்திய சமூக அமைப்பு பன்முகத் தன்மை மற்றும் தொடர்ச்சியின் தனித்துவமான கலவையால் தான் குறிக்கப்பட்டிருக்கிறது. அதன் மையச் சிறப்பம்சம் ஜாதி முறை ஆகும். இந்தியாவின் சமூக அமைப்பு வட்டார, மொழி மற்றும் மதம் சார்ந்த பன்முகத்தன்மையால் நிறைந்திருக்கிறது. அது இந்திய சமூகத்தை வரையறுக்கும் ஒரு கலாச்சார சிறப்பம்சமாகும்.

*Source*: G.S. Ghurye, *Caste and Race in India*

இந்திய சமூக அமைப்பின் என்னென்ன கூறுகளை ஜி. எஸ். குரே சுட்டிக்காட்டி உள்ளார்?

- 
- 
- 

இந்திய சமூக அமைப்பு என்பது வரலாறு, கலாச்சாரம், மதம் ஆகியவற்றின் தாக்கங்களால் உருவாக்கப்பட்ட ஒரு சிக்கலான அமைப்பைக் கொண்டுள்ளது. பல்வேறு ஜாதி, மதம், மொழி, கோத்திரம் மற்றும் கலாச்சாரங்களைப் பின்பற்றுகின்ற மக்கள் வசிக்கும் பன்முகத் தன்மை கொண்ட நாடு தான் இந்தியா. இந்த பன்முகத்தன்மை தனித்துவமான இந்திய சமூக அமைப்பின் முதுகெலும்பாகும். இந்தியாவின் சமூக அமைப்பு ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக சமூக பரிணாமத்திற்கு உட்பட்டு உருவாக்கப்பட்டதாகும். அது நாட்டின் வரலாறு, விழுமியங்கள் மற்றும் பாரம்பரியம் போன்றவற்றைப் பிரதிபலிக்கிறது. இந்திய சமூக அமைப்பின் சில சிறப்புக் காரணிகளை நாம் ஆராய்வோம்.




## I. ஜாதி அமைப்பு (Caste System)

ஜாதி என்பது இந்திய சமூக வாழ்வின் மிகவும் தனித்துவமான நிறுவனம் ஆகும். இது வெறும் சமூகப் படிநிலை அமைப்பு மட்டுமல்ல, மாறாக, மதம், கலாச்சார மரபுகளில் ஆழமாகப் பதிந்துள்ள ஒரு வாழ்க்கை முறையாகும்.

*Source:* M.N. Srinivas, *Caste in Modern India: And Other Essays,*


எம்.என்.ஸ்ரீனிவாஸ்

இந்திய சமூக அமைப்பில் ஜாதி அமைப்பைக் குறித்த விளக்கம் அளிக்கின்ற ஏராளம் ஆய்வுகளை மேற்கொண்ட இந்திய சமூகவியலாளரே எம்.என். ஸ்ரீநிவாஸ். இந்திய சமூகத்தின் தனித்துவம் நிறைந்த ஜாதி அமைப்பில், மக்கள் ஜாதியின் அடிப்படையில் பல்வேறு அடுக்குளாகப் பிரிக்கப்பட்டிருந்தனர். ஜாதி அமைப்பு இந்து மதத்துடன் ஆழமாகப் பின்னிப்பிணைந்துள்ளது. ஒரு நபரின் ஜாதி பிறப்பின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகிறது. அதாவது, ஒரு ஜாதியில் பிறந்த ஒருவர் இன்னொரு ஜாதிக்கு மாற இயலாது. இந்தியாவில் ஏராளம் ஜாதிகளும் துணை ஜாதிகளும் நிலை நிற்கின்றன.

## ஒரு கிராமத்தின் கதை

ஜாதி அமைப்பை அடிப்படையாகக் கொண்ட ஒரு கிராமத்தில்தான் பாலு வாழ்ந்திருந்தான். அங்கு மக்கள் வர்ணங்கள் மற்றும் ஜாதிகளின் அடிப்படையில் வெவ்வேறு அடுக்குகளாகப் பிரிக்கப்பட்டிருந்தனர். பிராமணர்கள் மதகுருக்களாகவும், சத்ரியர்கள் படைவீரர்களாகவும், வைசியர்கள் வணிகர்களாகவும், சூத்திரர்கள் உயர் வகுப்பினரின் ஊழியக்காரர்களாகவும் கருதப்பட்டனர். இந்த நான்கு பிரிவுகளுக்கு அப்பாற்பட்டவர்கள் பஞ்சமர்கள்/புற ஜாதியினர் என்று அறியப்பட்டனர். முற்றிலும் புறக்கணிக்கப்பட்ட இந்தப் பிரிவினர் கிராமத்தின் வெளிப்பகுதிகளில் வசித்து வந்தனர்.

ஜாதி அமைப்பு கடுமையாக நடைமுறையிலிருந்த அந்த கிராமத்தில் ஒவ்வொரு ஜாதியினருக்கும் பரம்பரைத் தொழில்கள் காணப்பட்டன. வேறு தொழில்களைத் தேர்ந்தெடுப்பதற்கான சுதந்திரம் தனிநபர்களுக்கு அனுமதிக்கப்படவில்லை. எனவே, அந்தக் கிராமத்தில் சூத்திர ஜாதியைச் சேர்ந்த பாலு, அக்காலத்தில் ஒரு வியாபாரியாக விரும்பிய போதிலும் அவர் வயல்களில் வேலை செய்ய வேண்டி இருந்தது. கடுமையான ஜாதிச் சட்டங்கள் அங்கு நடைமுறையிலிருந்தது. ஒவ்வொரு ஜாதியினருக்கும் தலைமுறை தலைமுறையாகப் பரிமாற்றம் செய்யப்பட்ட, குறிப்பிட்ட பழக்கவழக்கங்களும் சடங்குகளும் காணப்பட்டன. ஒரு நபருக்கு தனது சொந்த ஜாதியிலிருந்து மட்டுமே திருமணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டிருந்தது. இவை பரம்பரையை நிலைநிறுத்தி, சமூகத்தின் ஒவ்வொரு ஜாதிப் பிரிவினரையும் ஒருவருக்கொருவர் விலக்கி வைத்தது. அங்கு சமத்துவமின்மைகள் அதிகமாகக் காணப்பட்டன. ஜாதிப் படிநிலையில் மிகவும் தாழ்ந்த நிலையில் உள்ளவர்களாகக் கருதப்படுபவர்கள் கிராமத்தின் பொதுச் சாலைகளை பயன்படுத்தவோ அல்லது கோவில்களில் செல்லவோ அனுமதிக்கப்படவில்லை. பிற்காலத்தில் கல்வி மற்றும் சமூக மாற்றத்தின் பின்னணியில், சமத்துவத்திற்காக ஏராளமான போராட்டங்கள் ஆரம்பிக்கவும், ஜாதிச் சட்டங்களில் மாறுதல்கள் ஏற்படவும் செய்தன. காலப்போக்கில் அனைத்து கிராமத்தினருக்கும் சமநீதியும் பதவிகளும் உறுதி செய்யும் ஒரு சமூகமாக அந்த கிராமம் மாறியது.

ஜாதி அமைப்பு நடைமுறையிலிருந்த ஒரு கிராமத்தின் கதையை நீங்கள் வாசித்தீர்கள் அல்லவா? ஜாதி அமைப்பின் தனித்தன்மைகள் யாவை?

இந்தியாவில் நடைமுறையிலிருந்த ஜாதி அமைப்பின் முக்கியமான சிறப்பம்சங்கள் என்னென்ன என்பதை நாம் பார்ப்போம்.

### 1. சமூகப் படிநிலை (Social Hierarchy)

சமூக உறுப்பினர்கள் ஜாதியின் அடிப்படையில் வெவ்வேறு நிலைகளாக வைக்கப்பட்டிருந்தனர். இந்தப் படிநிலை சமூகத்தில் ஒரு தனி நபரின் பங்கு, அந்தஸ்து, பொறுப்புகள் போன்றவற்றை தீர்மானம் செய்தது. பண்டைய இந்தியாவில் உயர்ந்த நிலையில் உள்ள ஜாதியினராகக் கருதப்பட்டவர்களுக்கு சமூகத்தில் உயர் பதவிகள் வழங்கப்பட்டன. ஆனால் மிகவும் தாழ்ந்த நிலையில் இருந்தவர்களுக்கு எந்தவிதமான பதவியோ, உரிமைகளோ வழங்கப்படவில்லை.

## 2. தொழில் பிரிவு (Division of Labour)

ஒவ்வொரு ஜாதிக்கும் குறிப்பிட்ட குலத் தொழில்கள் வழங்கப் பட்டிருந்தன. பிராமணர்கள் மதகுருக்களாகவும், சத்ரியர்கள் நாட்டைப் பாதுகாக்கவும், வைசியர்கள் வியாபாரம் செய்யவும் அனுமதிக்கப்பட்ட போது, சூத்திரர்கள் பிற உயர் பிரிவினர்களுக்கு சேவை செய்கிறவர்களாக மாறினர். ஒரு நபர் தனது குலத்தொழிலைத் தவிர வேறு எந்தத் தொழிலையும் தேர்ந்தெடுக்க அனுமதிக்கப்படவில்லை. இந்த நிலை சமூக நகர்வு (Social Mobility) இல்லாத ஒரு சமூகத்தை நிலைநாட்டியது.

### சமூக நகர்வு (Social Mobility)

சமூக நகர்வு என்பது ஒரு தனி நபர் அல்லது தனி நபர்களின் ஒரு சமூக பதவியிலிருந்து இன்னொரு சமூக பதவிக்கு நேராக நகர்தல்/மாற்றம் ஆகும்.

*(Wallace and Wallace)*

ஒரு நபருக்கு வேலை தொடர்பாக கிடைக்கும் பதவி உயர்வு சமூக நகர்வுக்கு எடுத்துக்காட்டு ஆகும்.

## 3. சமூகக் கட்டுப்பாடு மற்றும் ஒழுங்கு (Social control and order)

பழங்கால இந்தியாவில் ஜாதி அமைப்பு சமூகக் கட்டுப்பாட்டுக்கான ஒரு நெறிமுறையாகச் செயல்பட்டிருந்தது. ஒவ்வொரு ஜாதியில் உள்ள உறுப்பினர்களும் தங்களது ஜாதியை அடிப்படையாகக் கொண்ட வழக்கங்களையும் கடமைகளையும் கட்டாயமாகச் செய்ய வேண்டி இருந்தது. சுத்தம்–அசுத்தம் (Purity-Pollution) என்ற கருத்து ஜாதி அமைப்பின் அடிப்படையாக இருந்தது. இது ஜாதி வேற்றுமைகளைக் கட்டாயமாக நடைமுறைப்படுத்தக் காரணமானது. தாழ்ந்த ஜாதி என்று கருதப்படுபவர்கள், உயர் ஜாதியைச் சார்ந்தவர்கள் என்று கருதப்படுவர்களிடமிருந்து ஒரு குறிப்பிட்ட சமூக இடைவெளியை (Social Distance) கடைபிடிக்க வேண்டி இருந்தது. அன்றைய காலத்தில் 'தீண்டாமை' (Untouchability) என்ற தீய பழக்கவழக்கம் நடைமுறையிலிருந்தது. அனைத்து ஜாதிகளைச் சார்ந்தவர்களும் ஒன்றாக அமர்ந்து உணவு சாப்பிடவும் அனுமதிக்கப்படவில்லை. குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டம், 1955 இன் படி, இந்தியாவில் 'தீண்டாமை' என்ற சமூகத் தீமையைச் செயல்படுத்துவதும், பரப்புதலும் தடை செய்யப்பட்டது..

### குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டம், 1955 (The Protection of Civil Rights Act, 1955)

தீண்டாமையை செயல்படுத்துவதையும், பரப்புவதையும் தடை செய்ய 1955 ஆம் ஆண்டு இந்திய பாராளுமன்றத்தால் இயற்றப்பட்ட சட்டம் தான் குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டம். 1955 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட போது இந்தச் சட்டத்தின் பெயர், தீண்டாமை (குற்றச்செயல்கள்) 1955 [Untouchability (Offences) Act, 1955] என இருந்தது. 1976 ஆம் ஆண்டின் சட்ட திருத்தத்தின் வாயிலாக இது குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டம் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

### 4. திருமணம் மீதான கட்டுப்பாடுகள் (Restrictions on Marriage)

ஜாதி அமைப்பு ஜாதிகளுக்குள் திருமணத்தை (Endogamy) ஊக்குவித்தது. சொந்த ஜாதியிலிருந்துள்ள திருமணம் தான் Endogamy. வேறு ஜாதியிலிருந்து திருமணம் (Exogamy) செய்யும் நபர்களை ஜாதியிலிருந்து வெளியேற்றும் வழக்கமும் தொடர்ந்து கொண்டிருந்தது. ஒவ்வொரு ஜாதியும் பிற ஜாதிகளுடன் கலராமல் அவர்களுடைய எல்லைகளை நிலைநாட்டுவதற்காகவே ஜாதிகளுக்குள் திருமண முறை பின்பற்றப்பட்டது.

### 5. சமத்துவமின்மையும் ஒதுக்கப்படுதலும் (Inequality and Marginalisation)

ஜாதி அமைப்பு சமூகக் கட்டமைப்பின் அடிப்படையாகச் செயல்பட்டாலும், அது சமூகத்தில் சமத்துவமின்மையை வளர்த்தது. குறிப்பாக தாழ்த்தப்பட்ட ஜாதியினராகக் கருதப்படும் மக்களுக்கு கல்வி, நிலம், வளங்கள் போன்றவை கிடைப்பதை மறுக்கவும், ஓரங்கட்டுதலை அதிகரிக்கவும் இது வழி செய்தது.

ஜாதி அமைப்பில் இருந்த சமத்துவமின்மைகளைக் கேள்வி கேட்க உரிமை அளிக்கவில்லை. வளங்கள் அனைவருக்கும் தகுந்த முறையில் கிடைப்பதற்கும், சமத்துவத்தின் வளர்ச்சிக்கும் அது தடையாகக் காணப்பட்டது. சில பிரிவினருக்கு அதிகக் கவனம் கிடைத்தபோது, வேறு சில பிரிவினர்கள் ஓரங்கட்டப்பட்டனர். நாளடைவில் ஜாதி அடிப்படையிலான சமத்துவமின்மைக்கு எதிராகவும் அடக்குமுறைகளுக்கு எதிராகவும் ஏராளமான போராட்டங்கள் இந்தியா முழுவதும் ஆரம்பிக்கப்பட்டன. கல்லுமாலைப் போராட்டம், மூக்குத்திப் போராட்டம், சமபந்தி, சாணார் கலகம் ஆகியவை கேரளாவில் நடைபெற்ற போராட்டங்களுக்கு எடுத்துக்காட்டுகளாகும்.

இந்திய அரசியலமைப்புச் சட்டம் சமூகத்தில் உள்ள சமத்துமின்மைகளைத் தடை செய்து, அனைத்து குடிமக்களுக்கும் சமத்துவத்தை உறுதி செய்கிறது. நவீன இந்தியாவில், ஜனநாயக விழுமியங்கள், அரசியலமைப்புச் சட்டங்கள், சமூக நிறுவனங்கள் போன்றவை ஜாதி அமைப்பின் பாரம்பரியமான கடினத்தன்மைக்கு சவால்களாக இருந்தன. இது சமூக நகர்வில் தாக்கம் செலுத்தி, நியாயமான சமூகத்தைக் கட்டி எழுப்புவதற்கும், சமத்துவத்தை ஊக்குவித்து, ஜாதி பாகுபாட்டை நீக்குவதற்கும் வழி வகுத்தது.

இந்திய அரசியலமைப்புச் சட்டம் ஜாதி பாகுபாட்டை எவ்வாறு கையாள்கிறது என்பதை கண்டறியவும். அரசியலமைப்பு விதிமுறைகள், சட்டப் பிரிவுகள் முக்கியமான நீதிமன்ற தீர்ப்புகள் போன்றவற்றை உட்படுத்தி அறிக்கையை தயார் செய்து அதை சமூக அறிவியல் மன்றத்தில் வெளியிடவும்.

## II. மதம் (Religion)

இந்திய அரசியலமைப்பின் முகவுரையில் இந்தியா ஒரு மதச் சார்பற்ற நாடு என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அரசாங்கம் எந்தவொரு மதத்திற்கும் சிறப்புக் கவனம் செலுத்தவில்லை என்பதுதான் இந்திய மதச் சார்பின்மையின் (Secularism)தனித்தன்மை. இந்திய அரசியலமைப்பின் சட்டப்பிரிவு 15 இன் படி, மதம், இனம், ஜாதி, பாலினம், பிறந்த இடம் ஆகியவற்றின் அடிப்படையிலான எந்தவொரு பாகுபாட்டையும் தடை செய்துள்ளது. இந்தியாவில் தோன்றியதும் இந்தியாவிற்கு வெளியே தோன்றிய மதங்களும் இணக்கமாக இங்கு நடைமுறையில் உள்ளன என்பது இந்திய சமூக அமைப்பின் சிறப்பம்சங்களில் ஒன்றாகும். இந்திய சமூக அமைப்பில் மதங்களின் பங்கு என்ன என்பதைப் பார்ப்போம்.

### 1. சமூகக் கட்டுப்பாட்டு வழிமுறைகள்

மத நல்லிணக்க மாநாடு நடைபெற்ற நகரில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள செய்திப் பலகையைக் கவனியுங்கள்.




மேலே கொடுக்கப்பட்டுள்ள செய்திகளில், இந்தியாவில் உள்ள பல்வேறு மதங்கள் சமூகத்திற்கு வழங்கும் விழுமியங்களைக் குறித்த குறிப்புகள் தான் இடம்பெற்றுள்ளன.

ஒவ்வொரு மதமும் மனிதநேய விழுமியங்களான நேர்மை, இரக்கம், பரஸ்பர மரியாதை, பரஸ்பர அன்பு, அக்கறை, சமூகப் பொறுப்பு, நீதி உணர்வு மற்றும் தார்மீகம் போன்றவற்றைக் கற்பித்து, அதன் வாயிலாக, சமூகமயமாக்கல் செயலை வளப்படுத்தவும் செய்கிறது. அதன் வாயிலாக, சமூகத்தில் சகவாழ்வு மற்றும் ஒழுங்கை உறுதி செய்ய இயலும். இவ்வாறு மத விழுமியங்கள் தனி நபர்களின் நடத்தையில் தாக்கம் செலுத்தி கட்டுப்படுத்துவதின் வாயிலாக, சமூகக் கட்டுப்பாட்டின் வழிமுறையாக செயல்படுகின்றன.

### 2. கலாச்சார பன்முகத்தன்மையை வளப்படுத்துகிறது.

படங்களைக் கவனிக்கவும்.



பாந்தராவின் மவுண்ட் மேரி ஆலயம்



பஞ்சாபில் மூரிஷ் மசூதி



சிக்கிமில் ரூம்டெக் தர்ம சக்கர மையம்



அமிர்தசரஸ் பொற் கோயில்



திருவனந்தபுரத்தில் ஸ்ரீபத்மநாப சுவாமி கோயில்



மவுண்ட் அபுவில் தில்வாரா சமணக் கோயில்

இந்தியாவின் சில முக்கியமான மத மையங்களில் உள்ள ஓவியங்கள் மற்றும் சிற்பவேலைகளையும் குறிப்பிடுகின்ற படங்கள் தான் மேலே கொடுக்கப்பட்டுள்ளன. நமது நாட்டின் கலாச்சார பன்முகத்தன்மையை வளப்படுத்த நம்பிக்கைகள், கலைகள் மற்றும் இலக்கியங்கள் வாயிலாக மதங்களுக்கு இயலும். கோவில்கள், ஆலயங்கள், மசூதிகள், விகாரங்கள் குருத்துவாராங்கள் போன்ற மத நிறுவனங்களில் உள்ள ஓவியங்களும் சிற்ப வேலைகளும் இதைத் தெளிவுப்படுத்துகிறது.

இந்து – முஸ்லீம் நட்புக்காகச் செயல்பட்ட கபீர் தாஸ், பெண்களின் வழிபாட்டு சுதந்திரத்திற்காகச் செயல்பட்ட மீரா பாய், ஜாதி பாகுபாடு மற்றும் பொருளாதார சமத்துவமின்மையை எதிர்த்த குருநானக் போன்ற நபர்களின் இலட்சியவாத செயல்களில் இந்தியாவின் கலாச்சார பன்முகத்தன்மையை வளப்படுத்தும் ஏராளமான காரணிகளைக் காணலாம்.

இந்தியாவில் உள்ள பல்வேறு மதக் கொண்டாட்டங்கள் யாவை?

பல்வேறு மதப்பிரிவுகளைச் சார்ந்தவர்கள் இது போன்ற கொண்டாட்டங்களில் பங்கேற்கும் போது அது சமூகத்தில் ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்தை வலுப்படுத்த காரணமாவதுண்டா? ஆராயுங்கள்.

### 3. சமூக மாற்றத்தை துரிதப்படுத்துகிறது.

இந்தியாவின் மறுமலர்ச்சியுடன் தொடர்புடைய பல்வேறு இயக்கங்களைக் குறித்து முன் வகுப்புகளில் விவாதித்தீர்கள் அல்லவா? சில மத இயக்கங்கள் சமூக இயக்கங்களாகப் பரிணமித்து சமூக மாற்றத்திற்கு வழி வகுத்தன. அவை ஜாதி பாகுபாட்டை எதிர்க்கவும், சமத்துவத்தை ஊக்கப்படுத்தவும் செய்தன. இராஜா ராம் மோகன் ராய் தலைமை தாங்கிய பிரம்ம சமாஜம் இதற்கு ஓர் எடுத்துக்காட்டு ஆகும்.

மதங்கள் சமூகத்தில் புதுமை மற்றும் ஒற்றுமையை ஊக்குவிக்கின்றன என்றாலும், மதத்தின் பெயரால் ஏற்படும் பிரிவினைகளும் மோதல்களும் சில வேளைகளில் இந்தியாவின் சமூக அமைப்பின் சமநிலைக்குச் சவாலாகிறது. இவ்வாறான போக்குகள் நமது சமூக ஒற்றுமைக்கு தீங்கு விளைவிக்கிறது.

இந்திய மதச் சார்பின்மையின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டும் கதை, சிறுகதை, கவிதை, கட்டுரை, படங்கள், கார்ட்டூண்கள் போன்றவற்றை உள்ளடக்கிய ஒரு டிஜிட்டல் இதழ் வகுப்பில் தயார் செய்து பள்ளி விக்கியில் சேர்க்கவும்.

## III. மொழி (Language)



உலகிலேயே அதிகமான மொழிகளைப் பேசும் நாடுகளில் ஒன்று இந்தியா. இந்தியாவில் 22 அதிகாரப்பூர்வ மொழிகளும் ஏராளமான பேச்சு வழக்கு மொழிகளும் உண்டு.

மொழி என்பது வெறும் தகவல் ஊடகம் மட்டுமல்ல, அது கலாச்சார மற்றும் தனித்துவத்தின் அடையாளம் ஆகும். சுதந்திரத்திற்கு பிறகு, இந்தியாவில் மாநிலங்கள் மொழி அடிப்படையில் புனரமைக்கப்பட்டன. வெவ்வேறு மொழிகளைப் பேசும் மக்களிடையே சமூக அமைப்பு மற்றும் கலாச்சாரத்தில் பல வேற்றுமைகள் நிலைநிற்கின்றன.

புகழ்பெற்ற சமூகவியலாளரும் இந்தியாவின் முதல் மானுடவியலாளருமான பேராசிரியர். ஐராவதி கார்வேயின் ஆய்வுகளின்படி இந்தியாவின் மொழியின் வகைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ள முறைப்படி அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது.



| மொழிக் குடும்பம் | முக்கியமான மொழிகள் | நடைமுறையிலிருந்த மொழி நிலப்பகுதிகள் |
| --- | --- | --- |
| இந்தோ–ஐரோப்பியன் | பஞ்சாபி, சிந்தி, ஹிந்தி, பீஹாரி, வங்காளி, அசாமிஸ், ராஜஸ்தானி, குஜராத்தி, மராத்தி, கொங்கணி, ஒடியா | பஞ்சாப், சிந்து, உத்தரப்பிரதேசம், மத்தியப் பிரதேசத்தின் சில பகுதிகள், பீகார், வங்காளம், அசாம், ராஜஸ்தான், கத்தியவாட், குஜராத், மகாராஷ்டிரா, தெற்கு கொங்கண், ஒரிசா |
| திராவிடம் | தெலுங்கு, கன்னடம், தமிழ், மலையாளம், துளு, கொடக், தோடா | ஆந்திரா / தெலுங்கானா, கர்நாடகம், தமிழ்நாடு, கேரளம், துளுநாடு, கூர்கு குன்றுகள், நீலகிரி குன்றுகள் |
| ஆஸ்ட்ரோ ஏசியாட்டிக் | முண்டரி, சவோரா, ஜுவாங், போண்டோ, கடாபா, பூமியா, சந்தாலி, காசி | தென் பீகார், தென் ஒரிசாவின் வடமேற்கு மத்தியப் பகுதிகள், மேற்கு வங்காளம், சந்தாள் பர்கானா மாவட்டம், அசாம் குன்றுகள் |

*Source:* Irawathi Karve, *Kinship Organisation in India (1953)*

மக்களை ஒன்றுக்கொன்று இணைப்பதிலும், கலாச்சாரத்தை வளர்ப்பதிலும், ஒற்றுமையை உறுதி செய்து இந்தியாவின் சமூக அமைப்பை நிலைநிறுத்துவதிலும் மொழிகளின் பங்கு என்ன என்பதை நாம் ஆராய்வோம்.

### 1. கலாச்சார மரபுகளை உயிரோட்டமுடையதாக்குகிறது.

வாய்மொழிப் பாடல்களைக் குறித்து நீங்கள் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? கேரளாவின் வடக்கன் பாட்டுகள் வாய்மொழிப் பாடல்களுக்கு எடுத்துக்காட்டுகள் ஆகும். இத்தகைய பாடல்களின் வாயிலாகப் பாரம்பரிய விழுமியங்கள், சமூக நடைமுறைகள் மற்றும் வரலாற்று நிகழ்வுகள் பாதுகாக்கப்படுகின்றன. வாய்மொழிப் பாடல்களுக்கு மேலும் எடுத்துக்காட்டுகளைக் கண்டறியவும்.

மொழிகள் காலகட்டத்திற்கேற்ப வாய்மொழி வாயிலாகவும், மாற்றங்களுக்கு உட்பட்டு எழுத்துப் பரிமாற்றம் மூலமாகவும் அந்தந்த சமூகங்களின் மரபுகளை உயிரோட்டமுடையதாக்குகிறது. ஒவ்வொரு சமூகத்தின் மரபுகள், கதைகள் மற்றும் விழுமியங்கள் அந்தந்த சமூகத்தின் கலாச்சாரத்தை வளர்க்கின்றன.

### வடக்கன் பாட்டுகள்

வடக்கன் கேரளாவில் தோன்றிய வீரபக்தியைக் குறிக்கும் நாட்டுப்புற பாடல்கள் தான் வடக்கன் பாட்டுகள். வடக்கு மலபாரில் உள்ள கடத்தநாடு, கோலத்து நாடு, வயநாடு போன்ற பகுதிகளில் உள்ள களரி பயிற்சிகளுக்கும் பிரபலமான புத்தூரம், தச்சோளி போன்ற பாரம்பரிய வீடுகளில் உள்ள பயிற்சியாளர்களின் வாழ்க்கை வரலாறு மற்றும் அவர்களைப் புகழ்வதும் தான் வடக்கன் பாடல்களின் சாராம்சம். இந்தப் பாடல்கள் மலையாள மொழியின் வாயிலாகப் பரிமாற்றம் செய்யப்படுகிறது.

## 2. அடையாள உணர்வை வழங்குகிறது

மலையாளம் பேசுபவர்கள் மலையாளிகள் என்று அறியப்பப்படுவது போல, மொழி தனி நபர்களை அவர்களின் அடையாளத்துடன் இணைக்கிறது. தமிழர்கள், பீகாரிகள், பஞ்சாபிகள் போன்ற சொற்கள் நபர்களின் மொழியும் அடையாளமும் எவ்வாறு இணைக்கப்பட்டுள்ளன என்பதற்கான எடுத்துக்காட்டுகள் ஆகும். இவ்வாறு மொழி தனி நபர்களின் அடையாளத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

## 3. கலாச்சார பன்முகத்தன்மையோடுள்ள நன் மதிப்பையும் சகவாழ்வையும் வளர்த்துகிறது

நீங்கள் தாய்மொழியைத் தவிர வேறு எந்தெந்த மொழிகளைக் கற்றுக்கொள்கிறீர்கள்? பிற மொழிகளில் உள்ள கதைகள், கவிதைகள் மற்றும் இலக்கியப் படைப்புகள் அனைத்தும் அந்த மொழியைப் பேசும் மக்களின் கலாச்சாரத்தைக் குறித்து அறிந்து கொள்ள நமக்கு உதவுகின்றதல்லவா? பல்வேறு மொழிகள் வாயிலாக நாம் வேறுபட்ட கலாச்சாரங்களைக் குறித்துப் புரிந்து கொள்ளவும், அவற்றை மதிக்கவும், சகவாழ்வை வளர்க்கவும் முடிகிறது. வட்டார மொழிகள் உள்ளிட்ட பல்வேறு மொழிகளைக் கையாளுவதற்கான திறன் தனி நபர்களுக்கு வேறுபட்ட வாழ்க்கைக் கண்ணோட்டங்களையும் வாய்ப்புகளையும் வழங்குகிறது.

இந்தியாவின் மொழி பன்முகத்தன்மையும் கலாச்சாரப் பரிமாற்றமும் என்ற தலைப்பில் ஒரு கட்டுரை தயாரிக்கவும்.

இந்திய சமூக அமைப்பை சமநிலையாக நிலைநிறுத்த மொழி பன்முகத்தன்மையைப் புரிந்து கொள்வதும் மதிப்பதும் அவசியம் ஆகும்.

நாட்டின் ஒற்றுமை, ஒருமைப்பாடு, சகோதரத்துவம், மனித நேயம் போன்ற கருத்துகளையும் விழிமியங்களையும் பிரதிபலிக்கும் ஒரு தேசபக்திப் பாடலைத் தேர்வு செய்யவும். இந்தக் கருத்துகளும், விழுமியங்களும் அதன் மொழி வாயிலாக எவ்வாறு பிரிதிபலிக்கின்றன என்பதைப் பகுப்பாய்வு செய்து ஒரு குறிப்பு தயார் செய்யவும்.

## IV. பழங்குடிச் சமூகம் (Tribal Society)

வரையாடுகளின் பாதுகாப்பிற்கு முதுவான் பழங்குடியினரின் அறிவைப் பயன்படுத்தியது வனத்துறை

மேற்குத் தொடர்ச்சி மலைகளின் பாதுகாப்பிற்கு கர்நாடகாவின் ஸோலிகா பழங்குடியினரின் விலைமதிப்பற்ற நன்கொடைகள்.

பாரம்பரிய நெல் வகைகள் மற்றும் வேளாண் முறைகளைப் பாதுகாப்பதற்காக குறிச்சியர் பழங்குடி இனத்தைச் சார்ந்த விவசாயி செறுவயல் ராமனுக்கு பத்மஸ்ரீ விருது.

தலைப்புச் செய்திகளை வாசித்தீர்கள் அல்லவா? இந்திய சமூக அமைப்பை நிலைநிறுத்துவதில் பல்வேறு பழங்குடிச் சமூகங்களின் நன்கொடைகள் தான் இந்த செய்திகளின் முக்கிய கருத்து. தலைப்புகளிலிருந்து பழங்குடிச் சமூகங்களின் எந்தெந்த நன்கொடைகளை உங்களால் புரிந்து கொள்ள முடிகிறது?

இந்திய சமூகத்தை சமூக, கலாச்சார, புவியியல் பண்புகளின் அடிப்படையில் பழங்குடிச் சமூகம், கிராம சமூகம், நகர சமூகம் என வகைப்படுத்தப்பட்டுள்ளன. இந்திய சமூகத்தின் பிரிக்க முடியாத காரணி தான் பழங்குடிச் சமூகம். இந்தியாவில் பன்முகத்தன்மையுடைய பழங்குடிச் சமூகங்கள் உள்ளன. உலகிலேயே மிக அதிகமான பழங்குடி மக்கள் ஆப்பிரிக்காவில் உள்ளனர். இந்தியா இரண்டாவது இடத்தில் உள்ளது.

பழங்குடிச் சமூகம் இந்தியாவின் பூர்வீக மக்கள் ஆவர். இந்திய மக்கள் தொகையின் 8.6 சதவீதம் (2011 மக்கள் தொகை கணக்கின்படி) பழங்குடிச் சமூகம் ஆகும். வடகிழக்கு மாநிலங்களான மிசோராம், நாகாலாந்து, மேகாலயா மற்றும் அருணாச்சலப் பிரதேசம் போன்ற பகுதிகளிலும், யூனியன் பிரதேசமான இலட்சத்தீவிலும் மக்கள் தொகையின் பெரும்பான்மையினரும் பழங்குடியினர் ஆவர்.

பழங்குடிச் சமூகங்கள் கிராம, நகரப்புற சமூகங்களில் இருந்து வேறுபட்ட பண்புகளைக் கொண்டவர்கள் ஆவர். ஒவ்வொரு பழங்குடிச் சமூகத்திற்கும் அதனதன் சொந்த மொழி, பழக்கவழக்கங்கள், ஆட்சி அமைப்புகள் உள்ளன. பழங்குடி மக்கள் இயற்கையுடன் நெருங்கிய தொடர்பில் வாழ்கின்றவர்களும், நிலையான வேளாண்மையும், வன பாதுகாப்பில் ஈடுபடுகிறவர்களும் ஆவர். இதன் வாயிலாகச் சுற்றுச்சூழலை பாதுகாக்கவும், சுற்றுச்சூழல் சமநிலையை நிலைநிறுத்தவும் பழங்குடிச் சமூகங்களால் முடிகிறது.

இந்தியாவின் பழங்குடிச் சமூகங்களின் வேறுபட்ட மொழிகள், நம்பிக்கைகள், பழக்க வழக்கங்கள், உணவு முறைகள், வாழ்க்கை முறை போன்றவை நமது பன்முகத்தன்மையின் ஒரு பகுதியாகும். காடுகள், பல்லுயிர்கள் போன்றவற்றின் தனித்துவமான பாதுகாப்பிற்கு பழங்குடிச் சமூகத்தின் நன்கொடைகள் மிகவும்

பெரிதாகும். பாரம்பரியமான அறிவுகள், கலை மற்றும் கலாச்சாரம் போன்றவை தலைமுறை தலைமுறையாக பரிமாற்றம் செய்யப்படுவதின் வாயிலாக இந்தியாவின் கலாச்சாரத்தை பாதுகாப்பதில் பழங்குடிச் சமூகங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன.

## 1. பாரம்பரிய அறிவு

பாரம்பரிய பழங்குடிச் சமூகங்களுக்கு வேளாண்மை, மூலிகைகள், பல்லுயிர் பாதுகாப்பு போன்றவற்றைக் குறித்து விலைமதிப்பற்ற அறிவு உண்டு. எடுத்துக்காட்டாக, பல்வேறு பழங்குடி இனத்தைச் சார்ந்த மக்கள் வேறுபட்ட கால நிலைகளை எதிர்கொள்வதற்கு திறன் கொண்ட பயிர்களை வளர்த்து, அவற்றின் விதைகளை தனித்துவமான வழிகளில் பாதுகாக்கவும் செய்கின்றனர். அவர்கள் சுகாதார பாதுகாப்புக்காக தனித்துவமான இயற்கை வளங்களைப் பயன்படுத்துகின்றனர். பழங்குடிச் சமூகங்களின் பழக்க வழக்கங்களும் வாய்மொழி வரலாறுகளும் இந்தியக் கலாச்சாரத்திற்கு சிறந்த நன்கொடைகளாகும்.



திருமதி லட்சுமிகுட்டி

*(பாரம்பரிய மூலிகை சிகிச்சைக்காக 2018-இல் பத்மஸ்ரீ விருது இந்திய ஜனாதிபதி திரு. ராம்நாத் கோவிந்திடமிருந்து பெற்றுக் கொள்கிறார்.)*



திரு. செறுவயல் ராமன்

*(பாரம்பரிய நெல் விதையினங்களின் பாதுகாத்து ஊக்குவிப்பதற்காக 2023-இல் பத்மஸ்ரீ விருது இந்திய ஜனாதிபதி திருமதி. திரௌபதி முர்முவிடமிருந்து பெற்றுக் கொள்கிறார்.)*

## 2. கலையும் கலாச்சாரமும்

பழங்குடிச் சமூகம் தங்களது தனித்துவமான மொழி, கலை வடிவங்கள், கொண்டாட்டங்கள், இசை மற்றும் நடனம் போன்றவற்றின் வாயிலாக இந்தியக் கலாச்சாரத்தை வளர்க்கிறது. கிராம–நகரப்புற சமூகங்களைப் போலவே பழங்குடிச் சமூகமும் இந்தியாவின் 'வேற்றுமையில் ஒற்றுமை' என்ற கருத்தை வலுப்படுத்துகிறது. பழங்குடிக் கலைகள் (வார்லி பெயின்டிங் போன்றவை) மற்றும் கலாச்சார விழாக்கள் உலக அளவில் கவனத்தை ஈர்க்கவும், சுற்றுலாவை ஊக்குவிக்கவும் செய்கின்றன.


வார்லி பெயின்டிங்


இருளர் நடனம்


மலைப்புலை யாட்டம்


பணியர் நடனம்


பளியர் நடனம்


மங்கலம்களி

பழங்குடி கலைகள்

### 3. நிலையான வாழ்க்கை

பழங்குடிச் சமூகங்கள் இயற்கையோடு இணைந்து வாழவும், காடுகள், நீர் போன்ற புமியின் இயற்கை வளங்களை சுற்றுச்சூழலுக்கு உகந்த முறையில் தங்கள் வாழ்க்கையின் ஒரு பகுதியாக மாற்றவும் செய்கின்றனர். இந்தச் சமூகத்தின் நடைமுறைகள் சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் வளங்களின் பாதுகாப்பிற்கும் சிறந்த மாதிரிகளை வழங்குகின்றன. காடுகளைக் குறித்த பழங்குடிச் சமூகத்தின் அறிவு சுற்றுச்சூழல் சுற்றுலாத் துறையின் (ECO Tourism) வளர்ச்சிக்கு ஊக்கம் அளிக்கிறது. பழங்குடி சமூகத்தின் அறிவு நமது நாட்டின் அறிவுசார் பொருளாதாரத்திற்கு எவ்வாறு பங்களிக்கிறது என்பதற்கு இது ஓர் எடுத்துக்காட்டு.

### 4. சமத்துவமின்மைக்கு எதிரான எதிர்ப்புகள்



**சந்தாள் கலகம் (1855-1856)**

காரணங்கள்:
நில உரிமையாளர்கள், வட்டிக்காரர்கள், ஆங்கிலேய அதிகாரிகளின் சுரண்டல். பூர்வீக நிலங்களிலிருந்து காட்டாயக் குடியிறக்கம்

இடம்:
இன்றைய வங்காளம், ஜார்க்கண்ட், ஒடிசா, பீகார் போன்றவை

முக்கியமான தலைவர்கள்:
சிந்து முர்மு, கன்கு முர்மு



**முண்டா கலகம் (1899-1900) (உல்குலான் இயக்கம்)**

காரணங்கள் :
முண்டா பழங்குடி மக்களின் மீதான நில உரிமையாளர்களின் சுரண்டல், அடக்குமுறைகள். நில உரிமையில் ஆங்கிலேயர்களின் தலையீடு

இடம் :
ஜார்க்கண்ட் உட்பட்ட சோட்டா நாக்பூர் பகுதிகள்

முக்கியமான தலைவர்:
பிர்சா முண்டா.



**குறிச்சியர், குறும்பா கலகம் (1812)**

காரணங்கள் :
அதிகப்படியான வரி விதிப்பு, உள்ளூர் நிர்வாகத்தில் ஆங்கிலேயர்களின் நிலங்களிலிருந்து கட்டாய குடியிறக்குதல் மற்றும் நிலம் கையகப்படுத்தல்.

இடம் :
வயநாடு (கேரளம்)

முக்கியமான தலைவர்:
ராமன் நம்பி

வரலாற்று அருங்காட்சியகத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள இந்தியாவில் நடைபெற்ற முக்கியமான பழங்குடிக் கலகங்களைக் குறிப்பிடும் படங்களைக் கவனியுங்கள். இந்தியாவில் உள்ள பழங்குடிச் சமூகங்கள், சமத்துவமின்மைக்கும் அடக்குமுறைக்கும் எதிராக ஏராளம் போராட்டங்களை நடத்தவும், சமூக நீதிக்காக போராடவும் செய்தனர்.

இந்தியாவின் சமூகக் கட்டமைப்பை மேம்படுத்துவதில் பழங்குடிச் சமூகங்களின் கலாச்சாரம், சுற்றுச்சூழல் அறிவு மற்றும் சமத்துவமின்மைக்கு எதிரான போராட்டங்கள் ஆகியவை முக்கிய பங்கு வகிக்கின்றன. இந்தியாவின் இயற்கை மற்றும் கலாச்சார வளமையின் உரிமையாளர்களே பழங்குடி சமூகங்கள். பழங்குடிச் சமூகங்களின் கல்வி, ஆரோக்கிய பாதுகாப்பு, சமூக – பொருளாதார வளர்ச்சி போன்றவற்றை மேம்படுத்துவதன் வாயிலாக நமது நாட்டின் தேசிய ஒருங்கிணைப்பை மேலும் வலுப்படுத்த இயலும்.

இந்திய சமூக அமைப்பை பராமரிப்பதில் பழங்குடி சமூகங்களின் பங்கை விளக்கும் புள்ளி விவரங்கள், படங்கள் மற்றும் குறுகிய விளக்கங்கள் உள்ளிட்ட தகவல் வரைபடங்களைத் தயார் செய்யவும்.

## V. கிராம – நகரப்புறச் சமூகங்கள் (Rural-Urban Societies)



மேற்கு வங்காளத்தில் உள்ள ஒரு கிராமத்தில் தான் ஆரவ் வசித்து வந்தான். மலைகளுக்கு இடையில் அமைந்துள்ள இந்தக் கிராமத்தின் இயற்கை அழகு எல்லோரையும் கவரும் தன்மையுடையது. பெரும்பாலான கிராம மக்கள் விவசாயிகளாக இருந்தனர். அதனால் அங்கு ஏராளமான வேளாண் நிலங்களும் இருந்தன. ஆரவ் தினமும் தனது பெற்றோருக்கு விவசாய நிலத்தில் உதவிய பின்பு பள்ளிக்குச் செல்வான். அவனது பள்ளி வீட்டிலிருந்து சற்றுத் தொலைவில் இருந்தது. அவன் பல சந்துகளையும், சாலைகளையும் கடந்து தான் பள்ளிக்குச் செல்ல வேண்டும். ஒரு சில வகுப்பறைகள் மட்டுமே உள்ள, தேவையான புத்தகங்களோ, இணைய வசதிகளோ இல்லாத, குறைவான வசதிகள் மட்டுமே அவனது பள்ளியில் இருந்தன. அவனது கிராமத்தின் நிலைமையும் வேறுபட்டதல்ல. கிராம மக்கள் மருத்துவமனைக்குச் செல்ல விரும்பினாலும் அவர்கள் நீண்ட தூரம் பயணம் செய்ய வேண்டும். இவ்வாறான சிரமங்கள் இருந்தாலும் ஆரவ் தனது கிராமத்தை மிகவும் விரும்பினான். அனைத்துக் கிராம மக்களும் மிகவும் நெருக்கமாகவும், அன்பாகவும், குடும்ப உறுப்பினர்களைப் போல அங்கு ஒன்றாக வாழ்கிறார்கள்.



கல்கத்தா நகரில் வாழும் மாயாவின் வாழ்க்கை இதிலிருந்து முற்றிலும் வேறுபட்டது. நெரிசலான நடைபாதைகளும், அணிதிரண்டு வரும் வாகனங்களால் நிரம்பிய சாலைகளும் அங்குள்ள ஒரு சாதாரண காட்சி ஆகும். அந்த நகரம் எப்போதும் பெரும் ஆரவாரம் உடையதாக இருக்கும். ஆட்கள் பரபரப்பாகக் காணப்படுவார்கள். காலைவேளைகளில், அப்பா, அம்மாவுடன் சிறிது நேரம்கூட பேச அவளால் இயலாது. அந்நேரம் பெற்றோர்களும் அலுவலகத்திற்குச் செல்வதில் மும்முரமாக இருப்பார்கள். பெரிய கட்டடங்கள், அலுவலக வளாகங்கள் மற்றும் தொழிற்சாலைகள் உள்ளிட்ட அனைத்து நவீன வசதிகளும் அந்த நகரத்தில் உண்டு. மிகப்பெரியதும், இணைய

வசதிகளுடன் கூடிய ஸ்மார்ட் வகுப்பறைகள் மற்றும் விசாலமான நூலகம் போன்ற அனைத்து வசதிகளையும் கொண்ட பள்ளியில் தான் மாயா படிக்கிறாள். இதுபோன்ற வசதிகள் அந்த நகரத்தில் இருந்தபோதிலும், அங்குள்ள மக்களிடையே சமூக நெருக்கம் மிகக் குறைவாக காணப்பட்டது. மாயாவுக்கு தனது அண்டை வீட்டாரைக் கூட போதிய அறிமுகமில்லை. இவ்வளவு சலசலப்புகளுக்கு மத்தியிலும் பூங்காக்கள், உடற்பயிற்சி மைதானங்கள் போன்ற இடங்களில் எல்லாம் நகரவாசிகள் ஒருவருக்கொருவர் தொடர்பு கொண்டு, உறவுகளை வளர்க்க முயற்சிக்கிறார்கள்.

ஆரவ் மற்றும் மாயாவைக் குறித்த தகவல்களை வாசித்தீர்கள் அல்லவா? அவர்கள் ஒரே மாநிலத்தில் வாழ்ந்தாலும் அவர்களின் வாழ்விடங்கள் சில தனித்துவமான பண்புகளைக் கொண்டிருப்பதை நீங்கள் கவனித்தீர்கள் அல்லவா? அவை என்னவென்று பட்டியலிடுங்கள்.

| கிராமப்புறச் சமூகம் | நகரப்புறச் சமூகம் |
|---|---|
| • வேளாண்மை | • தொழில் |
| • | • |
| • | • |

இந்தியா பழங்காலத்தில் இருந்தே சுயாட்சியை உடைய கிராமங்களைக் கொண்ட நாடாக இருந்தது. கிராம சமூகம், வேளாண்மை, சிறு தொழில்களை அடிப்படையாகக் கொண்டிருந்தது. நெருங்கிய உறவுகளும், பாரம்பரிய வாழ்க்கை முறைகளுமே இந்தச் சமூகத்தின் சிறப்பியல்புகள். கிராம சமூகங்கள் இந்தியாவின் வேளாண்மையைச் சார்ந்த பொருளாதாரத் துறையின் முதுகெலும்பாகும்.

பன்முகத்தன்மை வாய்ந்த தொழில்கள், பல்வேறு சேவைகள், நவீன அடிப்படை வசதிகள் போன்றவை நகரப்புறச் சமூகத்தின் சிறப்பியல்புகள் ஆகும். கிராமங்களுடன் ஒப்பிடும்போது பன்முகத்தன்மை வாய்ந்த மனித சமூகமும், வேகமான வாழ்க்கை முறைகளும் கரப்புற வாழ்க்கையின் சிறப்பம்சங்கள் ஆகும்.



பஞ்சாபில் உள்ள ஒரு கிராமத்தில் வசிக்கும் ஜபீர் சிங்கினுடையவும் அவரது குடும்பத்தினருடையவும் முக்கியமான தொழில் கோதுமை விவசாயம் ஆகும். கிராமத்தில் உற்பத்தி செய்யப்படும் கோதுமை பெரும்பாலும் நகரத்தில் விநியோகிக்கப்படுகிறது.



நகரில் டெக்னோ பார்க்கில் பணிபுரியும் ரினுவும் அவரது நண்பர்களும் பல்வேறு பயிர்களுக்குத் தகுந்த மண்ணைக் கண்டறியவும், விவசாயிகளுக்கு உதவுவதற்காகவும் மொபைல் செயலியை உருவாக்கினர். இது கிராமங்களில் வேளாண்முறைகளை மேம்படுத்தவும், அதிக உற்பத்தியை உறுதி செய்யவும் உதவுகிறது.

ரினுவினுடையவும் ஜபீர் சிங்கினுடையவும் வேலைகளைக் கவனத்தீர்கள் அல்லவா? அவற்றின் சிறப்பியல்புகள் யாவை? அவர்களது தொழில்கள் ஒன்றையொன்று சார்ந்து இருக்கின்றனவா? எவ்வாறு?

நமது வேளாண் துறைக்கு உதவும் அரசாங்க மொபைல் செயலிகள் யாவை?

உணவுக்கான மூலப்பொருட்களுக்காக நகரங்கள் கிராமங்களைச் சார்ந்திருக்கும்போது, தொழில் நுட்பங்களுக்காகவும் சந்தைகளுக்காகவும் கிராமங்கள் நகரங்களை சார்ந்திருக்கின்றன. நகரங்களின் நவீனப் போக்குகள் கிராமங்களை பாதிக்கின்றன. நகரங்களை ஒப்பிடும்போது கிராமங்கள் பரஸ்பர உறவுகளுக்கும் சமூக ஒத்துழைப்புக்கும் அதிக முக்கியத்துவம் அளிக்கின்றன.

கிராம–நகரப்புற குடியேற்றங்கள் இரு சமூகங்களையும் ஒன்றோடொன்று இணைக்கிறது. கிராமங்களுடன் ஒப்பிடும்போது நகரப்புறச் சமூகங்கள் தொழில்மயமாக்கலை ஊக்குவிக்கவும், நவீன வேலை வாய்ப்புகளுக்கு ஊக்கம் அளிக்கவும் செய்கின்றன. நகரங்கள் தொழில்நுட்பத்தையும் உலகளாவிய தொடர்புகளையும் நவீனப்படுத்துகின்றன. நகரப்புற வாழ்க்கை, வெவ்வேறு கலாச்சாரங்களின் கலவையானதால் கலாச்சார பரிமாற்றத்தை (Cultural Exchange) ஊக்குவிக்கிறது.

கிராமங்களும் நகரங்களும் ஒன்றோடொன்று சார்ந்து சமநிலையை நிலைநிறுத்துவும், இந்திய சமூக அமைப்பை வலுப்படுத்தவும் செய்கிறது.

### கிராம–நகரப்புறத் தொடர்ச்சி (Rural-Urban Continuum)

கிராம–நகரப்புறத் தொடர்ச்சி என்பது கிராமச் சமூகங்கள் நகரச் சமூகங்களாக மாறுவது தொடர்பான ஒரு கற்பனையாகும். கிராமமும் நகரமும் எங்கு முடிவடைகின்றன எனவும், எங்கு ஆரம்பிக்கின்றன எனவும் சரியாகப் புரிந்துகொள்ள இயலாத வகையில் இவைகளுக்கிடையே எந்த ஒரு எல்லையும் வரையறுக்கப்படவில்லை என்ற சிறப்பு கிராம–நகரப்புற தொடர்ச்சியில் நிலைநிற்கிறது என மேக் ஐவர் கூறுகிறார். கேரளாவில் இதுபோன்ற கிராம – நகரப்புற தொடர்ச்சி இருப்பதைக் காணலாம்.

கிராம–நகரப்புறச் சமூகங்கள் ஒன்றுக்கொன்று சார்ந்திருத்தலை வெளிப்படுத்தும் படங்களையும் விளக்கங்களையும் உள்ளடக்கிய ஒரு டிஜிட்டல் பிரசன்டேஷன் தயார் செய்து வெளியிடவும்.

## பன்முகத்தன்மையிலிருந்து பன்மைத்துவத்தை நோக்கி

மதம், ஜாதி, கோத்திரம், மொழி போன்றவற்றில் பன்முகத்தன்மையை உள்ள நாடு நம்நாடு என்பதை நாம் புரிந்து கொண்டோம் அல்லவா? இந்தப் பன்முகத்தன்மையை பன்மைத்துவத்தின் வாயிலாக அணுகும் போது மட்டுமே நாட்டின் சமூக அமைப்பு நிலையாக இருக்க முடியும். 'பன்முகத்தன்மை' (Diversity) மற்றும் 'பன்மைத்துவம்' (Pluralism) என்ற சொற்கள் பெரும்பாலும் ஒரே பொருளில் பயன்படுத்துவதை நீங்கள் கவனித்திருக்கிறீர்களா?



உயிரியல் பல்வகைமை



இசைக்குழு (ஆர்க்கெஸ்ட்ரா)

மேலே கொடுக்கப்பட்டுள்ள படங்களைக் கவனியுங்கள்.

இயற்கையில் பல்வேறுபட்ட ஏராளம் உயிரினங்கள் வாழ்கின்றன என்ற கருத்துத்தான் பல்லுயிர் என்ற வார்த்தையின் பொருள். பன்முகத்தன்மை என்பது வேற்றுமைகளைக் குறிக்கிறது. ஆனால் வேற்றுமையுடைய செயல்கள் ஒன்றாகச் சேர்த்து செயல்படுவதை பன்மைத்துவம் என்ற சொல் பொருள்படுத்துகிறது. ஓர் இசைக்குழுவில் பல்வேறுபட்ட இசைக்கருவிகள் இருப்பது என்பது அதன் பன்முகத்தன்மையாகும். ஆனால் அந்த இசைக்கருவிகளை அழகான இசையை உருவாக்கும் வகையில் திறமையாக ஒழுங்கமைக்கும்போது (Compose) தான் பன்மைத்துவம் ஏற்படுகிறது.

வேறுபட்ட சமூகப் பிரிவுகள், மதங்கள், இனங்கள், இவற்றைச் சார்ந்த மக்கள் ஒரு சமூகத்தில் ஒன்றாக வாழவும் ஆனால் ஒவ்வொருவரும் தங்கள் சொந்த மரபுகள், விருப்பங்கள் என்பனவற்றை பின்பற்றுகின்ற ஒரு சூழ்நிலையைத்தான் பன்மைத்துவம் கொண்டுள்ளது.

சமூகத்தில் உள்ள பன்முகத்தன்மை என்பது சமூகத்திற்குள் நிலைநிற்கின்ற வேற்றுமைகளைக் குறிக்கிறது. இதில் கலாச்சாரம், மதம், மொழி, இனம், சமுதாய வேற்றுமைகள் அனைத்தும் உள்ளடங்கும். இத்தகைய வேற்றுமைகளுக்கிடையே பரஸ்பர தொடர்போ, பரஸ்பர மரியாதையோ காணப்படுவதில்லை. ஆனால் பன்மைத்துவம் இந்த வேற்றுமைகளுக்கு அப்பால் வெவ்வேறு குழுக்களிடையே காணப்படும் கருத்துப் பரிமாற்றம், பரஸ்பர மரியாதை, பரஸ்பர அன்பு மற்றும் பரஸ்பர நல்லிணக்கம் போன்றவற்றை ஊக்குவிக்கிறது. சமூகத்தில் உள்ள வேற்றுமைகளும் பன்முகத்தன்மையும் பிரிவினைகளை உருவாக்குவதில்லை எனவும், பதிலாக ஒற்றுமை மற்றும் சக வாழ்வுக்கு நேராக வழிநடத்துகிறது என்பதையும் 'பன்மைத்துவம்' உறுதி செய்கிறது.

பன்முகத்தன்மை இயற்கையாகவே நிலைநிற்கிறது என்றால் பன்மைத்துவம் உணர்வுபூர்வமாக உருவாக்கப்பட வேண்டிய ஒன்றாகும். ஆதலால் தான் பன்மைத்துவத்தின் படைப்பு ஓர் உணர்வுபூர்வமான செயலாகக் கருதப்படுகிறது.

இந்திய சமூக அமைப்பு என்ற தலைப்பின் அடிப்படையில் வகுப்பில் ஒரு வினாடி வினாவை நடத்துவதற்கான வினாநிரலைத் தயார் செய்யவும்.

## பன்மைத்துவம் எதிர்கொள்ளும் சவால்கள்



இந்திய பன்முகத்தன்மையைத் தடுக்கும் சில பிரச்சினைகள் தலைப்புச் செய்திகளில் கொடுக்கப்பட்டுள்ளன. அவை எவை?

- 
- 
- 

நமது நாட்டின் பன்முகத்தன்மையை நாம் அங்கீகரித்து மதிக்கும்போது தான் நமது நாட்டில் பன்மைத்துவம் உருவாகிறது. தேசிய ஒருமைப்பாட்டின் வாயிலாக இந்திய பன்மைத்துவம் எதிர் கொள்ளும் சவால்களை வெல்ல நம்மால் இயலும்.

தற்போதைய அச்சு ஊடகங்களில் இருந்து, சமூக நல்லிணக்கம் மற்றும் மோதல்கள் குறித்த செய்திகளைச் சேகரிக்கவும். ஊடகங்கள் பன்மைத்துவத்தையும் அதன் சவால்களையும் எவ்வாறு வெளியிடுகின்றன என்பதைப் பகுப்பாய்வு செய்து கருத்தரங்கு அறிக்கையை தயார் செய்யவும்.

## தேசிய ஒருமைப்பாடு

வேறுபட்ட பின்னணிகள், பகுதிகள், மொழி, மதம், மற்றும் கலாச்சாரம் போன்றவற்றை பின்தொடரும் மக்களை அவர்களது பன்முகத்தன்மையை மதித்து ஒன்றுபட்ட மற்றும் இணக்கமான ஒரு தேசத்திற்குள் கொண்டுவரும் செயலே 'தேசிய ஒருமைப்பாடு' (National Integration). இது பன்முகத்தன்மையை மதிப்பதோடு குடிமக்களிடையே அடையாளம், ஒற்றுமை, பொதுவான அடையாள உணர்வு போன்றவற்றையும் வலியுறுத்துகிறது. கலாச்சாரம், மொழி, மதபரமான பன்முகத்தன்மையைக் கொண்ட இந்திய சமூகத்தை அவர்களது பன்முகத்தன்மையை மதித்துக்கொண்டு ஒரு தேசிய அடையாளத்திற்கு நேராக ஒன்றிணைக்கும் செயல் தான் இந்திய தேசிய ஒருமைப்பாடு.

வேற்றுமையில் ஒற்றுமையை ஊக்குவிக்கும் கொண்டாட்டங்கள் இந்தியாவின் தேசிய ஒருமைப்பாட்டுக்கு ஊக்கம் அளிக்கிறது. ஓரங்கட்டப்பட்ட பிரிவினர்களை அரவணைத்து சமூகத்தின் அனைத்து பிரிவினர்களுக்கும் சம பங்களிப்பையும் பிரதிநிதித்துவத்தையும் உறுதி செய்யும் ஒரு ஜனநாயக அமைப்புத் தான் இந்தியாவில் காணப்படுகிறது. இந்தியா முழுவதும் ஒன்றாகக் கொண்டாடும் பல்வேறு பண்டிகைகள், கொண்டாட்டங்கள் அனைத்தும் சமூகத்தில் சக வாழ்வையும் சகிப்புத்தன்மையும் உறுதி செய்கின்றன. அத்துடன் மதம், மொழிச் சிறுபான்மையினரை பாதுகாக்கின்ற சட்ட அமைப்பும், வெளிப்படையான மதச் சார்பின்மையும், சமத்துவம் போன்ற அரசியலமைப்பு மதிப்புகளை வலுப்படுத்தவும் செய்கின்றன.

**தேசிய ஒருமைப்பாடு – சிறப்பம்சங்கள்**

- வேற்றுமையில் ஒற்றுமையை வளர்க்கிறது.
- சமூக ஒற்றுமையை ஊக்குவிக்கிறது.
- தேசிய அடையாளத்தை வளர்க்கிறது.
- சமூக வளர்ச்சியை ஊக்குவிக்கிறது.
- ஜனநாயக ஆட்சியை வலுப்படுத்துகிறது.
- பன்மைத்துவம் எதிர்கொள்ளும் சவால்களை வெல்ல உதவுகிறது.

இந்தியாவின் பல்வேறு மாநிலங்களின் மொழி, கலை, பிற கலாச்சார சிறப்புகள் மற்றும் தேசிய ஒருமைப்பாட்டிற்கு நன்கொடை வழங்கிய நபர்கள், போன்றவற்றை உட்படுத்தி குழு அடிப்படையில் வகுப்பில் டிஜிட்டல் விளக்கக் காட்சியை நடத்தவும்.

## தொடர் செயல்பாடுகள்

- உங்கள் பகுதியிலோ அல்லது அருகில் உள்ள பகுதிகளிலோ நடைபெற்ற சமூகத் தீமைகள், சமத்துவமின்மைக்கு எதிரான போராட்டங்கள் மற்றும் போராட்டங்களைக் குறித்த தகவல்களைச் சேகரித்து ஓர் ஆவணப்படத்தை தயார் செய்யவும்.
- இந்திய சுதந்திரப் போராட்டத்தின் போது பல்வேறு இந்திய மொழிகளின் வாயிலாக தேசிய உணர்வைத் தூண்டிய கவிதைகள் மற்றும் பாடல்களைச் சேகரித்து குழுவாக வெளியிடவும்.
- இந்தியாவின் கலாச்சார வளர்ச்சிக்கு நன்கொடை வழங்கிய ஓவியங்கள், சிற்பங்கள், நடன வடிவங்கள், இசை போன்ற பல்வேறு கலை வடிவங்களை உள்ளடக்கி ஐ. சி. டி யின் உதவியுடன் ஒரு கலாச்சாரக் கண்காட்சியை ஏற்பாடு செய்யுங்கள்.
- 'இந்திய சமூகத்தில் பழங்குடி – கிராம – நகரப்புற வாழ்க்கையின் விளக்கக்காட்சி' என்ற தலைப்பில் ஒரு புகைப்பட கண்காட்சியை ஏற்பாடு செய்யுங்கள்.
- இந்தியாவின் சமூகச் சீர்திருத்தவாதிகளின் படங்கள் மற்றும் அவர்களது செயல்பாட்டு பகுதிகளையும் உட்படுத்தி ஒரு டிஜிட்டல் விளக்கக் காட்சியை தயார் செய்யவும்.

## குறிப்புகள்

# குறிப்புகள்

# குறிப்புகள்

# குறிப்புகள்

# இந்திய அரசியலமைப்புச் சட்டம்

## பாகம் 4 அ

### இந்தியக் குடிமக்களின் அடிப்படைக் கடமைகள்

51 அ பிரிவுக்கூறு

(அ) இந்திய அரசியலமைப்புச் சட்டத்துக்கு இணங்கி ஒழுகுதலும், அதன் உயரிய நோக்கங்களையும் நிறுவனங்களையும் மற்றும் தேசியக் கொடியையும் தேசிய கீதத்தையும் மதித்தலும்;

(ஆ) நம் நாட்டின் விடுதலைப் போராட்டத்திற்கு எழுச்சியூட்டிய உயர்ந்த எண்ணங்களை நெஞ்சில் நிறுத்திப் பின்பற்றுதல்;

(இ) இந்தியாவின் இறையாண்மையையும் ஒற்றுமையையும் நேர்மையையும் நிலைநிறுத்திக் காப்பாற்றுதல்;

(ஈ) இந்திய அரசு வேண்டும்போது நாட்டைப் பாதுகாக்கவும் நாட்டுக்காகத் தொண்டு புரியவும் தயாராயிருத்தல்;

(உ) சமயம், மொழி, வட்டாரம், இன வேற்றுமைகள் வரம்பு மீறுகிற நிலையில் அதற்கு எதிராக எல்லா இந்திய மக்களிடையேயும் நல்லிணக்கத்தையும், பொதுவான உடன்பிறப்பு உணர்வையும் வளர்த்தல்; பெண்மையின் மதிப்புக்கு இழிவு ஏற்படுத்தும் செயல்களை விட்டொழித்தல்;

(ஊ) நமது கலவைப் பண்பாட்டின் உயர்ந்த மரபை மதித்துப் பேணுதல்;

(எ) காடுகள், ஏரிகள், ஆறுகள், வனவிலங்குகள் உள்ளிட்ட இயற்கையான சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாத்து மேம்படுத்தலும், வாழும் உயிர்கள் மீது இரக்கம் கொள்ளுதலும்;

(ஏ) அறிவியல் சார்ந்த மனப்பாங்கு, மனிதநேயம், விசாரித்து அறியும் உள்ளறிவுத்திறம், சீர்திருத்தத்திறம் ஆகியவற்றை வளர்த்தல்.

(ஐ) பொது உடைமைகளைப் பாதுகாத்தலும் வன்முறையை விட்டொழித்தலும்;

(ஒ) பெரும் முயற்சிகள் சாதனைகளின் உயர்ந்த படிகளை நோக்கி இடைவிடாமல் முன்னேறத்தக்க வகையில் தனிமனித கூட்டு நடவடிக்கையின் எல்லாப் பரப்புகளிலும் முதன்மை நிலை எய்த முயலுதல்;

(ஓ) ஆறு வயதிற்கும் பதிநான்கு வயதிற்கும் இடைப்பட்ட பருவமுள்ள தன் குழந்தைக்கு, அதன் பெற்றோர் அல்லது பாதுகாவலர் கல்விக்கான வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்தல்;

ஆகிய இவையனைத்தும் ஒவ்வொரு இந்தியக் குடிமகனின் அடிப்படைக் கடமைகளாகும்.

# குழந்தைகளின் உரிமைகள்

அன்பார்ந்த குழந்தைகளே,

உங்கள் உரிமைகள் எவையென்று தெரியவேண்டாமா? உங்கள் உரிமைகளைப் பாதுகாக்கத் தற்போது ஓர் ஆணையம் செயல்பட்டு வருகிறது. அதன் பெயர் கேரள மாநிலப் பாலர் உரிமைப் பாதுகாப்பு ஆணையம் என்பதாகும். உரிமைகள் பற்றிய அறிவு, உங்கள் பங்கேற்பு, பாதுகாப்பு, சமூகநீதி போன்றவற்றை உறுதிப்படுத்த ஆக்கமும் ஊக்கமும் அளிக்கிறது இவ்வாணையம். உங்கள் உரிமைகள் எவையென்று பார்ப்போம்.

- பேசுவதற்கும்கருத்து வெளியீட்டிற்குமான சுதந்திரம்.
- தனிநபர் சுதந்திரம் மற்றும் உயிர் பாதுகாப்பு உரிமை.
- வாழ்வதற்கும் வளர்வதற்குமான உரிமை.
- ஜாதி-மத-இன-நிற சிந்தனைகளுக்கு அப்பாற்பட்டு மதிப்பதற்கும் அங்கீகரிப் பதற்குமான உரிமை.
- உடல், உள, பால் பலாத்காரங்களிலிருந்து பாதுகாத்துக்கொள்வதற்கும் பராமரிப்பதற் குமான உரிமை.
- பங்கேற்பிற்கான உரிமை.
- குழந்தைத் தொழில் மற்றும் ஆபத்தான தொழில்களிலிருந்து விடுதலை.
- குழந்தைத்திருமணத்திலிருந்து பாதுகாப்பு.
- தமது பண்பாட்டை அறிந்து அதற்கேற்ப வாழ் வதற்கான உரிமை.
- புறக்கணிப்புகளிலிருந்து பாதுகாப்பு.
- இலவச - கட்டாயக் கல்விக்கான உரிமை.
- விளையாடுவதற்கும் கற்பதற்குமான உரிமை.
- அன்பும் பாதுகாப்பும் நிறைந்த குடும்பத்தையும் சமூகத்தையும் பெறுவதற்கான உரிமை

## சில கடமைகள்

- பள்ளிக்கூடம், பொதுஇடங்கள் ஆகியவற்றை அழியாமல் பாதுகாக்க வேண்டும்.
- பள்ளிக்கூடத்திலும் கற்றல் செயல்பாடு களிலும் ஒழுக்கத்தைக் கடைபிடிக்க வேண்டும்.
- பள்ளிக்கூட அதிகாரிகள், ஆசிரியர், பெற்றோர், உடன் பயில்வோரை மதிக்கவும் அங்கீகரிக் கவும் வேண்டும்.
- ஜாதி-மத-இன-நிறச் சிந்தனைகளுக்கு அப்பாற் பட்டு எல்லோரையும் மதித்து அங்கீகரிப்பதற் கான மன நிலையை அடையவேண்டும்

*தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:*

**கேரளமாநிலக் குழந்தைகள் உரிமைப் பாதுகாப்பு மையம்**
ஸ்ரீ கணேஷ், TC. 14/2036, வான்ரோஸ் ஜங்ஷன்,
கேரளா பல்கலைகழகம் P.O, திருவனந்தபுரம்-34, தொலைபேசி : 0471-2326603

இ-மெயில் : childrights.cpcr@kerala.gov.in, rte.cpcr@kerala.gov.in
www.kescpcr.kerala.gov.in

**சைல்டு ஹெல்ப் லைன்-1098, கிரைம் ஸ்டோப்பர்-1090, நிர்பயா-1800 425 1400**
**கேரள போலீஸ் ஹெல்ப் லைன் - 0471-324300/44000/45000**

*Online **R. T. E Monitoring : www.nireekshana.org.in***